கலைமன்றம்

ஆசிரியர்: பால்வண்ணன்



MPS

கலைமன்றம்

ஆசிரியர்: பால்வண்ணன்

7-AUG 1956

இதனுள்



கார்ட்டூன்	
நடமாடும் வைத்திய நிலையங்கள் (தலையங்கம்)	3
முகப்புச் சித்திரம்	5
ஆதிக்க அலை	6
சுவாமி விபுலானந்தர் கையறு நிலை	8
பாசம்	11
பர்மிய கலாச்சாரத்தில் ஒரு கண்ணோட்டம்	19
அரைடிக்கட்	33
வசந்தத்தில் காஷ்மீரம்	40
இளநீர் குளம்	44
இன்பக் கண்ணீர்	52
காதல் உள்ளம்	56
அக்கினிக் கோபம்	65
முகில்	73
திரை அரங்கம்	77
உலக அரங்கம்	78
கழகச் செய்திகள்	79
கேளுங்கள்	80

மலர் 2 — ஏப்ரல் 16 — இதழ் 16

கதை, கவிதை, நாடகம், கற்பனை.

திராவிடர் முற்போக்கு வார இதழ்

காங்கிரஸ் ஆட்சியில்
விவசாயிகள் சுமந்த
பரிசுகள் !
நிலப் பறிமுதல்
துப்பாக்கிப் பிரயோகம்
நிலம்
வறுமை சாக்காடு
திவகா

கலை மன்றம்

ஆசிரியர்: பால்வண்ணன்

சென்னை | 10—4—55 | சனி

நடமாடும் வைத்திய நிலையங்கள்

கிராமங்களில் வாழும் ஏழை எளியவர்களுக்கு உதவிச்செய்ய வேண்டும் என்னும் நல்ல நோக்கத்தோடு சென்னை அரசாங்கம் மோட்டார்மூலம் வைத்திய உதவியைச்செய்ய முற்பட்டிருக்கிறது.

இந்த நல்ல காரியத்தை மக்கள் பாராட்டினர். கிராமப்புறங்களில் வாழ்ந்தவர்கள் இலவச வைத்திய உதவியை நாடி வருகின்றனர். இந்த நல்ல பயனுள்ள காரியத்தை மக்கள் பயன்படுத்திக்கொள்ளும் நேரத்தில், நமக்குச் சில புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன.

இந்த நடமாடும் வைத்தியச சாலையை நடத்துபவர்கள் மோசமாக நடந்துகொள்கின்றனர். இந்தச் செய்திகள் நமக்குப் பலமுறை வந்திருக்கின்றன.

நோயாளிகள் மிகவும் ஆவலுடன் மருத்துவச் சிகிச்சைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நேரத்தில் அதிகாரிகள் சிப்பந்திகள் உள்பட வண்டியைவிட்டு இறங்கி அந்த ஊர்ப்புற அழகை முதலில் ரசிக்கிறார்களாம். அதன் பிறகு கேலிப்பேச்சுக்களும், கிண்டல் வார்த்தைகளும் பேசிகொள்கிறார்களாம். அதன்பிறகுகூட நோயாளிகளைச் சரியாகவும், அக்கரையாகவும் கவனிப்பதில்லை என்றும் புகார் கூறுகின்றார்கள். ஏழை மக்களை—நோயாளிகளை நன்கு சோதனை நடத்தி மருந்து தா

வேண்டியதுதான் டாக்டரின் வேலையாகும். அதைவிட்டுவிட்டு நோயாளியைப் பார்த்து 'உனக்கென்ன உடம்பு'? என்று அலட்சியமாக கேட்டுக்கொண்டே ஒரு மருந்தை எழுதிக்கொடுத்து விடுவதுடன் தங்கள் வேலை முடிந்துவிட்டதாகக் கருதுகின்றார்கள். 'மருந்தை எப்படி சாப்பிடவேண்டும்? பத்தியம் என்ன'? என்று கேட்டால் அவர்கள் மீது சீறிப்பாய்கின்றார்களாம். இந்த மோசமான முறைகளைச் கையாளும் டாக்டர்களை-மருத்துவமனைச் சிப்பந்திகளை சர்க்கார் எச்சரிக்கவேண்டும்.

பணத்தைப் பாழாக்கி நல்லதொரு பயனுள்ள திட்டத்தைக் கொண்டுவந்திருக்கும் சென்னை அரசாங்கம் முரட்டு டாக்டர்களையும்—சம்பளத்திற்காக உழைப்பவர்களையும் நீக்கிவிட்டு, பொறுப்புணர்ச்சியும் பொதுநலசேவையில் நாட்டம்கொண்ட நல்லவர்களை நியமிக்கவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறோம்.

ஏழை எளியவர்களிடம் அன்புகாட்டும் நற்பண்பு நமது நாட்டு டாக்டர்களுக்கு இருக்கவேண்டும் என்ற உண்மை எல்லோருக்கும் தெரியும். இருந்தும் ஒருசில முரட்டுத்தனமான—இரக்கமில்லாதவர்களால் நல்வர்களுடைய பெயர் கெடுகிறது. ஆகவே இந்தக் கொடிய மனம் படைத்தவர்களை நீக்கிவிட்டு நல்லவர்களையும் நியமிக்கவேண்டும் என்று ஆட்சியாளரை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்.

நல்ல முயற்சி நல்லபடியாக பயனளிக்கவேண்டும்; என்ற .நல்ல எண்ணத்தால் நேரில் கண்டவைகளையும்—வந்த புகார்களையும் ஆதாரமாக வைத்து இதனைத் தீட்டுகிறோம், இனியாகிலும் திருந்தட்டும் என்று!

லைலா - மஜ்னு

ஊடுநவி

லைலா மஜ்னு. இதுவும்உலகு புகழ் காதல் கதையே-அரேபியநாட்டில் நடந்த இந்தக் கதையினை தமிழகத்தில் அதன் இயல்பும் கலையும் குறையாமல் கன்னித் தமிழிலே தருகிறார் ஊடுருவி அவர்கள். இது வசன நடையில் இயற்றப் பெற்ற காவியம் வர்ணனைகள், உரையாடல்கள் மிக உயர்ந்த முறையில் எழுதிஇருக்கிறார் ஆசிரியர்.

விலை ரூ. 1—0—0

தனிப்பிரதிக்கு ரூ. 1 M. O. செய்யவும்

கலைமன்றம், சென்னை-1

முகப்புச் சித்திர வரலாறு

திருத்தணி வீரர்

★ ரஷீத் ★

திருத்தணிக்குச் செல்லும் பக்தர்கள முன் முருகன் காட்சியளிப்பதுபோல் திருத்தணிக்குச் செல்லும் தி. மு. க. தோழர்கள் தலைவர்கள் முதலியவர்கள் முன் சிரித்த முகத்துடனும், அன்பு கனிந்த உள்ளத்துடனும் நண்பர் ரஷீத் காட்சியளிப்பார். இயக்க வேலைகள் செய்வதில் அவருக்கு இருக்கும் ஆர்வம் எழுதிமுடியாது. திருத்தணி வட்டாரத்திலிருந்து சித்தூர் வரையில் ஓடி ஓடி இயக்கப்பணி புரியும் நண்பர் ரஷீத் 1927-ஆம் ஆண்டு பிறந்தார். அவர் ஓர் முஸ்லீமாகத்தான் பிறந்தார். ஆனால் இந்து மதக் கொடுமைகளிலிருந்து விலகி அறிவியக்கத்தின் நாடியாக விளங்குகிறார். இவர் 1944-ஆம் ஆண்டு முதல் பொதுப் பணியில் ஈடுபட்டார். 1946-ல் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றினார். சிறந்த—உண்மையான உழைப்பாளர். இவருக்கு மூன்று உடன்பிறந்த சகோதரர்கள் உண்டு. அவர்களை, சலாம், ரகீம், மாலிக் என்று அழைப்பார்கள். இவர்களும் இயக்கப் பணியில் ஈடுபாடுடையவர்கள்.

சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற வடவர் ஆதிக்கப் போரில் ஈடுபட்டு வேலை செய்தார். அதனால் 15 நாட்கள்வரை திருப்பதி சிறையில் அடைபட்டுக் கிடந்தார்.

நேரு நம்மை "நான்சென்ஸ்" என்று கூறியது நண்பர் ரஷீத் நடத்திய ரயில் நிறுத்தப் போராட்டத்தில்தான் என்பது குறிப்பிடத்தகுந்த விஷயமாகும்.

மேலும் 1953 ஜூலையில் நடைபெற்ற போராட்டத்தில் முக்கிய பங்குகொண்டார். மேலும் திருத்தணியில் இயக்க வாடையை எழுப்பிய இணையற்றவர். பலக் கூட்டங்கள் மூலமும், பல விவாத மேடைகளிலும் கலந்துகொண்டு திருத்தணியிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தி. மு. கழகக் கொள்கையைப் பரப்பி வந்தார்—வருகிறார் வருவார்.

அண்மையில் நடைபெற்ற சித்தூர் மாவட்ட மாநாட்டின் போது அவருடைய பேருழைப்பு மிகமிக பாராட்டுதற் குரியதாகும்.

நல்ல உள்ளம் படைத்தவர்—ஆடம்பர வாழ்வை வெறுத்தவர்—துன்பத்தையும்— மாற்றார் தரும் தொல்லைகளையும் தாங்கிக் கொள்ளும் தூய மனம் படைத்தவர். தனக்கென வாழாமல் பிறருக்காக—இயக்கத்திற்காக வாழ்ந்து வரும் உண்மையான ஒருவர் ரஷீத். அந்த நல்ல மனிதர் உருவம் தாங்கிய வண்ணம் வெளிவருகிறது இவ்வாரக் கலைமன்றம்.

சென்ற வாரத் தொடர்ச்சி—

ஆதிக்க அலை

— துரை அரசன் —

ஆனால் இந்தியாவுக்கு வந்ததன் பின் தான் அந்தமுறை காட்டுமிராண்டித்தனமான முறையென்று அறிந்து, பிறகு தமிழர் நாகரீகத்திற்கேற்ப மாற்றி, தனது முத்திரையை பொறித்துக் கொண்டது. சாணக்கியனின் அர்த்த சாஸ்திரத்தில் இது ஆரியர்களின் பழங்கால வழக்கங்களில் ஒன்றாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது!"

இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, பதினாறும் நூற்றாண்டுவரை உயர்ந்திருந்த தமிழ் நாகரீகத்தை முகம்மதியர்கள் வரவேற்றார்கள். அதற்கு வாழ்த்துப்பா பாடினார்கள். ஆனால் திருடவில்லை! 'பாலாவியோபாங்கு நிறைப் பூஞ்சோலைத் தென்றலோ' என்றெல்லாம் பாராட்டப் பெற்ற தமிழர்கள் செய்த மெல்லிய உடையைத் தவிர, ஔரங்கசீப்பின் மகள் வேறொன்றையும் உடுத்தியறியாளாம்! தென்பாண்டிக் கடல் முத்து, கிளியோபாத்ராவை மட்டும் அலங்கரிக்கவில்லை! தென்றல் மேனியாள், தேன் மொழியாள் மும்தாஜ் மஹாலின் மார்பிலும் புரண்டு கொண்டிருந்தது! அதே போல் முகம்மதியர்களின் நாகரீகத்தையும், கலாச்சாரத்தையும் தமிழர்கள் வரவேற்றார்கள். ஆனால் காலம்—அந்தக் காலத்தோடு காலமாக வளர்ந்து விட்ட கயவர்கள் கூட்டம் இந்த இரண்டுகலைகளையும் கல்லறைக்கு அனுப்பிவிட்டது. கோபுரத்தின் உச்சியிலே நின்றிருந்த முகம்மதியக்கலை குப்பை மேட்டிலே! மணி மகுடத்தில் இடம்பெற்றிருந்த தமிழர் கலை மண்மேட்டிலே!

இரண்டுமே அழிந்தன—அழிக்கப்பட்டு விட்டன! பரிதாபத்துக்குரிய நிகழ்ச்சிகள் இந்த உலகத்தில் எவை என்று கேட்டால், இந்த இரண்டைத் தான் சொல்ல வேண்டும்! இமயத்தை வென்று அதிலே புலிக்கொடி நாட்டிய தமிழர் இனம் இன்று இருக்குமிடம் தெரியாமல் சரிந்து போனதையும், கிழக்கத்திய நாடுகளின் தலைமையாக இருந்த முகம்மதியப் பரம்பரை சாயந்து விட்டதையும் தான் உலகத்தின் பரிதாபத்துக்குரிய நிகழ்ச்சிகள் என்று சொல்ல வேண்டும்! தமிழ் மன்னர்கள் காலத்தில் இங்கே பொன்னும், பொருளும், போகம் பலவும் நிறைந்து கிடந்தன! அதே போல் தான் முகலாயர்களின் சாம்ராஜ்யத்திலும்! ஆனால் இன்று அந்த சாம்ராஜ்யங்கள் எங்கே? சக்ராதிபதிகள் எங்கே? வீரத்தின் பிறப்பிடமாம் தமிழர் பட்டாளமும், விவேகத்தின் இருப்பிடமாம் அக்பரின் பரம்பரையும் எங்கே? கேள்விகள் கேட்கிறோம்-பதிலில்லை! இஸ்லாமி

யம்—பௌத்தம்—இந்து ஆகிய மதங்களில் உள்ள நல்ல கொள்கைகளையெல்லாம் ஒன்ருக்கி, 'தின் இலாஹி' என்ற புதிய தொரு மதத்தைக் காண முயன்ருராம் அக்பர். ஆம். முகலாயச் சக்கரவர்த்தி தான் முதன்மையான ஒரு சீர்திருத்தவாதியாக விரும்பிஞர். ஆனல் இந்த மதத்தை ஆசியாவின் மார்டின்லூதராம் அக்பர் தந்த மதத்தை, அதன் கொள்கைகளை இந்து மதம் ஏற்றுக் கொள்ள வில்லை. எதிர்ப்பு காட்டியது. அந்த எதிர்ப்பு ஔரங்கசீப்பின் காலத்தில் அதிகமானது. அவனுக்குப் பின், மதவெறியே முகமதியர்களின் சாம்ராஜ்யத்தைச் சுற்றித் தீ வைத்து அதை !ஒரு சாம்பல் மேடாக்கி விட்டது.

எந்த இந்து மதம் புனிதமான புத்தமதப் புரவலனும் அசோகனின் மௌரிய சாம்ராஜ்யத்துக்குக் கல்லறை எழுப்பியதோ, எந்த இந்து மதம் ஹர்ஷனுக்கு எதிராகச் சதிசெய்த நலந்தா சர்வகலாசாலைக்குத் தீ வைத்து கொழுத்தி நாசம் புரிந்ததோ, எந்த இந்து மதத்தின்வெறிகம்மிடமிருந்து நல்லவர்களை பறித்துச் சென்று விட்டதோ, அந்த இந்து மதம் தான் வீரத்திலும், விவேகத்திலும், அன்பிலும், அறிவிலும் சிறந்து நின்ற முகலாயர்களின் சக்தியை முறியடித்து விட்டது. ஆம்! முகலாயச் சக்தி இந்தியாவிலிருந்தே விரட்டப் பட்டுவிட்டது.



ஆங்கில நாடு மறக்கமுடியாத அரசியல் அறிஞர், இங்கிலாந்தின் இணையற்ற பிரதமர் 'சர்ச்சில்'துரை அவர்கள் தம் முதுமையின் காரணமாக பிரதமர் பதவியிலிருந்து விலகுகிறர். அவர் வகித்து வந்த இடத்தை திரு. ஈடன் அவர்கள் வகிக்கிறர்.

★

சுவாமி விபுலாநந்தர்

1 நற்பனுவல் பலவாய்ந்து தமிழர் சேர்த்த
நறுந்தமிழ இலக்கியத்துள் துருவிச் சென்று
சொற்புணர்ச்சிக் கிடைபெய்து இனிமை சேர்த்த
சுவைவாய்ந்த தமிழிசையின் உயர்வைப் பண்பைக்
கற்பவரும் மற்றவரும் வியக்கு மாறு
கலைநுண்மை உலகறியச் செய்தோன் எங்கள்
விற்பன்னன் தமிழறிஞன் விபுலா நந்தன்
வினையொடுங்கிச் சாய்ந்திட்டான் நாங்கள் வெம்ப!

2 வெற்பினிலே தமிழ்க்கொடியை பொறித்து அந்நாள்
விறல் விளங்கத் தமிழவையில் தமிழ்க் கூத்து
பொற்புறவே தமிழிசையிற் புனைந்து மக்கள்
புளகமுற இசைபாடி நாட்டி லெங்கும்
கற்புடைய காளையர்கள் அழகு மாதர்
காதலினல் இசைசேர்த்து மகிழ்ந்த எங்கள்
நற்பெருமை பலவற்றை உலகம் போற்ற
நவின்றவனும் தமிழறிஞன் விபுலா நந்தன்!

3 தமிழர்க்கு இசையுண்டு நூல்க ளுண்டு
தலைசிறந்த இசைக்கருவி பலவு முண்டு
குமையாத குழலுண்டு இசையெ ழுப்பக்
கோணுத யாழென்னும் கருவி யுண்டு
அமையாத பண்ணுண்டோ தமிழர் நூலில்
அறியாத நுணுக்கங்கள் உண்டோ? என்றே
சுமையொத்த தமிழ்எதிரிக் கூட்டம் பார்த்துச்
சுறுக்கென்று கேட்டவனும் விபுலா நந்தன்!

கையறு நிலை

4 அன்புநெறி ஒழுகியவன் தமிழருடே
அழகு‘‘மயில் வாகனனாய்ப்’’ பிறந்து மக்கள்
வன்புநெறி ஒழுகுவதைத் தடுத்து இன்ப
வழியொழுக நெறிகாட்டித் தமிழர் கண்ட
இன்பநெறி இலக்கியத்தாற் சுட்டிக்காட்ட
இயற்றமிழன் ஒருவனுள்ளான் என்றி ருந்தோம்!
துன்பத்தில் நம்மையெலாம் ஆழ்த்தி ஆழ்ந்த
தூக்கத்தில் வீழ்ந்திட்டான் அன்னோன் இந்நாள்!

5 எம்பெருமை தனைமறைத்து இழித்துக் கூறி
இனவெழுச்சி முளைக்காமல் ‘சூழ்ச்சி’ என்னு
அம்புகளைத் தமிழினத்து அரிகள் மீது
அழிப்பதற்கு எறிந்தவர்கள் அயர்ந்து நெஞ்ச
வெம்பிடவே தமிழ்முரசு முழக்கி நின்றோன்
வேலியெனத் தமிழ்ப்பயிரைக் காத்தோன் எங்கள்
செம்பியனும் தமிழ்வேந்தன் விபுலா நந்தன்
செயலிழந்து சாய்ந்திட்டான் தமிழர் வெம்ப!

6 ஈழத்தில் வாழ்ந்தவனும் தமிழ் மக்கள்
ஈகையினை வெகுவாக எடுத்துக் காட்டி
வாழைத்தார் ஈந்ததுபோல் நூலைத் தந்தோன்
வடமொழியில் ஆங்கிலத்திற் புலமை மிக்கோன்
வாழாது தலைநிமிர்ந்து இசையைப் பற்றித்
தலைநூலை தந்தோனும் தனக்கு என்று
வாழாத செந்தமிழன் விபுலா நந்தன்
வாழ்க்கையிலே மறைந்தானே தமிழர் வெம்ப!

[இறையனார்]

இளம் எழுத்தாளர்கட்கு ஓர் அரிய வாய்ப்பு !

மேதினச் சிறுகதைப் போட்டி

100-ரூபாய் பரிசு

முதற் பரிசு: ரூ. 75 — இரண்டாம் பரிசு: ரூ. 25

ாகள்:

'பாட்டியில் 18-வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் கலந்து ாலாம்.

த் தாளின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும்.

ும்' இதழில் 8-பக்கங்களுக்குக் குறையாமலும், 16-பக்கங்களுக்கு லும் எழுதியனுப்ப வேண்டும். (அதாவது, புல்ஸ்கேப் பேப்பரில் களுக்குக் குறையாமலும், 18–பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதினல் ு.

ினல், அடிக்காமல், இலக்கணப் பிழையின்றி அனுப்பப்படும் கதை சீலனைக்கு எற்கப்படும்.

முழுக்க முழுக்கப் புதுமை இருக்க வேண்டும். விபசாரம், ஆபாசங் ன்ற புளித்துப் போன பழைய பாதைகளையே திருத்தி யமைத்து எழுது ாது. சமூக சீர்திருத்தக் கதையாக இருக்க வேண்டும்.

னுப்பப்படும் கதைகள் எந்தப் பத்திரிகைகளிலும் வெளிவராததாக இருத்தல் வேண்டும். மொழி பெயர்ப்பையோ, தழுவலையோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானலும் அனுப்பலாம். அனுப்பப்படும் கதைகள் திருப்பியனுப்பப்பட மாட்டாது. தங்களிடமும் ஒரு நகலை வைத்துக் கொள்வது அவசியமாகும். இதற்கான கடிதப் போக்குவரத்துக் கூடாது.

கதையின் தலைப்பிற்கு மேல், 'போட்டிச் சிறுகதை' என்று குறித்து, அதன் கீழ் முகவரி விளக்கமாக எழுதி, 15—4—'55 தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். அதற்குமேல் வரப்படும் கதைகள் கவனிக்கப்பட மாட்டாது.

ஒவ்வொரு கதையினூடே எழுத்தாளர்கள், தங்களின் சொந்தக் கற்பனையென்றும் எதிலும் கையாண்டது கிடையாதென்றும் உறுதிப் பத்திரம் எழுதியனுப்புதல் முக்கியம். அல்லாதவைகள் ஒதுக்கப்படும்.

ஐவர் கூடிய குழுவின் தீர்ப்பே முடிவானது. ஐவரின் பெயர்களையும், போட்டி முடிவு நாளன்று தெரிவிக்கப்படும். முடிவு நாள் 1—5—55. பரிசு பெருத கதைகளுள், ஓரளவு நல்லகதைகளாக இருந்தால், கலைமன்றத்தில் பிரசுரிக்க ஏற்றுக் கொள்ளப்படும்.

சிறு கதைப் போட்டி ஆசிரியர் :

கலைமன்றம்

த. பெ. எண். 275 — சென்னை-1.



...ாசம்

...லம் : தாகூர்
...மிழ் : ஆ.நா. பொன்னிறையவன்

1

சசிகலா தன் அறையில் அமைதியின்றி அங்குமிங்கும் ...லேந்தாள். தன் பெட்டியில் வைக்... பட்டிருந்த ஒரு போட்டோ... வ.யும், சில கடிதங்களையும் ...டுத்து வந்து அவைகளை ப...ார்த்தபடியே இருந்தாள். அவள் ...ண்கள்தான் அக்கடிதத்தின் மீது ...ருந்தனவே ஒழிய அவள் மன...மெல்லாம் வெகு தூர[illegible]கு அப்...ல் அஸ்ஸாம்[illegible]லைத தோட்...த்தையும், அத் தோட்டத்திற்கு ...ழைக்கச் சென்ற தன் கணவன் ...யபாலையுமே சுற்றி வந்தது. ... கழிவதே அவளுக்குப் ...பாடாக விருந்தது.

சசியின் தகப்பனார் பணக்காரர். ஆகவே ஜெயபாலுக்குத் தன் எதிர்கால வாழ்வுக்காக என்று ஒரு வேலை தேடி ஜீவனம் செய்யவேண்டும் என்ற நிலை ஏற்படவில்லை. சசி—ஜெயபால் தம்பதிகளுக்குக் கொடுத்துதவ சசியின் தகப்பனாரிடம் நிறைய பொருள் இருந்தது. அவர்கள் வாழ்க்கையும் யாதொரு சலனமுமின்றி அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது.

சசியின் தகப்பனாருக்கு முதி... வயதில் ஓர் ஆண் குழந்தை பிற...தது. அவள் பெற்றோர்க்குப் பை...னிடம் அளவிட முடியா அன்பு. மட்டற்ற மகிழ்ச்சி. அவர்கள்...

அவனை ஒரு சீமான் வீட்டுக் குழந்தையென வளர்த்தனர்.

ஜெயபால் இனியும் தன் ஆடம்பர வாழ்க்கைக்குச் சசியின் பெற்றோரிடமிருந்து பணம்வாங்க எதிர்பார்ப்பது ஏமாளித்தனம் என உணர்ந்தான். அஸ்ஸாம் மாகாணத்தில் ஒரு தேயிலைத் தோட்டத்தில் வேலை காலியிருப்பது அறிந்தான். சிறிது காலத்தில் உயர் பதவிகளுக்கு உயர முடியும் என்ற நம்பிக்கையுடன் அருமை சசியையும், அன்புக் குழந்தைகள் மூன்றையும் அவள் தகப்பனார் வீட்டிற்கு அனுப்பி விட்டுத் தேயிலைத் தோட்டத்திற்குச் செல்லலானான்.

அந்த அன்புத் தம்பதிகள் வாழ்க்கையிலே பிரிவு என்பது இதுதான் முதல் தடவை. இது நாள் வரை சசியை விட்டுச் சிறிதும் பிரிந்ததில்லை அவன். அன்றிரவு கணவனைப் பிரிந்த வேதனை தாங்காமல் தவித்தாள் அத் தளிர் மேனியாள். கணவன் படத்தை எடுத்துத் தன் மார்போடு அணைத்து இறுகத் தழுவிக் கொண்டாள். நித்திரா தேவியை அணைத்துக் கொள்ள வேண்டிய அவள் இமைகள் அஸ்ஸாம் தேயிலைத் தோட்டங்களையும், அங்கே தன் கணவன் அவதியுறுவதையும் படம் பிடிக்கத் தொடங்கின.

சிந்தனைக் கோழி தன் எண்ணக் குஞ்சுகளுடன் பழைய சம்பவங்கள் எனும் குப்பை மேட்டில் மேயத் தொடங்கியது. பழைய சம்பவங்கள்—தன் தாய் தந்தையர் தன்னிடமும் கணவரிடமும் காட்டிய அன்பு, உபசரிப்பு—இன்று முதுமை வயதில் ஒரு ஆண் குழந்தை பிறந்த பிறகு ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள்—அவள் கண்

முன் பளிச்சிட்டன. சிர்
திக்க அவள் மனம் வே
துடித்தது. தன் கணவ
விட்டுத் தொழில் தேடி
பிரதேசம் செல்ல
அகாலத்தில் அவள் பெ
குப் பிறந்த குழந்தைய
என அவள் கருகிய உ
றுன கணக்குப் போடத்
கியது. மேலும் மேலு
எண்ணமே அவன் மன
வளர்ந்தது. அதன்
தன் தமையன் ப
வெறுப்பு உணர்ச்
அது வெறுப்பு
அல்லது பொறு
கணவனைப் பிரிந்
பிரதிபலிப்பா? எ
ளால் நிச்சயிக்கக்
வில்லை.

வேதனை அதிகமாக
கணவனிடம் பரிவும்,
மும் பெருகியன. இனி
வன் திரும்பிய பிறகு அவ
ணப்படி நடக்க வேண்டும், அ
கட்டளையை—அது நல்லதோ
கெட்டதோ, சரியானதோ தவற
னதோ—எப்படியிருப்பினும் பதில
பேசாமல் அவனுக்குக் கீழ்
படிந்து நடக்க வேண்டும்—இ
அவன் தான் தனக்கு தாய் தந்
யர் எல்லாம் என்று கருதினா
இந்த பதினாறு வருடங்களி
காணப்படாத ஒரு புதுதன்மை-
புத்துணர்ச்சி அவளிடம் தோ
றியது. அவள் உள்ளத்திலே கா
லின் ரேகை படர்ந்தது. கா
லெனும் அந்த அன்பின் தன்ம
யை இன்று தான் அவள் உண
தாள்.

சசியின் தாயார் சிறிது
திற்குள் இறந்து விட்டாள்.

குமாரனைப்
றுப்பைச் சசி

ன் குறுகிய
காரியின் உள்
ளயாட்டுகளா
ம் கவர்ந்து
காண்டிருந்த
றுப்பாக மாறி
அவன், தன்
றுப்பப்படி ஆட்
சர்வாதிகாரியா
வனுடைய துஷ்டத்
விளையாட்டுகளாலும்,
ற்களாலும் அவனுக்
கட்டுப்பட்ட அடிமைபோ
றள். அவனை விளையாட விட்டு
டிக்கை செய்வதிலேயும்,
தாரு குறையுமின்றி பாதுகாப்
பதிலேயும் ஓர் அலாதி இன்பம்
கண்டாள். தன் குழந்தைகளைக்
காட்டிலும் தாயில்லாத தன் தம்பி
யைக்கருத்துடன் கவனிக்கலானாள்.

எதை வாங்குவான்?

"ஒரு ரூபாய் வைத்திருக்கிறான் ஒருவன்; அவனுக்குப் பசி கடுமையாக இருக்கிறது; அவன் தனது பசி நீங்க அந்த ஒரு ரூபாயைக் கொண்டு உணவுப் பண்டம் வாங்குவானா, அல்லது 'வீட்டிலே கொளுத்தி வைத்தால் 'கம்'மென்று மணக்கும், என்று கருதி ஊதுவத்தி வாங்குவானா? 'ஊதுவத்தி வாங்குவேன்,' என்கிறார் சுப்பிரமணியம் — தனது வரவு—செலவுத் திட்டச் சொற்பொழிவின் மூலம்! மனிதனே, சோறின்றிச் சாகும்போது, 'அந்த மனிதனுக்கு மருந்தும், கல்வியும் தருகிறேன்,' என்றி கூறிக்கொண்டிருக்கிறார் சுப்பிரமணியம்!

—ஈ. வி. கே. சம்பத்

2

சிறுவனுக்கு நீலமணி என்று பெயரிட்டனர். அவனுக்கு இரண்டு வயதாக இருக்கும் போது சசியின் தந்தைக்கு உடல் நிலை மிகவும் பாதித்தது. ஜெயபாலைப் புறப்பட்டு வரும்படி கடிதம் புறப்பட்டது. ஜெயபால் விடுமுறை பெற்று ருவதற்கும் அவன் மாமனாரின் மக் காலம் நெருங்குவதற்கும் ருந்தது.

னார். இறக்குமுன்
மகளிடமும் நீல
காக்கும் பொறுப்
சார். தன் சொத்
த்தை தன் மக
வத்தார்.
வேலையை ராஜி
ட்டு வீடு திரும்பி

சசியின் பங்குக்குச் சேர்ந்த சொத்துக்களை கவனிக்கத் தொடங்கினான். மேலும் சிறுவன் நீலமணி பெரியவன் ஆகும் வரையிலும் அவன் சொத்துக்களைக்கண்காணிப்பதும் இவர்கள் பொறுப்புதானே?

சசி தன் தம்பியிடம் காட்டும் அன்பில் தன் கணவனும் பங்கு கொள்ளும்படி செய்ய முயன்றாள். அவள் கண்டது ஏமாற்றம்தான். தன் கையில் நீலமணியை ஏந்திய வண்ணம் புன் சிரிப்புத் தவழும் முகத்துடன் தன் கணவனிடம் சென்று தம்பியிடம் அநுதாபம் ஏற்படும்படி செய்ய முயலுவாள். அவள் விளையாட்டுகளாலும் துடுக்குத் தனத்தாலும் தன் கணவனின் மனம் மாறும் என எண்ணினாள் அந்த ஏந்திழையாள். அவள் கணவனோ இதையெல்லாம் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை.

நீலமணியைப் பற்றிய சிந்தனையோ, கவலையோ இஞ்சித்தும் அவனிடம் காணப்படவில்லை. சசி தன் கணவனுக்கு நீலமணியிடம் பரிவு ஏற்படவில்லை என்பதை நன்கு உணர்ந்து கொண்டாள். அன்று முதல் அன்பும் பரிவும் இல்லாத தன் கணவனின் பார்வையிலிருந்து மறைத்து அவனை பாதுகாக்கத் தொடங்கினாள். நீலமணி அவளுடைய மறக்க முடியாத புதையலாக மாறிவிட்டான்.

குழந்தை நீலமணி அழும் போது ஜெயபால் மிக சங்கடம் அடைவான். சசி சீக்கிரத்தில் தன் மார்போடு அவனை அணைத்துக் கொண்டு அவனை முத்தமிட்டும் கொஞ்சியும் சாந்தப் படுத்துவாள். நீலமணியின் அழுகுரல் கேட்டு நித்திரைகலைந்து தன் கணவன் வெறுப்புடன் கோபமாக கூக்குரலிடும் போது அவள் ஏதோ மன்னிக்க முடியாத குற்றம் செய்தவள்போல் காடி யொடுங்கி நடுங்கிப் போவாள். அவளை மன்னிக்கும்படி மிக தாழ்மையுடன் வேண்டிக் கொள்வாள்.

ஜெயபால் வெறுப்பு எனும் வெப்ப நோயை வீசி யெறியும் போது சசி, தன் அன்பெனும் குளிர் தென்றலால் அவ்வெம்மை நீலமணியைத் தாக்காது கவனித்து வந்தாள். நாளடைவில் சசி தன் அன்பெனும் அமிர்தத்தால் அவனைக் குளிப்பாட்டத் தொடங்கினாள். மறைவாக அவர்கள் இருவர் உள்ளத்திலும் குமுறிக் கொண்டிருந்த வேற்றுமை மிக பயங்கர உருவம் எடுக்கத் தொடங்கியது. இருவர் உள்ளங்களும் வெவ்வேறு துருவத்தை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தன.

நீலமணி
பாதுகாப்பா
பல இன்னல்
ஆறுவது
தான். கார்
நாள் சசி
தின விழ
அவனை அ
டிருந்தாள்.
வந்த தாரா, "
உன் கணவனு
சொத்தை விற்று
தாகக் கேள்விப்
வும் உனது கண் சா
மகன் நரேனின் முயற்சிப்படி
காரியம் நடப்பதாகத் தெரிகி
இது உண்மையா? நீயே இப்
செய்யலாமா?" என்று வினவி

சசி இதைக் கேட்டதும் திகை
படைந்து போய்விட்டாள். சிறி
நேரம் பொறுத்து இப்படிப்பட்
பொய் வதந்திகளைக் கூறியவர்களை
சபிக்கத் தொடங்கினாள். தன் கண
வன் வந்ததும் இந்த வதந்தியை
பற்றிக் கூறினாள். அவன் அது மி
அவசியம் எனத் தோன்றவேதான்
அவ்வாறு செய்ய எண்ணியுள்ளத
கவும், நரேனிடம் தனக்கு முழு
நம்பிக்கை உண்டு என்றும் பதி
கூறிவிட்டு வெளியே சென்று விட
டான். சசி மேலும் திகைப்படை
தாள்.

தன் தம்பியின்
வாறு காப்பது
யோசித்தாள். ஒ
ளுக்குப் புலப்பட
யாக நாளை அம்மா
அதிகாரியிடம்
றையும் கூறி அவ
நிறைவேறாமல்
என முடிவு செய்

செயலாக அன்று மாலையே நீல மணிக்கு காய்ச்சல் கண்டது. ஜெய பாலிடம் சொல்லி வைத்தியருக்கு ஆள் அனுப்பச் சொன்னாள். ஜெய பால் கிராம வைத்தியர் ஒருவருக்கு ஆள் அனுப்பினன். சசி வெகு நேரம் மன்றாடிய பிறகு நகரத்திலுள்ள நல்ல வைத்தியரை அழைத்து வர ஒப்புக்கொண்டு சென்றான். வெகு நேரம் கழித்து திரும்பி ஜெயபால் வைத்தியர் அவசர கேசு விஷயமாக வெளியே சென்றிருப்பதாகவும் கிராம வைத்தியர் பையனைக் கவனித்துக் கொள்வார் என்றும் சொல்லி விட்டு தான் அவசர விஷயமாக வெளியூர் போக வேண்டியிருப்பதாகக் கூறி சென்றுவிட்டான்.

நீலமணி இரவு முழுவதும் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருந்தான். ஜுரம் அதிகமாகியது. சசியைத் தன் பார்வையிலிருந்து சிறிதும் விடவில்லை. விடிந்ததும் சசி நீலமணியை எடுத்துக் கொண்டு படகில் ஏறி நதியைக் கடந்து வைத்தியர் வீட்டிற்குச் சென்றாள். டாக்டர் சசி தங்குவதற்கு இடவசதி செய்து கொடுத்துவிட்டுப் பையனை பரிசோதித்து மருந்து கொடுத்தார். சசி அங்கேயே தங்கி விட்டாள்.

ஊரிலிருந்து திரும்பிய ஜெயபால் வீட்டில் சசியைக் காணமையால் பணியாட்கள் மூலம் டாக்டரிடம் சென்றிருப்பதை அறிந்தான். உடனே அவள் இருப்பிடம் சென்று வீடு திரும்புமாறு கடிந்து கொண்டான்.

"நீர் என்னைத் துண்டம் துண்டமாக வெட்டிப் போட்டாலும் நான் வீடு திரும்பப் போவதில்லை. தாய் தந்தையற்ற எனது நீலமணியைச் கொன்று விட எண்ணுகிறீர்கள். என்னைத் தவிர வேறு யாரும் அவனைக் காப்பாற்ற முடியாது" என்று உறுதியுடன் கூறினாள் சசி.

வெளி வந்து விட்டது !

ஒரு துளி இரத்தம்

நாடகத் தந்தை வில்லியம் ஷேக்ஸ்பீயரின் அருமையான காவியத்தை இனிக்கும் தமிழிலே எண்ணங்களைப் புரிய வைத்து, பக்கத்திற்குப் பக்கம் பரபரப்பை யூட்டும் அளவிற்கு எழுதி யிருக்கிறார்கள்,

ஊடுருவியும், நிலவொளியும்.

மூவர்ண முகப்பு. விலை ரூ. 2 0—0

கலைமன்றம்

தபால் பெட்டி 275 - சென்னை-1

"அப்படியானல் இங்கேயே இரு. என் வீடு திரும்பாதே"

"என்ன உம்முடைய வீடா அது? அது எனது தம்பியினுடையது"

"அதையும் பார்ப்போம்......" என கூறிக் கொண்டே சென்று விட்டான் ஜெயபால்.

சிறிது நேரம் கழித்து தாரா அவ்விடம் வந்தாள். "சசி, நீ உன் விருப்பம் போல் செய்யலாம். ஆனல் உன் வீட்டை விட்டு வெளியேறி யிருப்பதில் என்ன நன்மை. தவிரவும் அவர் உன் கணவர் தானே?" என்று சமாதானம் கூறினள். ஆனல் சசியின் செவிகளிலே எதுவும் படவில்லை. அவள் லட்சியம் தன் தம்பியைக் காப்பதுதான்.

தன்னிடமுள்ள எல்லா பொருள்களையும் செலவழித்தாள். நகைநட்டு எல்லாவற்றையும் விற்றுவிட்டாள். அவள் முயற்சி வீணுகவில்லை. நீலமணியை யமன் வாயிலிருந்தும் மீட்டு விட்டாள். குழந்தை உடல் நிலை சுமாராகியது. இதற்கிடையே வருடம் சுமார் ரூ. 1500 வருமானமுள்ள தன் தம்பியின் நிலபுலன்களையும் சொத்துக்களையும் ஒரு ஜமீந்தாரின் உதவி கொண்டு ஜெயபால் தன் பெயருக்கு மாற்றிக் கொண்டதை அறிந்தாள். அவள் உள்ளம் பதறியது. இப்போது சொத்து முழுவதும் ஜெயபாலுடையது. நீலமணியினுடையது அல்ல. **பணத்திற்காக மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு குணத்தை விற்பனை செய்யும் மனிதப் பண்பு** அவளுக்குப் புரியவேயில்லை.

உடம்பு குணம் அடைந்ததும் நீலமணி சசியிடம் "அக்கா, நம் வீட்டிற்குப் போகலாம், வா" என்றான். அவனுக்குத் தல... துனன்மாருடன் விளையாடும்... கம். அவன் சிறு குழந்தைதானே! உலகத்தின் சூதுவாது அவனுக்கென்ன தெரியும்? சசி இதைக் கேட்டு கண்ணீர் வடித்தாள். புலம்பினள். அவர்களுக்கு வீடு ஏது இப்போது?

சசி நீலமணியை எடுத்துக் கொண்டு உதவி மாஜிஸ்திரேட் அவர்களிடம் சென்று தன் நிலையைத் தெளிவாக கூறினள். அவருக்கு ஜெயபாலை முன்பே தெரியும். அவர் ஜெயபாலுக்குக் கடிதமெழுதி அவனை அழைத்துப் போகச் செய்தார்.

ஜெயபால் வெறுப்புடன் பலவந்தமாக ஒரு படகில் அவர்களை ஏற்றிக்கொண்டு தன் வீடு வந்தான்.

முதல் தடவை பிரிவு ஏற்பட்டு சந்தித்த காலத்திலே அவர்கள் உள்ளங்களிலே, ஏற்பட்டிருந்த மன ஒற்றுமைக்கும் இப்போதைய சந்திபபிலே அவர்கள் உள்ளங்களிலே குமுறிக் கொண்டிருந்த கொந்தளிப்பிற்கும் எவ்வளவு வித்யாசம்? முதல் பிரிவின் சந்திப்பில் அவள் உள்ளத்திலே காதலின் உத்வேகம்—ஓர் எல்லையற்ற அன்பு உணர்ச்சி!...இப்போது வெறுப்பு. கசந்த மனப்பான்மை. உள்ளக் குமுறல். என்னே! காலதேவனின் விளையாட்டு!!

அம் மாவட்ட அதிகாரி தன் சுற்றுப் பிரயாண நிமித்தம் அக் கிராமத்திற்கு வந்தார். ஒருநாள் நீலமணி தன் நண்பர்களுடன் வீதியில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அவ்வழியே வந்த அவர் சிறுவர்களிடம் அன்புடன், "நீங்கள் எல்லோரும் படிக்கிறீர்

ன்று கேட்டார். மற்ற
பயந்து சிறிது தூரத்
ன்றுவிட்டனர். நீலமணி
'ஆம்' என்பதற்கு அறி
தலையை அசைத்தான்.
'எந்தப் புத்தகம்' என்றார்.
தைப் புரிந்து கொள்ள முடியாத
நீலமணி விழித்தான். "நீங்கள் நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டும். நன்றாகப் படிக்க வேண்டும்' என்று கூறியவாறு அவன் முதுகில் அன்புறத் தட்டிக் கொடுத்துச் சென்றார். நீலமணி இதையெல்லாம் தன் தமக்கையிடம் கூறினான்.

மறுநாள் ஜெயபால் நீண்ட ஒரு சட்டை அணிந்து தான் அக் கிராமத்து பிரமுகர்களில் ஒருவன் என்ற முறையில் அதிகாரியைச சந்தித்து பேசிவிட்டு வரச் சென்றான். அவர்கள் இருவரும் கூடாரத்திற்கு வெளியே நாற்காலிகளில் அமர்ந்த வண்ணம் கிராமத்தைப் பற்றி அளவளாவிக் கொண்டிருந்தார்கள்.

சசி தன் தம்பி நீலமணியை அழைத்துக் கொண்டு அவ்விடம் வந்தாள். அவ்விடத்திலே சசியைக் கண்டதும் ஜெயபாலுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அதை வெளிக்குக் காட்டாமல் மறைத்துக் கொண்டான்.

அதிகாரியை நோக்கிய வண்ணம் சசி, "ஐயா, தங்களின் கைகளில் ஆதரவற்ற என் தம்பியை ஒப்படைக்கிறேன். அவனைக் காப்பாற்றுங்கள். இந்த ஏழையின்மீது கருணை வைத்து இரக்கம் காட்டி இந்த உதவியைச் செய்யுங்கள்" என்று அழுது புலம்பியவாறு இது நாள் வரை நடந்த சோகக் கதையைக் கூறினாள். இடையிடையே ஜெயபால் இடைமறித்து வந்தான்.

அதிகாரி அவனைப் பேச ஒட்டாமல் செய்தார். சசியை நோக்கி வீட்டிற்குச் செல்லுமாறு கூறினார்.

"ஐயா. என் தம்பியின் சொத்துக்கள் அவனைத் திரும்ப அடையும்வரை நான் அவனை வீட்டிற்கு அழைத்துச் செல்வது முடியாத காரியம். தங்களைத் தவிர்த்து யாரும் அவனுக்கு உதவ முடியாது. அவன் சொத்துக்கள் அவனைச் சேரும் வரையிலும் தங்கள் பாதுகாப்பில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சினாள் சசி.

"அப்படியானால் நீ என்ன செய்யப் போகிறாய்?"

"நான் என் கணவர் இல்லம் செல்கிறேன். நீலமணியைத் தங்கள் பாதுகாப்பில் ஒப்படைத்த பிறகு நான் அங்கு செல்ல பயப்படவேண்டியதில்லை" என்று கூறியவாறு நீலமணியை அதிகாரியின் கையில் ஒப்படைத்தாள். அவனைச் சமாதானம் செய்து திரும்ப வெகு நேரம் ஆயிற்று.

"கண்ணே, வெகு சீக்கிரம் நீ உன் சகோதரியை அடைவாய்"

... கூறித் தேற்றியவளாய்த் தன் கணவன் இல்லம் சென்றாள்.

மூன்றாவது பிரிவிற்குப் பின் சந்திப்பு! இதற்கும் இதற்கு முன் இருமுறை ஏற்பட்ட சந்திப்பிற் கும் தான் எவ்வளவு வேற்றுமை! இம்முறை அவர்கள் சந்திப்பு, ஆழ்கடலில் தன் அகன்ற வாயை அகோரப் பசியுடன் திறந்தவாறு ஓடிவரும் சுறுமீனைப் போன்று பயங்கரம் நிறைந்ததாயிருந்தது. என்னே! காலத்தின் — இயற்கை யின்—விளையாட்டு!!

சில நாளைக்குள் கிராமத்தார் ஒரு நாள் இரவு காலரா கண்டு சசி இறந்து விட்டதாக அறிந்தார்கள். அன்று இரவோடு இரவாக தகன மும் செய்யப்பட்டதாம். இது உண்மையா? அல்லது ... என ஒருவரும் அறிய ... வில்லை. தைரியமும் இ... மட்டும் ஓரிரு சமயங் ... வாழ்க்கையின் சோ... பற்றி பிரஸ்தாபம் ... ஆனால் அங்குள்ள மற்றவ... அவள் வாயை அடக்கிவிடுவார்கள்.

சசி தன் தம்பியிடம் வெகு சீக்கிரத்தில் தான் அவனை அழைத் துப் போவதாக கூறியிருந்தாள். ஆனால் இன்று வரை அவள் திரும் பவே யில்லை. அவள் கூறிய வார்த் தைகள் என்னவாயினவோ? என்னே! காலதேவனின் கொடு மையான விளையாட்டு!! அவள் பாசத்திற்கு பலியானாள்.

கட்டுரைப் போட்டியில் இந்தியருக்கு 1000 டாலர் பரிசு

நியூயார்க் ஸிட்டியிலுள்ள கிரவ் பிரஸ் என்ற பிரசுர ஸ்தாபனம் சமீபத் தில் நடத்திய கட்டுரைப் போட்டிக்கு இந்தியாவில் முக்கிய மொழிகள் உட் படப் பலமொழிகளில் 265 கட்டுரைகள் வந்தன.

இரண்டு இந்தியரும் இரண்டு அமெரிக்கரும் அடங்கிய நீதிபதிக்குழு "மானோமஜரா' என்ற புத்தகத்தைத் தெரிந்தெடுத்து இப்புத்தகத்தை ஆங் கிலத்தில் எழுதிய ஸர்தார் குஷ்வந்த் ஸிங் என்பவருக்கு 1000 டாலர் (சுமார் 4750 ரூபாய்) அன்பளிப்பு அளிக்கப்பட்டது. ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனத்தின் டைரக்டர் ஜெனரலான டாக்டர் லூதர் இவான்ஸ் மார்ச்சு 18ந் தேதி அவருக்கு இப்பரிசை வழங்கினார்.

இந்தியாவில் வெகு சீக்கிரத்தில் பிரசரிக்கப் போகும் இப்புத்தகம் பஞ் சாப், ஜெர்மன் ஆகியவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது.

பஞ்சாபில் இந்திய பாகிஸ்தான் எல்லையிலுள்ள ஒரு கிராமத்தின் பெய ரைக் குறிப்பிடும் இப்புத்தகத்தில் இந்திய உபகண்டத்தின் பிரிவினைக் காலத் தில் தம் கிராமத்திலுள்ள முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காக ஒரு சீக்கிய விவசாயி தம் உயிரைத் தியாகம் செய்த கதை விவரிக்கப் பட்டுள்ளது.

இப்புத்தகத்தின் ஆசிரியரான ஸர்தார் குஷ்வந்த் சிங் கனடாவிலும் லண்டனிலும் இந்திய ஸ்தானிகர் அலுவலகத்தில் செய்தி அதிகாரியாக இருந் தவர். புது டில்லியில் அகில இந்திய ரேடியோ ஸ்தாபனத்தின் ஆங்கிலப் பிரி வின் தலைமை அதிகாரியாகவும் இருந்தவர். இவர் இன்று ஐ. நா. கல்வி விஞ் ஞான கலாச்சார ஸ்தாபனத்தின் பொது மக்கள் தொடர்பு இலாகாவில் இந் திய விவகார நிபுணராகப் பணியாற்றுகின்றார்.

லேடி என்றே அழைக்கின்ற இந்த வார்த்தைக்கு வணங்கு ம என்று பொருள்படும். பர்மி ள் மங்கோலிய பரம்பரையைச் ர்ந்தவர்கள். ஆதி இந்தோனே பர்களே இன்றைய பர்மியர்கள் என்றுகூட சொல்லப்படுகிறது. பர் மியர்களின் பாரம்பரியத்தைப் பற் றிய துலக்கமான சரித்திரம் இது வரை யாரும் எழுதியதாகத் தெரிய வில்லை. பர்மிய சரித்திரங்களைப் பற் றிய ஆதாரங்கள் கி. மு. 9-வது நூற்றாண்டிலிருந்துதான் கணிக் கப்படுவதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். கி. மு. 9-வது நூற் றாண்டிலிருந்து கணிக்கப்பட்டா லும் சம்பவங்கள் கோர்வையாக இருக்காது. தெளிவான, துலக்க மான சரித்திரமே கி. பி. இரண் டாவது நூற்றாண்டிலிருந்துதான் ஆரம்பமாகிறது. அச்சமயம் தான் **பாகான் PAGAN** என்ற நகரில் ஸ்திரமான அரசாங்கமொன்று அமைக்கப்பட்டு அதனை மாமன் னன் அனவர்த்தனன் கி. பி. 1034 லிருந்து 1077 வரை அரசோச்சி ஞன். இந்திய சரித்திரத்தில் என் றும் மங்காத ஒளிவிளக்காகப் பிர காசிக்கும் மகா அசோகனைப் போலவே பர்மிய சரிதையில் மாமன்னன் அனவர்த்தனன் அழி யாத இடம் பெற்று விட்டான். ஆம்! சிரஞ்சீவியாக இன்றும் பர் மிய சரிதையில் உலவி வருகிறான்.

"வாழ்க்கைச் சுகங்கள் அதிகமாக, ஆக கலைகள் பூரணத்துவமடைய அடைய, ஆடம்பரம் பெருகப் பெருக உண்மையான வீரம் தேய்ந்து போகி றது. ஒழுக்கங்கள் மறைந்து போகின் றன"—என்கிறான் ரூஸோ. தற் போது பர்மா ரூஸோ சொல்லும் நிலையிலதான் இருக்கிறது. நாகரி

கம் மி மாவில் வீரத் தொகை கொண்டே தான் நாக நல்லவேலை பாவனைகளை ளைப் போல் மாற்றிக் னைக்கும் 6 மாக ஆங்கில பட்டிருந்துங் களை மாற் லிருந்து தங்கள் கைலியின் மீதுள் இதிலிருந்து தெரி லாம். ஆனல் அன் என்றுமே கட்டுப்ப இன்று கிழக்கின் ஹ காட்சியளிக்கிறது. ஆங்கில ஆட் சியிலிருந்த பர்மா தங்கள் தேசி உடையை இன்றளவும் மாற் கொண்டதில்லை. இரண்டையு ஒப்பிட்டுப் பார்க்க வேடிக்கைய இல்லை?

பர்மியர்களுக்குப் பளபளப்பா வர்ண ஆடைகளை அணிவதில் அலாதி ஆனந்தம். ஒரு பர் விழா என்றால் அங்கு வான லையே முறித்துப் போட்ட போல் அத்தனை வர்ணங்களை அங்கு காணலாம். ஆண் பெ அனைவரும் பட்டில் பல வ கைலிகள் உடுத்தி வருவதே கொள்ளாக் காட்சி! பர்மியர் ஆண்கள் எவ்வளவுதான் ச தாலும் தங்கள் தேசிய உ கைலியையும், தலைப்பா கட்ட தவற மாட்டா யர்கள் கட்டும் தலைப்ப யர்கள் தலைப்பா

...து. உதாரணமாக
...இல் காணும் ஊனாவின்
...யைச் சொல்லலாம்.
...ரதிரிதான் ஜனாதிபதி
...ட்டாலிவரை கட்டியிருப்
...ஆங்கில பாணியில் சூட்,
...அணிவது சுதந்திரத்திற்
... மென்மேலும்
...த்திருக்கிறது. ஆங்
...காட்டிலும் தங்கள்
...செல்வத்தையே
...க மதிக்கிறார்
...பவர்களைத்தான்
...ரதியான மரியா
...ம்பர்.
...ளிகத் துறையில்
...றியான நேரத்தைப்
...ம் விளையாட்டுகளில்
...யைச் செலவு செய்யத்
...றுவதில்லை. இதோ இந்த காட்
...யைப் பாருங்கள். அதோ அந்த
...ளிக் கடைக்கார் மவுன் பாசு
...வ இருக்கிறாரே அவ்வருட இன்
...ம் டாக்ஸ் அதிகம் விதித்திருப்ப
...தால் மூளையைக் குழப்பிக் கொண்
...டிருக்கிறார். இதோ கால் பந்து
விளையாட்டு ஸ்தாபனத்தார் அவ

ரை நெருங்கி "சதுர்தேச பந்தாட்டம் ரங்கூனில் நடைபெறப் போகிறது சீசன் டிக்கட் 5 ரூபாய்தான்" என்று சொன்னவுடன் கையிலுள்ள தஸ்தாவேஜுகளை உதறி எறிந்து "கொடும் ஐயா ஐந்து டிக்கட்டுகள். நாங்கள் குடும்ப சகிதம் பார்க்கவேண்டும்" என்று சொல்லி வருமான வரி அதிகம் விதித்ததைக் கூட பொருட்படுத்தாது விளையாட்டு உலகில் மூழ்கி விடுகிறார். இதுதான் 'ஸ்போர்ட்ஸ்' விஷயங்களில் .பர்மியர்களின் சராசரி மனோபாவம்!

கால்பந்து விளையாட்டுப் போக கூடைபந்து விளையாட்டு பர்மியர்களின் பரம்பரை விளையாட்டுகளில் ஒன்று! இந்தக் கூடைபந்து விளையாட்டு மிகமிக ரசமானது! வட்டமாக சுற்றி நின்று கொண்டு கூடைபந்தை காலாலும், முழங்காலாலும், தோள்களாலும் இடித்து விளையாடுவார்கள். ஆனால் தரையில் அல்ல. ஆகாயத்தில்! இந்த விளையாட்டின் விசேஷ மென்னவென்றால் பந்து கீழே விழாதவாறு சுற்றி நிற்பவர்கள் தோளா

இருண்ட வாழ்வு

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

புதுமை மணம் கமழும் கற்பனைக் களஞ்சியமாகிய இருண்ட வாழ்வு, செல்லாத நோட்டு, மதுரை மீனாட்சி, லைலா-மஜ்னு, நல்லதங்காள், சிற்பி ஆகிய கருத்து நிறைந்த கதைகள்.

விலை 12 அணா

13 அணா ஸ்டாம்புகள் அனுப்பிப் பெறுக.

கலைமன்றம், சென்னை-1

லும், முழங்கால்லாலும் எத்திக் கொண்டேயிருக்கவேண்டும். ஆனால் கரங்களால் மட்டும் பந்தை தீண்டக் கூடாது. இது பர்மியர்களின் பூர்வீக விளையாட்டுகளில் ஒன்றாகக் கருதப்படுவதால் நகரத்தைக் காட்டிலும் கிராமாந்திரங்களில் இவ்விளையாட்டிற்கு அதிக மதிப்புண்டு! கிராமிய மககள் வட்டமாக உட்கார்ந்து ரசித்துப் பார்ப்பர் இந்த கூடை பந்து விளையாட்டை!

சரி இனி பௌத்த ஆலயங்களைப் பார்வையிடுவோம். ஆலயத்தினுள் நுழையுமுன்னர் பாதரக்ஷைகளை கழற்றிக் கொள்ள வேண்டும். ஆலயத்தினுள்ள விகாரத்தில் பிரமாண்டமான புத்த உருவம். புத்த சிலைக்கு முன்னர் சதுரமான மேடை! இம்மேடையில்தான் பக்தர்கள் விழுந்து கும்பிடுவார்கள்! தமிழர்களைப் போலவே சூடம் சாம்பிராணி, கொளுத்தி புஷ்பங்களை சாமிக்குச் சூடுவது போலவே பர்மியர்கள் செய்கிறார்கள். ஆலய வாசலுக்கு இரு புறங்களிலும் சில்லரைக் கடை வியாபாரிகள் புஷ்பங்களும், தங்கக் காகிதத்தால் செய்யப்பட்ட சிறு குடைகளும் விற்பார்கள். புத்தருக்குக் குடைகளை பக்தர்கள் வெகு பிரியமாய் வாங்குவார்கள். புத்தருக்குக் குடை பிடித்து மரியாதை செய்யும் மனப்பான்மையில் அந்தக் குடைகளை வாங்கி பௌத்த ஆலயத்திலுள்ள கணக்கற்ற சிறுசிறு புத்தர் சிலைகளின் பக்கத்தில் வைக்க பக்தர்கள் வாங்குவார்கள் பணிவுடன்! பிரமாண்டமான புத்த உருவை வணங்கும் போது மட்டும் மெழுகுவத்தியைக் கொளுத்தி கும்பிடுவர். பக்தி பரவசத்தோடு அதிக நேரம்

பிரார்த்தனை செலு
எண்ணிக்கையில் மிகக்
ஏனென்றால் முழங்
மண்டியிட்டுத்தான் பி
செலுத்துவார்கள். கால்க
யெடுக்கும் முன்னரே
தனையை முடித்துக்
கள் தன்னை மறந்த
இந்த வேதனையைப்
தாது பிரார்த்தனை
கள் ஒரு சிலர்
அவர்கள் பௌ
மார்களைத் தவி
மக்களை இந்த
தரிது.

ஒவ்வொரு
ளின்வாசலிலும் யா
அமைக்கப்பட்டிருக்கும்
ஆலயங்களுக்கு வெளியே
பாலகர்கள் காத்துக் கொண்டிரு
பதுபோல்! இந்த யாளி உருவங்க
ஏன் என்பதற்கு பல கட்டுக் கதை
கள்! ஒரு இந்திய இளவரசி ஒரு
சிங்கத்தை மணந்து கொண்டா
ளாம் (அடி பாவி!) சில வருடங்கள்
கழித்து அந்த சிங்கம் தன் மகனா
லேயே கொல்லப் பட்டதாம்.
கொல்லப்பட்ட சில நாட்களிலே
யே இளவரசன் வியாதியால் தா
குண்டானாம். தன் வியாதி சொ
தமாக தன் அரண்மனை கோவிலி
ஒரு சிங்கச் சிலையைக் செய்துவை
தானாம். பிணி குணமாகியது.
அன்றிலிருந்து யாளிச் சிலைக
எல்லாம் பௌத்த ஆலயங்களி
வெளியேயும் நிர்மாணிக்கும் பழக்
கம் ஏற்பட்டதாம். இந்தச் சிலை
களை (இந்தியர்களைப் போலவே
துவாரபாலகர்கள் என்றே
கின்றனர். இதில் ஒரு வே
என்னவென்றால் பர்மிய
களின் வெளிப்புறத்தில் ய

கள் அமைக்க ஒரு இந்திய இளவரசியின் தகாத தாம்பத்திய உறவு தான் காரணமாயிருக்க வேண்டுமா? இளவரசி சிங்கத்தை மணந்ததால் கழுத்துவரை சிங்சமாகவும் தலை மட்டும் பூத உருவமாகவும் செய்யப்படுகிறது. கட்டுக்கதைகள் போதும்! இனி இந்த ஆலயங்களின் ராஷ்டிரபதி யார் என்று பார்ப்போம்! நாம் முன்னர் குறிப்பிட்ட பொங்கி குருமார்கள் தான் இந்த ஆலயத்தை நிர்வகிப்பவர்கள்! நாம் குறிப்பிடும் இந்த பொங்கி குருமார்கள் பர்மிய சமூகத்தில் பிரதான அங்கம் வகிக்கிறார்கள். ஆனால் சமூகத்தை ஆட்டிப் படைப்பதில்லை. பௌத்த ஆலயங்களின் சமீபமாக பௌத்த மடங்கள் இருக்கும். இந்த மடங்களின் நிர்வாகிகளும் பொங்கி குருமார்கள் தான். அன்றைய மடங்கள் மரகட்டிடமாக யிருந்தது. இன்றைய மடங்கள் பக்கா கட்டிடங்கள். இந்த மடங்களின் உட்புறம் சென்று பார்ப்போம். சமதளத்தின் மேல் ஒரு மேடை கட்டப்பட்டிருக்கும். இந்த மேடையில் அமர்ந்துதான் பொங்கி குருமார்கள் மார்க்கப் பிரசங்கம் புரிவர். ஹாலின் நாலாபுறமும் புத்த சிலைகளால் சூழப்பட்டிருக்கும். சிறு மடங்களில் பொங்கி குருக்கள் மத்திய ஹாலிலே தான் தூங்குவார்கள். ஆனால் பெரிய மடங்களில் தனிப்பட்ட தங்குமிடமும், குளிக்கும் அறையும் இதர வசதிகளும் உண்டு.

தமிழ் நாட்டில் பிரமண குருக்களை "சாமி" என்று பாமரர்கள் அழைப்பது போலவே பர்மாவிலும் இத்தகைய பொங்கி குருமார்களை **"பய்யா"** அதாவது "ஆண்டவரே" என்று அழைக்கின்றனர். பர்மிய சமூகத்தில் ஒரு பழக்கமுண்டு. அதாவது பெற்றோர்கள் தங்கள் **ஆண்** குழந்தைகள் சுமார் 10 வயது அடைந்து விட்டால் இத்தகைய பொங்கி மடங்களில் போய் விட்டு விடுவர். இக்குழந்தைகள் எவ்வளவு பெரிய பணக்கார குடும்பங்களிலிருந்து வந்தாலும் தங்கள் குருக்களுக்கு, அதாவது ஆசான்களுக்கு தங்கள் குருக்களைப் போலவே காவியணிந்து, மொட்டை யடித்து அக்ஷய பாத்திரமேந்தி வீடுவீடாக யாசகம் பெற்றுக் கொண்டு வரவேண்டும். பர்மிய மக்களும் தங்களிடம் யாசகம் கேட்கும் இந்த பொங்கிகளை பிறயாசகர்களை உதாசீனம் செய்வதுபோல் அல்லது நிறைய ஆகாரங்களும், அரிசியும் கொடுத்து மரியாதை செய்வர். பொங்கிமார்களைப் பார்த்து இல்லை என்று கைவிரிப்பதைப் பார்க்க முடியாது. யாசகம் கொடுக்க சாத்யப்படாத நிலையிலுள்ளவர்கள் "பெரியவரே என்னை மன்னியுங்கள்" என்ற தாழ்மையான குரலில் சொல்லிப் போகச் சொல்லுவார்கள். ஏன் பர்மிய சீமான்கள்

வாசகத் தோழர்களுக்கு ஓர் அறிவுப்பு.

பல தோழர்களின் விருப்பப்படி கலைமன்றத்தில் **பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, விஞ்ஞானப் பகுதி, விகடப் பகுதி** இவைகள் விரைவில் ஆரம்பமாகும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்

கூட தங்கள் பிள்ளைகளை இப்படி யாசகம் புரிய விடவேண்டும்? இது அவமானமில்லையா? என்று வாசகர்கள் கேட்கக் கூடும். பர்மியர்களைப் பொறுத்த மட்டில் இது அவமானமில்லை. தத்துவரீதியாக நடக்கும் நித்திய கருமங்களில் ஒன்றாகவே இதனை மதிக்கிறார்கள். கௌதம புத்தர் உலக வாழ்வில் ஈடுபட்டிருந்தாலும் திடீரென்று ஒருநாள் மனைவி மக்களையும் சுற்றத்தையும் உதறித் தள்ளி துறவறம் பூண்டாரல்லவா? அதைப் போன்றே என்னதான் செல்வநிலையிலிருந்தாலும் என்றாவது ஒருநாள் திடீரென்று கௌதமரைப் போல் அலங்காரங்களைக் களைந்தெறிந்து காவி அணிந்து, மொட்டையடித்து சில காலமாவது பௌத்த மடத்தில் கழித்தால்தான் உண்மையான பௌத்தனாகிறான். அதுவரையினும் உண்மையான பௌத்தன் அல்ல என்பதுதான் பர்மிய சித்தாந்தம்! கௌதமரைப்போல் உலக இன்பங்களை மறந்துதுறவிவேடம் தரித்து யாசகமெடுத்து வயிறு வளர்க்க வேண்டும். அப்போதுதான் புத்த மதத்தை உண்மையிலேயே பின்பற்றுவதாக அர்த்தமாகுமாம். பர்மாவில் வசிக்கும் அநேக அன்னியர்களுக்கு இதன் தத்துவம் தெரியாமலேயே இருந்து வருகின்றனர். இதுமாதிரி மடங்களில் தற்காலிகமாக இருந்து வெளியேறலாம். ஆனால் ஒரு சிலர் மீண்டும் தங்கள் இல்லங்களுக்கு வராமல் நிரந்தரமாக இந்த மடங்களில் பிரமச்சாரியாகவே தங்கி விடுகின்றனர். நிரந்தரமாக மடங்களில் தங்கும் பக்ஷத்தில் பெற்றோர்கள் இதில் தலையிட்டு தங்கள் இல்லங்களுக்கு வந்தேகும்படி பலாத்காரம் செய்வதில்லை! எனவே **சீமானுக்குப் பிறந்தாலும்** அக்ஷய பாத்திரமேந்தி தெருத்தெருவாக பிச்சை எடுக்கும் வழக்கத்தை இதர பௌத்த நாடுகளில் பார்க்க முடியாது. முற்கால பழக்கப்படி காசுகூட வாங்கக் கூடாது. வெறும் பொருள்தான் வாங்க வேண்டும். "பணமே நீ இன்றேல் நடைப் பிணமே" என்று அங்கலாய்க்கும் இன்றைய உலகில் காசையும் கூட விடுவதில்லை இன்றைய பொங்கிகள்! இந்த பொங்கி மடங்களில் பயிலுபவர்கள் உண்மையிலேயே பர்மிய இலக்கியத்தில் நிபுணர்களாகவே வெளியேறுகிறார்கள். பர்மிய இலக்கியத்தின் திக்பாலகர்கள் என்று பெயர் பெற்றவர்களே இந்த பொங்கி குருமார்கள்தான். முற்காலத்தில் பர்மிய சரிதத்தை எழுதியவர் கூட இவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது "வெகு சிலரே எழுதிப் படிக்கத் தெரிந்தவர்களாக யிருந்திருக்கிறார்கள். பொங்கி குருமார்களின் மேற்பார்வையில் விடப்பட்ட இந்த மாணவர்களை நிபுணத்துவமடையச் செய்த பெருமை பொங்கி குருமார்களுக்குத்தான்"......என்று குறிப்பிடுகின்றனர். இது எம்மட்டுக்கும் உண்மை என்று தெரியாவிட்டாலும் இதர சாதாரண பள்ளிக்கூடங்களில் மாணவர்களை கண்காணித்து போதிப்பதைக் காட்டிலும் இந்த மடங்களில் பன்மடங்கு கவனம் செலுத்தப் படுகிறது. "பௌத்த மடத்தில் படித்தவன்" என்றால் சாதாரண பள்ளி மாணவர்கள் அவனுடன் மேலும் பேசத் தயங்குவர். காரணம் அவன் பர்மிய இலக்கியத்தின் எல்லைக் கோட்டை மிதித்தவன். சாதாரண

மாணவனே அந்த உலகை (இலக்கிய உலகை) தூரத்திலிருந்தே பார்ப்பவன். இப்பொழுது தெரிகிறதா ஏன் இந்த பொங்கி மடங்களுக்கு இத்தனை மதிப்பென்று!

பர்மிய இலக்கியத்திற்கும் இந்த மடங்களுககும் நிறைய தொடர்புண்டு. எத்தகைய தொடர்பு என்பதைச் சுட்டிக் காட்ட தமிழ் நாட்டைத்தான் இழுக்க வேண்டியிருக்கிறது. முற்காலத் தமிழ் புலவர்கள்.

முற்காலத்து தமிழ் புலவர்களும் பண்டிதர்களும் தாங்கள் தான் தமிழ் இலக்கியத்தின் திக்பாலகர்கள் என்ற மனப்பான்மையில் பிறரை துச்சமாக மதித்த காலமொன்றிருந்தது. ஒரு காவியம் இயற்ற வேண்டுமானல் எதுகை, மோனையுடன், யாப்பு அணியுடன் அமைந்திருக்க வேண்டும். இந்த லக்ஷணங்கள் இல்லாது கருத்துக்கள் மட்டும் அமைந்திருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. இதன் காரணமாக சங்கப் புலவர்கள் உலக மகாகவிகளில் ஒருவரான வள்ளுவரின் திருக்குறளைக் கூட முதலில் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர் என்பதையும் நாம் இன்னும் மறந்துவிடவில்லை. இதே நிலைதான் பர்மாவிலும் ஒரு காலத்திலும் இருந்தது. பர்மிய இலக்கியத்தின் மீது ஆதிக்கம் வகித்து தாங்களே பர்மிய இலக்கியத்தின் திக்பாலகர்கள் என்ற நினைப்பில் சின்னஞ் சிறு புலவர்களை அவமதித்து வந்தனர். இதன் காரணமாக பர்மிய இலக்கியம் மறுமலர்ச்சியடைய மார்க்கமில்லாமலும் வெளியுலகிற்கு அதிகம் பரவாமலும் போய்விட்டது. பர்மிய இலக்கியங்கள் பிற பாஷைகளில் அதிகம் மொழி பெயர்க்கப்படாததற்கு இதுவே மூலகாரணமெனலாம். பர்மிய இலக்கியங்களையும், நவீனங்களையும் படிக்க யோக்கிய தாம்சமுள்ளவர்கள் பௌத்த ஆசிரம வாசிகளே யன்றி பொது மக்களல்ல என்ற மனப்பான்மையாலும் வெளியுலகிற்குப் பரவவில்லை பர்மிய இலக்கியம்!

முள்

சமுதாயத்தைக் குத்தும் முள்—காதல் பாதையில் நடந்து செல்லும் போது தைக்கும் விஷமுள்—அதனை விலக்கவேண்டிய வழி இவை... இதில் அழகுபட சித்தரித்துக்... டுகிறார் ஆசைத்தம்பி. ந... திருத்த நாவல்!

முன் பணம் அனுப்பினால் த...

கலைமன்றம் — ...

இன்றுள்ள நிலைவேறு! முற்போக்கு எண்ணங்கள் பர்மாவில் வளர்பிறை போல் வளர்ந்து வருகிறது. பௌத்த ஆசிரமம் என்ற சின்னஞ்சிறு புறாக் கூட்டிலிருந்து பர்மிய இலக்கியம் எனும் புறாக்களை விடுதலை செய்து விட்டனர் இன்றைய முற்போக்கு இளைஞர்கள். முற்போக்கு இளைஞர்களின் சாதனையினாலே இன்று பாமரர் முதல் பண்டிதர்வரை பர்மிய இலக்கியத்தின் சுவையை அனுபவிக்க முடிகிறது. புத்த பிக்ஷுக்கள் மட்டும் தான் இலக்கிய சிருஷ்டிக்கு தகுதியானவர்கள் என்ற மனப்பான்மையும் தேய்பிறையாகிக் கொண்டு வருகிறது. இன்று பர்மிய இலக்கியவானில் சுடர்விட்டுப் பிரகாசிப்பவர்கள் மறுமலர்ச்சி எண்ணங்கொண்ட இளைஞர்களே.

சரி இனி பர்மிய பாஷையைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்குவோம். பர்மிய பாஷை மிகவும் சுலபமானது. ஆனால் பர்மாவிலுள்ள அனைவருமே பர்மிய பாஷை பேசுவதில்லை. பர்மா நாடு **பர்மியர், கரீன், கச்சீன், சீன், தலைன், ஷான்முன்** ஆகிய பல்வேறு தேசிய இனங்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு பிரிவினருக்கும் அவரவர்களுக்குரிய பாஷைகளுண்டு. ...ரவர்கள் பாஷையைத்தான் ...வர்கள் பேசுவர். ஒரு இனத் ...மற்றொரு இனத்தவரின் ...தெரியாதவர்களும் உண்டு. ... **கச்சின்** இனத்தவர் ...பாஷை அவ்வளவு ... ஆனால் ஹிந்தி ...தெரியும் இவர் ...ப்பிட்ட எழு... மெஜாரிட்டி பர்மியர்களே.

எனவே இவர்களின் பர்மிய பாஷையும் எழுத்தும் பூர்வீகமானது. ஆனால் இதர இனங்களின் பிரச்னை இப்படியல்ல. இதர இனத்தவர்களுக்கு அவரவர்கள் பாஷைக்குரிய எழுத்துக்களை சமீபத்தில் தான் புதிதாக கண்டு பிடித்திருக்கிறார்கள். உதாரணமாக கரீன் எழுத்துக்களை எடுத்துக் கொள்வோம். கிறிஸ்தவ மதத்தை பர்மாவில் பரவச் செய்யும் நோக்குடன் ரோமன் கத்தோலிக்க பாதிரிமார்கள் பர்மியர்களை அணுகினர். அசைந்து கொடுக்கவில்லை பர்மியர்கள்.

வனாந்திரங்களில் வசிக்கும் கரீன்காரர்களை அணுகி கிறிஸ்து மதத்தில் சேர்ந்தால் அப்படிச் செய்வோம் இப்படிச் செய்வோம் என்று தேனொழுகப் பேசி தங்கள் வழிக்குக் கொண்டு வந்தனர். பாதிரிமார்களின் சாதனையால் ஒரு சிலரைத் தவிர மற்றெல்லாரும் கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவர்களின் தரம் உயர்த்தப்பட்டது. கிறிஸ்துவேதத்தையும் வேத பாடலையும் கரீன்களிடையே நன்கு பரப்ப முதன் முறையாக கரீன் எழுத்துக்களைக் கண்டு பிடித்தவர்களும் இந்த கத்தோலிக்க பாதிரிகளே! கரீன் எழுத்தின் உருவமும் அமைப்பும் பர்மிய பாஷையைப் போலவே ஒத்திருக்கும். ரஷ்ய பாஷையில் ஆங்கில எழுத்துக்களையே தலை கீழாய்ப் போட்டு அதற்கு வேறு உச்சரிப்புடன் அழைக்கிறார்கள் அல்லவா அதே போலத்தான் பர்மிய எழுத்துக்களை இலேசாக உருமாற்றி வேறு தினுசாக உச்சரிக்கின்றனர். **R** (ஆர்) என்ற ஆங்கில எழுத்து **Я** இப்படி ரஷ்ய எழுத்தாக உருமா

றும் போது (யா) என்று உச்சரிக்கப்படுகிறது. இதே போலத்தான் கரீன் எழுத்துப் பிரச்னையும் இது மாதிரியே இதர சிறுபான்மை தேசிய இனங்களின் எழுத்து உண்டானதற்கு தனித்தனி வரலாறு உண்டு. பர்மிய எழுத்தை பூர்வீகமானது என்று குறிப்பிட்டோம். ஆனல் பூர்வீகமான கல்வெட்டுகளும், தஸ்தாவேஜுகளும் மூன் பாஷையிலேயே உள்ளன. இதன் காரணம் என்ன? ஏன் அவைகள் பர்மிய எழுத்துக்களில்லை? அந்த நாளில் அதாவது சரித்திரம் சமைக்கப்படும் அந்த நாளிலே மெஜாரிட்டியாக இருந்தவர்கள் மூன்களே. அதன் பின்னர் பர்மியர்கள் கையே அதிகம் ஓங்கலாயிற்று. பலமுறைகள் இனச் சண்டைகள் இரு சாராருக்குமிடையே ஏற்பட்டதுண்டு. நாடாண்ட மூன்கள் கைகட்டி வாய் பொத்தி நிற்கும் நிலை ஏற்பட்டது. மூன்களை தோற்கடித்ததிலிருந்து பர்மியர்கள் செல்வாக்கு உயரலாயிற்று. பர்மாவின் தலைநகரான ரங்கூன் கூட முன்னளில் பக்கோவைச் சேர்ந்த மூன்களிடமே இருந்தது. இன்னகரை அலோம்ப்ரா (அல்லது அலோம்பயா என்றுமழைப்பர்) என்ற மன்னன் கி. பி. 1755-ம் ஆண்டில் மூன்களிடமிருந்து தட்டிப்பறித்ததாகும். ரங்கூனை வெற்றிகொள்ளுமுன் அந்நகரம் எப்பெயருடன் விளங்கிற்று என்பதற்கு சரித்திர ஆசிரியர்களே பதில் சொல்லத் திணறுகின்றனர். ஆனல் அலோம்ப்ரா மன்னன் தான் முதன் முதலாக அந்நகருக்கு அப்பெயரிட்டதாகக் கூறப்படுகிறது. அப்போது யாங்கோவ்ன் என்று தான் பெயரிடப்பட்டது. யாங்கோவ்ன் என்ற பதத்திற்கு போராட்டங்களின் இறுதி என்று பொருள்படும். அதாவது இனியொரு போராட்டம் கூடாது என்பதற்காக இட்ட பெயராகும். இதிலிருந்தே பர்மியர்களும் சமாதானப் புருக்கள் என்று சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம். சரி பாஷையை ஒரு முடிவிற்குக் கொண்டு வருவோம். மலாய் பாஷை தென்சீயம், மலாயா, சுமத்திரா, ஜாவா, போர்னியோ, நியூகினி தீவைச் சுற்றியுள்ள சிறு தீவுகளில் சில ஆகிய இடங்களில் மலாய் பாஷை பரந்து விளங்குவது போல் பர்மிய பாஷை தன் அண்டை நாடுகளான மலாயாவிலும் சயாமிலும் பரவவில்லை. இலங்கையில் ஆங்கிலம் அதிகமாக உபயோகப் படுவதுபோல் பர்மா ஆங்கிலம் சுதந்திரத்திற்குப் பின் செல்வாக்குப் பெறவில்லை. பர்மாவில் பர்மிய பாஷை பர்மியர்களாலும் மட்டு மல்லாது வேற்று நாட்டவர்களால் விசேஷமாக இந்தியர்களாலும் பாக்கிஸ்தானிகளாலும் பேசப்படுகிறது. பர்மாவில் அடி-

தி. மு. க. பொதுக்குழு

❀

தி. மு. கழகப் பொதுக் குழு, சென்னையில் ஏப்ரல் 24—ல் நடைபெற இருக்கிறது.

பொதுச் செயலாளர் தேர்தலும், மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைத்தலும் அன்று முக்கிய நிகழ்ச்சிகள். இடம் அடுத்த அறிக்கையில்-

தி. மு. கழகத்தலைமை நிலையம்.

கடி பலதுறைகளிலும் ஈடுபடும் கம்பவர் அனைவரும் கொஞ்சம் பர்மிய பாஷையைக் கற்றிருக்க வேண்டியது அவசியமாகிறது.

பர்மியா பாஷையில் இதர பாஷைப் பதங்களும் மருவி வழங்குகின்றன. இதர கிழக்குத்திசை பாஷைகளான இந்தோனேஷியா, மலேயா, சயாமிய மொழிகளில் இந்திய மொழிகள் மருவி வழங்குவது போலவே பர்மிய மொழியிலும் சமஸ்கிருதமும், தமிழ் மொழியும் பின்னப் பட்டிருக்கிறது. இவ் விஷயம் தமிழர்களுக்குப் பெருமையளிக்கக் கூடியதுதான! உதாரணமாக **மங்கள்** என்ற சமஸ்கிருத வார்த்தையை எடுத்துக் கொள்வோம். அதற்கு **மங்களம்** என்று பொருள்படுகிறது. பர்மிய பாஷையில் அந்த வார்த்தையைச் சற்று மாற்றி **மிங்கலா** என்கின்றனர். **ஹரா, மஹோ** என்ற சமஸ்கிருத வார்த்தைகள் பர்மிய மொழியில் ஏராளமாக அடிபடுகிறது. ஆதலினால் சமஸ்கிருத வார்த்தையில் **சூர்யா** என்று சொல்லப்படுவது போல் பர்மிய மொழியில் சற்று மாற்றி **தூரியா** என்றழைக்கப்படுகிறது. சூர்யா என்ற சமஸ்கிருத வார்த்தையிலிருந்து திரிந்து வந்ததே தூரியா என்ற வார்த்தையாகும். இதே மாதிரிதான் **நவரத்னு** என்ற வார்த்தையை **நவரா** என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது. **கலியுகம்** என்ற சொல்லை சமஸ்கிருதத்தில் **கலியுக்** என்று சொல்வது போலவே பர்மிய மொழியிலும் **கலியுக்** என்று சொல்கின்றனர். மொத்தத்தில் சமஸ்கிருதம் பர்மிய இலக்கியத்தில் அகோர நர்த்தனமாடுவதாகத்தான் சொல்லவேண்டும். இனி பர்மிய மொழியிலுள்ள தமிழ்ப் பதங்களைப் பார்ப்போம். இளம் பெண்ணை சுத்த தமிழில் **யுவதி** என்று அழைக்கிறோமல்லவா? அவ்வாறே பர்மியர்களும் **யூவடி** என்று சற்று மாற்றி அழைக்கின்றனர். நுண்ணிய பொருளை **அணு** என்று சொல்வது போலவே பர்மியர்களும் **அணு** என்றே சொல்கின்றனர். (மலா) **மாலை** என்ற வார்த்தை பர்மாவில் **மாலா** என்றும், **கீதம்** என்ற வார்த்தை பர்மாவில் **கீட்டா** என்றும் அழைக்கப்படுகிறது. இது போகட்டும். புத்த பிக்ஷுகளில் சிலர் தங்கள் பெயர்களை இந்தியபாணியிலேயே சூட்டிக் கொள்ளுகின்றனர். உதாரணமாக இன்றைய புத்த பிக்ஷுகளில் பிரபல தலைவர்களாக விளங்குவோர்களின் பெயர்கள் என்னென்ன தெரியுமா? ஊஞாண-ஊபண்டிதா, ஊநாரதா, ஊவிமலா இப்படித்தான் தங்களுக்குப் பெயரிட்டுச் கொள்ளுகின்றனர். பர்மிய எழுத்துக்களில் சில தமிழ் எழுத்துககளைப் போன்றே உருவில ஒத்திருப்பதைக் காணலாம். உதாரணமாக தமிழில் **ல** என்ற எழுத்தும் பர்மிய **ல** எழுத்தும் உருவில் ஒன்றே. தமிழ் **ண** என்ற எழுத்து லேசாக உருவில் மாறி காட்சியளிக்கிறது. பர்மாவில் ஊர் பெயர்கள் கூட இந்திய பாணியில் பெயரிடப்பட்டிருக்கிறது. மாண்டலே நகருககருகாமையிலிருக்கும் பர்மாவிற்கே பட்டு நெசவு செண்டர் என்று விளங்கும் **அமராபுரம்** நகரம் ஒன்றையே இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மேற்கூறிய சான்றுகளிலிருந்து பர்மியர்களும் இந்தியர்களும் முன்னாளிலும் இன்னாளிலும் பிணைந்தே வாழ்ந்திருக்கிறார்கள்.

7-AUG

காலையில் வாங்கிய பீடியில் ஏதாவது பாக்கி இருக்கிறதா என்று சட்டைப்பையில் கையை விட்டுத் துழாவிக் கொண்டிருந்தான் ராமவேலு. கையிலே இரண்டு பீடிகள் சிக்கின. ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு, எதிரே உள்ள சினிமா கொட்டகையில் ஆட்டம் முடிவதை எதிர் பார்த்து பிளாட்பார விளிம்பில் உட்கார்ந்து கொண்டான்.

வெள்ளை ராஜாக்கள் கொண்டு வந்து இந்தியாவில் விட்ட பாழாய்ப் போன யுத்தத்தில் பாழாகாமல், இராமநாதபுரம்சீமையிலிருந்து பட்டாளத்தில் போய் டிரைவராக மாறிப் பத்திரமாகப் பட்டணத்திலேயே டாக்ஸி டிரைவராகத் தங்கி விட்டவன் தான் ராமவேலு. இருபத்தாறு வயதை இன்னும் அவன் தாண்டவில்லை. ஆறடிக்குக் குறைவாக இராது அவன் உயரம். முகத்திலே அரும்பு மீசை. நிறம் தான் கொஞ்சம் கறுப்பு. அது அவன் பிறந்தமண்ணின் ராசி. அவனுக்கு அறிமுக மில்லாதபத்திரிகை ஆசிரியரோ, சினிமா நட்சத்திரமோ, கல்லூரி மாணவர்களோ யாருமே கிடையாது. மவுண்ட்ரோட் வட்டாரத்திலேயே அவன்தான் ராஜா.

இந்த ராஜா இதுவரை கட்டை பிரம்மசாரிதான். காலைச்சிற்றுண்டி டாக்ஸிகம்பெனி பக்கத்தில் இருக்கும் டீகடையில் முடிந்து விடும். மத்தியான சாப்பாடு, மவுண்ட்ரோட் சந்தில் போர்டு இல்லாமல் வியாபாரம் செய்யும் திருநெல்வேலி சைவப்பிள்ளை கடையில் முடிந்து விடும். இரவுக்கு ஒரு பண், ஒரு சிங்கிள் சாயா இவை தான். அவனுக்குத் துணைக்கு ஒருத்தி தேவை என்ற எண்ணமே உதயமாகாமல் செய்தன.

கிராக்கி வராவிட்டால் மற்ற டிரைவர்கள் போல் உட்கார்ந்து ஒப்பாரி வைக்கமாட்டான். பேசாமல், எட்டணா கொடுத்து வாங்கிய சினிமா வசனப்புத்தகத்தைதிறந்து வைத்து உருப்போட ஆரம்பித்து விடுவான். பிறகு அவனுக்குப் பொழுது போவதே தெரியாது.

* *

சினிமா முடிவதற்கும் ராமவேலுவின் பீடி கடைசி இழுப்பிற்கு வருவதற்கும் சரியாக இருந்தது. அன்று நல்ல கூட்டம்.

டம்பாக்கம் வறியா"
ந இளைஞன். பக்கத்
ன் வாழ்க்கையில் புதி
க்கொண்ட மனைவி அங்
பற்ற ஒரு பெண்.
சார். கம்பெனிக்குப்
றேன்." ராமவேலுதான்
பதிலைச்சொன்னான். அவன் அப்படி யொன்றும் வந்த கிராக்கியை வேண்டாமென்று சொல்லும் அளவுக்குச்சோம்பேறியில்லை. சினிமா முடிந்து போகிறகும்பலில் எவனோ ஒருவன் படம் பிரமாதமாக இருப்பதாகச் சொல்லிக்கொண்டே போனான். அதுதான் கிராக்கியை மறுத்தற்குக் காரணம்.

ராமவேலு பேப்பர் விற்கும் பையன் ஒருவன் குடுமியை பிடித்திழுத்து வந்து அவன் கையிலே பத்தணாவை கொடுத்து, ஆறணா டிக்கெட் "ரிசர்வ்" செய்து வைக்கும்படி சொல்லிவிட்டுக்காரைக் கம்பெனியைக் நோக்கிக் கிளப்பிவிட்டான். சினிமா ஆரம்பிக்க போகும் சமயம் மேல வகுப்பு டிக்கெட் ரிசர்வ் செய்தவன் மாதிரி வந்து சேர்ந்தான். பையனும் டிக்கட் எடுத்துத் தயாராகநின்று கொண்டிருந்தான்.

* *

"கடவுளே! நீ கல்லா? அல்லது இரும்பா? பக்தன் கதறுகிறேனே உன் காதில் விழவில்லையா? நீ என்ன செய்வாய்? நீ ஒரு கபோதி! உன்னையும் நம்புகிறார்களே சில மடையர்கள்!" நேற்றுப் பார்த்து வந்த வசனத்தைதான் உருப்போட்டுக் கொண்டிருந்தான் ராமவேலு.

அவன் வசனம் படிக்க ஆரம்பிப்பதற்கும், கிழட்டு டிரைவர் நல்ல கண்ணு பொழுது உச்சிக்கு வந்தும் ஒரு கிராக்கி கூட வரவில்லையே என்று டாக்ஸி ஸ்டாண்டு வேப்ப மரத்தடியில் சட்டம் போட்ட படத்தினுள் இருந்த விநாயகரிடம் முறையிடுவதற்கும் சரியாயிருந்தது.

"அயோக்ய பயல். எங்கேயாவது சத்ரம் சாவடியில் படுத்துத் தூங்கி வந்து விட்டு இங்கேஇருக்கிறவனைக் கிண்டல் பண்ணுகிறது" கிழவன மெதுவாகத்தான் சொன்னான். ஆனால் ராமவேலு காதிலும் விழுந்தது. வழக்கமாசவே, கிராக்கி ஏதாவது வராவிட்டால் கிழவன் ரோட்டிலே போகிற எல்லோரையுமே, "பிச்சைகாரப்பசங்க .டாக்ஸியிலே போனா என்ன கேடு இவங்களுக்கு" என்று முனங்குவது வழக்கம். ஆதலால்தான்; ராமவேலு இதைச் சட்டைசெய்யாமல் வசனத்தை ஆரம்பித்தான்.

"கண்ணே! ஏன் கோபம் கொள்கிறாய்? கொஞ்சுமொழி பேசும் என் அஞ்சுகமே! இன்று ஏன் உன் கண்களிலே கனல் பறக்கிறது." ராமவேலு வசனத்திலேயே கண்ணாய் இருந்தான். கிழவனுக்கு முகம் சிவந்து விட்டது. அவ்வளவுதான. பிளாட்பாரத்தின் நடுவே நின்று வேப்பமரத்தில் சாய்ந்து கொண்டு வசனம் படித்து கொண்டிருந்த ராமவேலுவின் காலரைப் பிடித்து அவனை ஒரு உலுக்கு உலுக்கினான்.

ராமவேலுவிற்கு அப்போது தான் உணர்வு வந்தது. கிழவன் இதுவரை தன்னைத்தான் திட்டிக் கொண்டிருந்தான் என்ற நினைப்பு வந்ததும் ராமவேலுவின் கண்களிலும் கோபம் பொங்கியது.

கிழவன் இவன் முறை
கெல்லாம் பயப்படாமல்

அரை டிக்கட்! உம் மனசிலே என்ன நினைச்சுகிட்டிருக்கே" என்றான். ராமவேலுவிற்கு, கிழவன் தன்னை அரைடிக்கட் என்று கேலி செய்ததை பொறுக்க முடியவில்லை. இராமநாதபுரத்து மண்ணில் வலு வில்லாவிட்டாலும், பட்டாளத்துக் கோதுமைச் சப்பாத்தியிலே கூடவா வலுவில்லாமல் போய் விடும். ஒரே குத்து. கிழவன் முன் உலகம் சுற்றியது.

* *

மறுநாள் சூரியனும் வழக்கம் போல் வந்தான். ராமவேலுவும் வந்தான். ஆனால் கிழவன் தான் வர வில்லை. அவனுக்குப் பதில் அவனுடைய காரை, திருவிழாக் கூட்டத்தில் வழிதவற விட்டவன் போல் முழித்துக் கொண்டிருந்த ஒரு "பொடியன்" ஓட்டி வந்தான். கிழவனின் மகனாக இருக்குமோ என்ற சந்தேகம் ராமவேலுவிற்கு. மெதுவாக அவன் பக்கத்திலே சென்று நோட்டம் விட்டான். யாரோ மலையாளத்துச் சிறுவன்.

ராமவேலுவிற்குச் சப்பிட்டு விட்டது. கிழவன் எங்கே போயிருப்பான்? கிழவன் முதலாளியிடம் சொல்லி புரசவாக்கம் ஸ்டாண்டிற்கு மாற்றிப் போய் விட்டது இவனுக்கு எப்படி தெரியும்? பிறகென்ன தினமும் இவனிடம் உதை வாங்கி கொண்டிருக்க கிழவன் உடம்பு இரும்பாலா அடித்திருக்கிறது?

* *

"கிண்டி ஒரு ஆள் சார், கிண்டி ஒரு ஆள்." மவுண்ட்ரோட் முழுவதும் இதே கூச்சல். லண்டனில் ஓடுகிற குதிரைக்குச் சென்னையில் ஜாதகம் பார்க்கிறவர்கள், கிண்டியில் ஓடுகிற குதிரையை விட்டா வைப்பார்கள், கூட்டத்தோடு,

விசித்திரப் போர்.

அலோர்ஸ்டார், மார்ச் 8—கோத்தா தாரு, லோரங் ஆயர் பூத்தேயில் ஒரு பெரிய கால்வாயில் நூறு தவளை வீரர்கள் சென்றவாரக் கடைசியில் போர் தொடுத்தனர். நான்கு மாதங்களுக்கு முன் ஏற்கனவே ஒரு தவளை யுத்தம் நடந்தது.

மஞ்சள் தவளைகள் ஒரு புறமும் கரிய மஞ்சள் தவளைகள் ஒரு புறமுமாக நின்று ஏறக்குறைய நான்கு மணி நேரம் சண்டை போட்டன. பின்னர் இருதரப்பு வீரர்களும் திடீரெனப் பின்வாங்கி விட்டனர்.

தவளைகளின் போர் முழக்கம் கேட்டு ஏராளமானவர்கள்வேடிக்கை பார்க்கக்கூடி விட்டனர். கல்லும் கம்பும் வீசிச் சண்டையை நிறுத்தச் செய்த முயர்ச்சி பலிக்க வில்லை.

சனிக்கிழமை காலை 7-30 மணிக்குத் தொடங்கிய யுத்தம் 11-30 மணிக்குத் தான் ஓய்ந்தது.

சிவப்பான நீர்

கால்வாய்த் தண்ணீர் ரத்தம் கலந்து சிவப்பாகி விட்டபோதிலும் உயிரிழந்தவர்களையோ, காயமுற்றவர்களையோ அங்கு காணாததுதான் இந்த யுத்தத்தின் விநோத அம்சம். ஒரு வேளை தவளைக் கோஷ்டிகள் செத்தவர்களையும் அடிபட்டவர்களையும் தூக்கிக் கொண்டு போயிருக்கலாம்.

சண்டை முடிந்ததும் தவளைகள் நீரில் மூழ்கி நீந்திச் சென்றுவிட்டன.

மூடநம்பிக்கையுள்ள கிராமவாசிகள் தவளை யுத்தத்தைப் 'போர்' வருவதற்கான கெட்ட சகுனமென்று கருதுகின்றனர்.

★

கூட்டமாகக்கிழவன் காரிற்குப் புதிதாக வந்து சேர்ந்திருந்த மலையாளத்துச் சிறுவன் கேசவனும் "சாரே! ஓர் ஆள்! சாரே, ஓர் ஆள்" என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தான்.

ராமவேலுவிற்குச் சிரிப்பு பொங்கிற்று. அவனுக்குத்தான் இந்தக் கஷ்டமெல்லாம் கிடையாதே. அவன் கைராசியில் நம்பிக்கை உள்ள வாடிக்கைகாரர்கள் தான் நிறையப்பேர் இருந்தனர். இன்னும் சிறிது நேரத்தில் கிராக்கி, தானாகவே வந்து விடும். ஒரு வழியாக கேசவன் கார் மவுண்ட்ரோடை விட்டு நகர்ந்து விட்டது. சிறிது நேரத்திற் கெல்லாம் ராமவேலுவின் கிராக்கியும் வந்து விட்டது.

ராமவேலுவின் கார் கதீட்ரலை தாண்டும் போது கேசவன்கார் அங்கே நின்று கொண்டிருந்தது. ஏதோ வேறு கிராக்கி போலிருக்கிறது என்று பேசாமல் போய் விட்டான்.

ரேஸ்முடிந்து ராமவேலுதிரும்பி வந்து கொண்டிருந்தான். அன்று ரேஸில் அவனுக்கு ஒரு குதிரை சில்லறை அதிகம் கொடுத்து விட்டது. அந்தக் குஷியில் கார் பறந்து கொண்டிருந்தது. கதீட்ரலை தாண்டும் போது, கேசவன் கார் இன்னும் அதே இடத்தில் வாயைப் பிளந்து கொண்டு நிற்பது தெரிந்தது. அந்த மலையாளம் காரைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. அப்போதுதான ராமவேலுவிற்கு, கேசவனின் கார் மூச்சடங்கிதான் நடுப்பகலிருந்து இரவு வரை இங்கேயே கிடக்கிறது என்று புரிந்தது.

உடனே தன் காரை ஒரு ஓரத்தில் நிறுத்தி விட்டு வந்து கேசவன் காரின்பக்கம் வந்தான். அந்தச் சிறுவன் இவ்வளவு நேரமும் அழுது கொண்டிருந்தது போல் அவனுக்குத் தோன்றியது. அவனுக்கு ஏதாவது மிட்டாய் வாங்கி கொடுத்துச்சமாதானபடுத்தலாமா என்று கூட ராமவேலு நினைத்தான். காரின்முன் பாகம் குனிந்து பார்த்தான். பெட்ரோல் போகும் குழாயின் பாதை அடைபட்டிருந்தது. ஆனால் ஐந்தே நிமிஷத்தில் அதைச் சரி செய்து விட்டான்.

வேலை முடிந்ததும் சிறுவனை ஏறெடுத்துப் பார்த்தான். பாவம் நல்ல வருமானம் கிடைக்கும் அன்று முழுவதும் அவனால் ஒன்றும் சம்பாதிக்க முடியாமல் போயிற்று. ராமவேலுவிற்கு இரக்கம் பிறந்து விட்டது. உடனே இரண்டு ரூபாய் நோட்டை எடுத்து கேசவனின் கையிலே திணித்தான். அவனும் பதில் பேசாமல் வாங்கிக் கொண்டான்.

* *

ராமவேலு மத்தியான சாப்பாட்டிற்கு சைவபிள்ளை கடைக்குப் போவதில்லை. கேசவன் சாப்பாட்டைப் பகிர்ந்து கொண்டான் மத்தியான வேளையில். ராமவேலு மாதவன் குடும்பத்தைப்பற்றி ஒரு நாள்கூட அவனிடம் வாய்திறந்து கேட்டதில்லை. மலையாளத்து ஆசாமிகளுக்கே நிலையான குடும்பம் இராது என்பது அவனின் நிலையான நம்பிக்கை.

இப்போது ராமவேலுவின் கிராக்கியில் பாதி கேசவன் காரில் சவாரி செய்ய ஆரம்பித்தது. அவ்வளவு தூரம் ராமவேலு அவனைப் பழக்கினான். சுருக்கமாகச் சொன்னால் அவன் படிக்கும் வசனப்புத்தகத்தின் எழுத்துக்களைக்கூட கேச

வன் புரிந்து கொள்ளும் அள வுக்கு முன்னேற்றி விட்டான்.

ஒரு நாள் கேசவன் இரண்டாவது ஆட்டத்திற்குப்போகவேண்டு மென்று சீக்கிரமாகவே கிளம்பி விட்டான். அன்று ராமவேலு விற்குச் சரியான வேலே. காரை கம்பெனியில் கொண்டு நிறுத்தி விட்டு சினிமா கொட்டகைக்கு எதிரே உள்ள டீக்கடையில் டீசாப் பிட்டுவிட்டு வெளியே வரும் சமயம் இரண்டாவது ஆட்டம் முடிந்து கும்பல் வெளியேறிக் கொண்டிருந்தது.

கால் சட்டைப்பைக்குள் இரண்டு கைகளையும் திணித்துக் கொண்டு சிறிது நேரம் படம் முடிந்து வரும் கும்பலே வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ருன். கும்பலின் நடுவே கேசவனும் வந்து கொண்டிருந்தான். அவனே கூப்பிட நினைத்து வாயைத் திறந்தான். திறந்தவாய் அப்படியே நின்று விட்டது.

கேசவன் கூடவே ஒரு பெண் ணும் போய்க்கொண்டிருந்தாள். அவள் தமிழ் நாட்டுப் பெண் மாதிரித்தான் தெரிந்தது. கேசவன் பிரம்மச்சாரி என்பது ராமவேலு விற்கு நன்கு தெரியும். மிட்டாய் வாங்கித் தின்னும் பொடிப்பயல் என இதுவரை நினைத்திருந்த சிறுவன் காதலேயே விலேக்கு வாங்கிச் சுவைக்கிருன். ராமவேலுவிற்கு உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. அவன் முகத்தில் தோன்றிய வெறுப்பின் சாயலே, வாயில் இருந்து காரி உமிழ்ந்த எச்சில் எடைபோட்டுக் காண்பித்தது.

மறு நாள் மலேயாளத்துக் கேசவன் எதோ பேசுவதற்கு ராமவேலுவை நெருங்கினன். அவன் முகத்தை திருப்பிக் கொண்டு தூரமாகப் போய்விட்டான். கேசவன் எவ்வளவோ நெருங்கிப் பார்த்தும் அவனே நெருங்க முடியவில்லே. அவன் அனலாக இருந்தான்.

காலம் இரண்டு நாட்களே உருட்டி விட்டது. ரேஸ் சீசன் உச்ச நிலேயை அடைந்து கொண்டிருந்தது. காலேயில் ராமவேலு அப்போது தான் ஸ்டாண்டில் வந்து நின்ருன். வந்து நின்ற மறு நிமிஷமே பீர்முகம்மது கவர்மெண்ட் ஹவுஸ் ரோடிலிருந்து வேகமாக ஓடிவந்தான்.

"அண்ணே... ஆக்சிடெண்டு ... கேசவன் பொம்பளே... குதிரை... பூட்டுது......" ஒருவாக்கியமாவது முழுதாக பீரின் வாயிலிருந்து வரவில்லே. ஆனலும் ராமவேலு

கவிஞர் சுப்பு ஆறுமுகம் எழுதியவை

பெண்ணின் பெருமை, கற்பின் உயர்வு அத்தனேயும் சித்தரிக்கும் ஓர் அற்புத நாவல்.

நல்ல பெண்மணி

விலே ரூ. 2-4-0

வீரத்தின் பிறப்பிடம், தாய்நாட்டின் பெருமையைப் பாருக்குரைத்த பண்பாளன் வரலாறு.

வீரபாண்டியன் கட்டபொம்மன்

விலே ரூ 1-0-0

விபரங்களுக்கு:

கலேமன்றம்—சென்னே 1.

விற்கு விஷயம் புரிந்து விட்டது. எங்கேயோ கேசவன் காரும், குதிரைவண்டியும் மோதி குதிரை உயிர் போய் விட்டது.

அவன் அலட்சியமாக, "போருன்போ" என்று கூறி விட்டு அகன்று விட்டான்.

அன்று சாயங்கால வேளையில் ராமவேலு முன்சீட்டில் உட்கார்ந் தபடியேவசனப்புத்தகத்தைப்படித் துக் கொண்டிருந்தான். திடீ ரென அவன் பார்வை எதிர் பிளாட்பாரத்திற்குச் சென்றது. கேசவனுடன் சினிமா கொட்டகை யின் முன் பார்த்த அதே பெண் அவன் காரை வெறித்துப் பார்த்த படியே நின்று கொண்டிந்தாள்.

நேரம் தெரியாமல் ஒரு ஆசாமி அந்த நேரத்தில் ரயிலுக்குப் போக வேண்டுமென்று அவசரமாக வந் தார். பிளாட்பாரத்தில் நின்ற அவள் முகத்தைப் பார்க்கப் பிடிக் காமல் ராமவேலு ரயில்வே கிளுக் கியுடன் வலியக் கிளம்பி விட்டான்.

வழியெல்லாம் அவளைப்பற்றியே சிந்தனை. "சிறுவன் ஒருவனைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியது மல்லாமல் இன்னும் தன்னை கெடுக்கவுமா நினைக்கிருள்?" ஆத் திரம் பொங்கியது அவனுக்கு. அவன் ஆத்திரத்தை எல்லாம் ஆக்ஸிலேட்டரில் தான் காண்பிக்க முடிந்தது. காரின் வேகம் சவாரி செய்த ஆசாமியை நடுங்க வைத் தது.

சவாரியை ஸ்டேஷனில் இறக்கி விட்டு சிறிது நேரம் செண்ரலில் சுற்றிக் கொண்டிருந்தான்- அப்படி யாவது அவள் காத்திருக்க முடியா மல் போய்விடமாட்டாளா என்ற எண்ணம் அவனுக்கு. எவ்வளவு நேரம்தான் அங்கேயே சுற்றிக் கொண்டிருக்க முடியும். திரும்பித் தன் இடத்திற்கு வந்து சேர்ந் தான்.

ஆனால் அவள் இன்னும் அதே இடத்தில் தான் நின்று கொண்டி ருந்தாள். ராமவேலுவை அந்தப் பெண் தேடிக்கொண்டிருப்பதாக பீர்முகமது சொல்லி கண்ணடித் தான். ராமவேலு ஆத்திரத்தோடு ரோட்டைக் கடந்து அவள் நின்ற இடத்திற்கு வந்தான்.

அவள் முகத்தைப் பார்க்கும் வரையில் தான் ராமவேலுவிடம் கோபம் இருந்தது. காரணம் உடை யில்தான் அவள்தமிழ் பெண்ணுகத் தெரிந்தாள். சிவந்தமேனி, பட படக்கும் அந்தக் கரிய இமைகள், ஒடுங்கிய இடை, ஆறடிக கூந்தல் எல்லாம் சேர்ந்து அவள் கேரள அழகி என்பதை எடுத்துக் காட் டிற்று. அது மாத்திர மல்ல அவள் முகத்தில் கேசவன் சாயல் தெரிந்தது.

அவளாகவே வலிய ஒரு புன்ன கையை முகத்தில் வரவழைத்துப் பார்த்தாள். அதில் சோகம்தான் முன்னின்றது. ராமவேலு தன் காரில் சவாரி செய்யும் எத்த னையோ அழகிகளிடமெல்லாம் பேசியிருக்கிருன். ஆனல் இவளி டம் பேச நா எழவில்லை. அவ னுக்கு, தன் தவறு நன்ருக புரிந்து விட்டதே.

நல்லவேளையாக அவளே பேச ஆரம்பித்தாள், "நான் கேசவன் சகோதரி. அவன்தான் உங்களைப் பற்றி என்னிடம் சொல்லியிருக்கி ருன். அவன் ஆக்ஸிடெண் ; லே சிக்கிக் கைதான சமாச்சாரம் கொஞ்ச நேரத்திற்குமுன் தான் தெரிந்தது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அதனுல்தான் உங்களி

டம் ஓடி வந்தேன்." அருமையான தமிழிலில் பேசினுள்.

ராமவேலுவிற்கு இடிவிழுந்தாற் போல் இருந்தது. தானகவே, அவன் கையிலிருந்த தொப்பி நழுவியது. அவன அதை எடுக்கக் குனிந்த சமயம் அவளும் குந்னிதாள் எடுக்க. ராமவேலு உடம்பு அவள் மீது லேசாக உராய்ந்தது.

உணர்ச்சியற்றுப் பட்டாளத்து கோதுமைச் சப்பாத்தியாக இருந்த அவன் உடல், யந்திரத் துப்பாக்கிக் குண்டுகளினுல் துளைக்கப்பட்ட உடம்பு போல் துடித்தது. அவளை ஏறெடுத்துப் பார்க்க அவனுக்கு தைரியம் வரவில்லை. போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் பேசாமல் நடந்தான். அவளும் அவனைப் பின் பற்றினுள்.

* *

கேசவன்மீது வழக்கு கடுமையாக இருந்ததால், அவனைக் குறைந்தது இரண்டாண்டுச் சிறைத்தண்டனைக்கூட கிடைக்காமல் காப்பாற்ற முடியாது என்று ராமவேலுவிற்கு நிச்சயம் தெரிந்ததும் ஸ்டேஷனில் இருந்து பேசாமல் திரும்பினுன். இன்னும் அவள் அவனைத்தான் பின் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

பாழாய்ப்போன சினிமா கொட்டகை, அதே இடத்தில் இன்னும் இருந்து கொண்டிருந்தது. ராமவேலுவின் மனதில் எத்தனையோ எண்ணங்கள் ஆனுல் வாய்தான் பூட்டப்பட்டிருந்ததே. சிறிதுநேரம் சினிமா விளம்பரப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். எங்கேயோ நின்று கிழட்டு டிரைவர் நல்ல கண்ணு தன்னை "அரைடிக்கெட்" என்று கேலி செய்வது போல் இருந்தது. கடைசியாகத் துணிந்து விட்டான்.

"உன்பெயர்"

"பரிமளம்"

"சரி. உனக்கு யாராவது தெரிந்தவர்கள் இங்கே..."

இல்லையென்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினுள். அடுத்த கேள்வியை அவன் ஆரம்பிப்பதற்கு முன் அந்தக் கேள்வியைப் புரிந்து சொண்டவள் போலத் தலையைத் தொங்க விட்டுக் கொண்டாள். ராமவேலுவிற்குச் சிரமம் குறைந்தது.

* *

தான் முழுடிக்கெட் ஆகிவிட்ட விஷயத்தைத் தெரிவிக்க டிரைவர் நல்ல கண்ணுவை ராமவேலு இப்போது தேடிக்கொண்டிருக்கிறுன்.

யாரிடத்தில் அதிகாரம்

தென்னுடு விவசாய நாடாக இருப்பது மட்டும் போதாது; விவசாயம் பெருகினுல் மட்டும் ஒரு நாட்டுக்கு முன்னேற்றம் கிடைத்துவிடாது; ஒரு நாடு தொழில் மயமானுல்தான் உண்மையான முன்னேற்றமாகும்; தென்னுடு தொழில் மயமாக மூலதனம் வேண்டும்—இயந்திரம் வேண்டும்—மின்சாரம் தேவை; இவைகள் அனைத்தையும் நாம் பெறமுடியும்; ஆனுல், அதிகாரம் டில்லியின்—மத்திய சர்க்காரின் கையில் இருப்பதால் புறக்கணிக்கப் படுகின்றேம்.

—ஈ. வி. கி. சம்பத்

வசந்தத்தில் காஷ்மீரம்

காஷ்மீரத்தில் வசந்த ருது என்றால் மனம் பரவசமடைகிறது. உல்லாசமாக இயற்கையின் பொழிவைக் கண்டு ஆனந்தக் கடலில் ஆழ்ந்துவிட உணர்ச்சி மேலிடுகிறது. நறுமணமிக்க மலர்கள் புஷ்பிக்கும் பருவ கால உதயத்தை காஷ்மீரப் பள்ளத் தாக்கின் மீது பரவியுள்ள ஒளிமினுக்கும் மூடுபனி நமக்கு முன்னராக அறிவிக்கிறது. அப்பிரதேசம் பூராவிலும் ஒருவிதக் கிளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. அப்பிரதேசம் புத்துயிர் பெற்று புதுப் பொலிவு பெற ஆரம்பித்துவிட்டது. மாரிக்காலத்தில் ஆழ்ந்த நித்திரையிலாழ்ந்த அப்பிரதேசம், விழிப்புப் பெற்று, மலரரும்புகள் வெடித்து நாற்புறத்திலும் நறுமணத்தை அள்ளி வீச ஆரம்பித்துவிட்டன. வாதுமை மரங்கள் வெள்ளை மலர் அரும்புகள் விட்டு வசந்த ருதுவை மந்தஹாசப் புன்னகையுடன் வரவேற்கின்றன. காஷ்மீரத்தில், குப்கார் வட்டாரத்திற்குள் காலையில் உல்லாசமாக நடந்து சென்றோமானல், அங்கு நாம் காணும் காட்சி நம் மனதைவிட்டு என்றும் மறையாது. எங்கு பார்த்தாலும், மலரிதழ்கள் நிலத்தில் பரவியிருக்கும். அவை பூமாதேவிக்குப் பகட்டும் வர்ணப் பட்டாடை போர்த்தது போன்ற மனோரம்மிய மிகுந்த காட்சியையளிக்கும். மேருகளிலும், சாலையோரங்களிலும், எங்கு பார்த்தாலும் மலர்கள் கொட்டியிருக்கும். இயற்கையன்னையின் எழிலுக்கு, வசந்த ருது, பொற்குடத்துக்குப் பொட்டிட்டது போல, புது மெருகு அளிப்பதை நாம் அங்கு கண்டு, உவகை கொள்ளலாம்.

மூடுபனிக் காட்சி

அதிகாலையில், ஏரிகளின்மீதும், குன்றுகளின்மீதும் கவிந்துள்ள மூடுபனிச சிறிது சிறிதாக விலகும்போது, நாம் காணும் சலனக் காட்சியில் உதய சூரியனின கிரணங்கள் சில, நாணிக்கோணி, மூடுபனித் திரைக்குள் புகுந்து, சலனத் தோற்றத்தை எழில் மிகுந்து ஜ்வலிக்கும் தோற்றமாக்கி, உள்ளத்துககு உவகை யூட்டுகின்றன. வீடுகளின் மேலுள்ள கூறைகளும் பங்களாக்களும் மூடுபனித் திரையிலிருந்து வெளிப்பட்டுத் துல்லிதமாக நம் கண்ணுக்குப் புலப்படுகின்றன. விடியற்காலையில், ஏதோ அங்கியினல் மூடப்பட்ட உருவங்கள் அங்குமிங்கும் செல்வது போல், தோன்றும் சலனக் காட்சி, மூடுபனி விலகும்போது, அழகிய ஆடையாபரணங்கள் அணிந்த மக்கள் செல்லும் காட்சியாகத் தெளிவுபடுகிறது. காய் மறைவு இலை மறைவாக வீசும் சூரியன், நாழிகை செல்லச் செல்ல, கம்பீரத்துடன் வானத்தில் எழும்பி, சலன

நிலத் தோற்றத்தையே மாற்றி விடுவது மாயாஜாலக் காட்சி போலிருக்கிறது என்று சொன்னாலும் மிகையாகாது.

சரித்திரத்தில் புகழ் வாய்ந்த நிஷாத், ஷாலிமார் பூந்தோட்டங்கள் புதுமைப் பொலிவு மிகுந்து காணப்படுகின்றன. பச்சைப் பசேலென்று இளம் இலைகள் காற்றில் அசைந்தாட, பல நிற புஷ்பங்கள் இதழ் விரிந்து இனிய மணத்தை எல்லாத் திசைகளிலும் பரப்புகின்றன. கந்தர்பால், ஆச்சாபால் ஆகிய பிரதேசங்களில், பருவ நிலை உல்லாசப் பொழுது போக்குக்கு ஏற்றவாறு சற்று வெப்பமாக இருக்கிறது. குளிரைச் சமாளித்து விடலாம் என்ற தைரியத்தையுடையவர்கள் ஸோனுமார்க், குல்மார்க் ஆகிய இடங்களுக்குச் செல்லலாம். அங்கு கணக்கற்ற காட்டு மலர்கள் புஷ்பிப்பதை நேரில் கண்டு களிக்கலாம்.

காஷ்மீரத்து வசந்த ருதுவுக்கும் சம வெளிப் பிரதேசத்து வசந்த ருதுவுக்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. புது அனுபவம், ஒரு புதிய உணர்ச்சி, ஒரு புதிய சூழ்நிலைத் தோற்றம்—இவற்றை, வசந்த காலத்தில், காஷ்மீரம் நமக்கு அளிக்கிறது. சமவெளிப் பிரதேசங்களில், இலையுதிர் காலம் போன்று வசந்த ருது சிற்சில இடங்களில் அங்குமிங்குமாக, ஏதோ சில மரங்களில் இலைகள் உதிர்கின்றன. அவற்றின் மீது புதிய இலைகள் தோன்றுகின்றன. மற்றவை எப்போதும்போல், இலையுதிர்க்காது இருந்துவிடுகின்றன. ஆகையால், சமவெளிப் பிரதேசங்களில், காஷ்மீரத்தில் காணப்படும் ஜீவ களை ததும்பும் இயற்கை வளக் காட்சிகளைக்காண்பரிது. காஷ்மீரத்தில் வசந்த ருது வருவது சகலருக்கும் புலனாகும். ஏனெனில், அது மாரி காலத்தில் உறக்கத்திலாழ்ந்த வயல்களையும், ஏரிகளையும், மலைகளையும் தட்டி எழுப்பி, சூரிய கிரணங்களை எங்கும் பிரகாசிக்கச் செய்கிறது.

மார்ச் மாத மழை பெய்து முடிந்தவுடன், சேறு கலந்த நில மண்ணிலிருக்கும் நீர்வற்றி விடுவதுடன் அருகாமையிலுள்ள குன்றுகளின் மீது படிந்துள்ள பனித் தூள்கள் கரைந்து விடுகின்றன. அப்போது, வசந்த ருது புது உற்சாகத்துடன் அப்பிரதேசத்திற்குள் புகுந்து, காற்றிலே மிதந்து செல்கிறது. நறு மண மிகுந்த காற்றிலும், எங்கும் பரவும் சூரிய ஒளியிலும் அதன் தோற்றத்தைக் காணலாம். காட்டு மலர்கள், ரத்ன கம்பளம் விரித்தது போல் குன்றுகளின்மீது எல்லாவிடங்களிலும் புஷ்பித்துப் பிரவியிருக்கும் காட்சியிலும் வசந்த ருதுவின் எழில் பிரதிபலிக்கிறது.

கிராமவாசிகள் வயல்களுக்குப் புறப்பட்டு விடுகின்றனர். பனித் தாக்குதலிலிருந்து தற்போதுதான் மீண்டுள்ள வயல்களை, கிராமவாசிகள் பண்படுத்த ஆரம்பிக்கின்றனர். மாரி

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதியவை

கசந்த கரும்பு	ரூ. 1	8	0
சிலந்திக் கூடு	1	0	0
மனைவி	0	12	0
கொலைகாரி	0	12	0
அவள் வாழ்வு	0	8	0

கலைமன்றம்—சென்னை-1

காலத்தில் கட்டிகளாகவும் பாளங்களாகவும் இறுகிப்போன நிலை மண்ணை, எருதுகளின் உதவியுடன் கிராமவாசிகள் உழுதுவிட முற்பட்டு விட்டனர். மண்கட்டிகளைச் சில சமயங்களில் அவர்கள் கையாலும் காலாலும் உடைத்து உதிரி மண்ணாக்குவதும் உண்டு. பெரும்பாலும் நெற்பயிர் வேளாண்மைக்காகவே, அவர்கள் இம்மாதிரி நிலத்தைப் பண்படுத்துகிறார்கள்.

பனித் தாக்குதலிலிருந்து நிலப் பகுதிகள் விடுபட்ட ஜீவக் களை பெற்று புத்துயிர் பெறுகின்றன. குளம், குட்டைகளைச்சுற்றிலும்வயலோரங்களிலும்பசேலென்று பசும் புல் தழைத்து வளர ஆரம்பித்து விட்டது. அருகாமையிலுள்ள மலை இடுக்குகளில், வெள்ளிக் கம்பிகள் போலத் தோற்றமளித்து வந்த பனி அருவிகள் துரிதமாக மறைந்து வருகின்றன.

காஷ்மீரம் பள்ளத் தாக்கில் எங்கு பார்த்தாலும் பசுமைப் பரவ ஆரம்பித்து விடுகிறது. நெற்பயிர் சாகுபடி மும்முரமாக நடைபெறுகிறது. நீர் நிரம்பியிருக்கிறது. "கிளுக்", "கிளுக்" என்று உள்ளூரச் சிரித்துக் கொண்டே வாய்க்கால் நீர் வயலோரங்களிலே பாய்ந்து செல்கிறது.

வயல்களின் ஓரப் பகுதிகளிலே, இளம் நெற்பயிர்கள் அமோகமாக விளைந்துள்ளன. அதற்கடுத்தாற் போல, நாற்று நடவு நடைபெறுகிறது. வர்ணப் பட்டாடைகளை உடுத்து, 'வெள்ளியினால் செய்த கம்மல்களை அணிந்துள்ள காஷ்மீரதுப் பெண்கள், தாய் குழந்தையைப் பேணுவதுபோல், இளம் பயிர்களை ஜாக்கிரதையாக நடவு செய்கிறார்கள்.

பள்ளத்தாக்கின் கீழ்ப் பக்கத்திலுள்ள ஏரி நீர், ஆழ்ந்த சலனப் பிம்பங்களைப் பிரதிபலிக்கின்றன. ஊற்றுக்களில், நீர், மடை திறந்ததுபோல், பெருக்கெடுத்துப் பாய்கிறது. ஓடைகளிலும், சிற்றாறுகளிலும் நீர் வழிந்து செல்கிறது. குளங்களிலும் குட்டைகளிலும், தாமரை, அல்லி, இன்னும் இதர நீர்த்தாவரக் கொடிகளும் செடிகளும் வெகுவாகப் பரவியுள்ளன. மிகவும் உயர்ந்து வளர்ந்துள்ள விருட்சங்களின்மேல் பச்சைப் போர்வை போர்த்தாற்போல், பசுமை மிகுந்த இலைகள் அடர்த்தியாக வளர்ந்து கவிந்துள்ளன. எங்கும் பசுமை தரும் நிழல்தான். சூரியனின் கிரணம் நிலத்தில் விழாதபடி, மரங்களிலுள்ள இலைகள் அடர்த்தியாக வளர்ந்துள்ளன. மேய்ச்சல் நிலப் பகுதிகளிலோ, கால்நடைப் பிராணிகள், பசும் புல்லை மேய்வதைக் காணலாம். இனிமேல், அவைகளுக்கு உலர்ந்து காய்ந்துபோன சோளத் தட்டைகளைத் தொழுவங்களில் அளிக்க வேண்டிய அவசியமில்லாது போயிற்று. ஏனெனில், அவைகள் இப்போது செழித்து வளர்ந்து வரும் இளம் புல்லை, வேண்டிய மட்டும் இஷ்டப்படும்போதெல்லாம் மேயலாம்.

பாடும் பறவைகள்

பாடும் பறவைகளின் இன்னிசை ஒலிக்க, கதிரவன் உதயமாகிறான். வெள்ளை, கறுப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களையுடைய இராப்பாடிக் குருவிகள் விடியற்காலையில் இரை தேடிப் பறந்து செல்கின்

றன. பாலத்தின் மீதிருந்து, அதனடியில் ஓடும் சிற்றாரை நோக்கித் திடீரென்று பாய்கிறது மீன் கொத்திப் பறவை. தூக்கணாங் குருவிகளோ, பெரும் படகுகளில் முன்னறி பாகங்களிலிருந்து திடீரென்று கிளம்பி, வானத்தில் பறக்க முற்பட்டுவிட்டன. ஹிமாலய மரங்கொத்திப் பறவையோ, இதைப் பற்றியெல்லாம் சவலைப படாது தத்தித் தத்திச் சென்று மரங்களை இடைவிடாது துளைத்து ஆகாரம் தேடுகிறது.

வசந்த ருதுவின்போது காஷ்மீரத்தில் இளம் பசலைக் கீரை, முள்ளங்கி, தண்ணீர் மீட்டான் கிழங்கு போன்ற ருசிகரமான காய்கறிகள் மலிந்துள்ளன. ஷெஷ்டுட்டு, சொர்ரீப் பழங்களும் கூட அங்கு இன்றும் சிறிது காலத்துக்குள், அமோகமாகக் கிடைக்கும்.

மாரிக்காலத்தில், வீட்டிலேயே பல பொருட்களைத் தயாரித்துக் கொண்டிருந்த காஷ்மீர கைவினைஞர்கள், இப்போது, தங்கள் தயாரித்த பொருட்களை எடுத்துக் கொண்டு மார்க்கெட்டுகளுக்கும் கடை வீதிகளுக்கும் செல்கிறார்கள். இது உல்லாசப் பிரயாணிகள் காஷ்மீரத்துக்கு விஜயம் பருவ காலமாதலால், மாரிக் காலத்தில் அவர்கள் உழைத்ததற்கு, இப்போது தான் அவர்களுக்கு வெகுமதி கிட்டும். வசந்த ருது குறுகிய பருவ காலமாகும். இனிமை மிகுந்தது. மேலும் ஒரு மாத காலத்துக்குத்தான் வசந்தம் எழில் மிகு காஷ்மீரத்தில், இயற்கையுடன் இணைந்திருக்கும்.

ஆங்கில ஏடுகள்

ஆசிரியர் : A. S. வேணு அவ
எழுதியவை.

Dravidasthan

[வடக்கு, தெற்கின் வரலாற்று உண்மையை வகையாக எடுத்துக் காட்டும் ஆராய்ச்சி ஏடு.]

Life of Annadurai

[அறிஞர் அண்ணாவின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் வரலாற்று ஏடு.]

Verdict on Verdict

[தென்னாட்டு தி.மு.க.வின் ஜெயிலைப் போராட்டத்தின் விளக்க ஏடு.]

வியாபாரிகளுக்குக் கழிவு உண்டு

கலைமன்றம்
சென்னை-1

இனீர்களம்

ப. செல்வராசன்

காகரவென மேலே ஏறிக் கொண்டிருக்கும் காலேக் கதிரவனின் பொன்னிற வெயிலில் அந்தச் சித்ரதுர்க்கா கோட்டை சொர்ணக் கோட்டையாக ஜோதி வீசிக்கொண் டிருந்தது. அகழித் தண்ணீர் அலேயடித்து நெளிந்தோடி கோட்டை மதில்மீது மோதி திரும்பித் திரும்பி வந்து கொண்டிருந்தது.

கோட்டையின் கிழக்கு வாசலில் அகழியை மிதித்தபடி சாய்வாகக் கட்டப்பட்டிருந்த தங்குமிடத்தில் ராமராயன் கொட்டாவி விட்டபடி உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன்தான் கிழக்கு வாசலின் காவல்காரன். அந்த வாசல் வழியாக போவதற்கும் வருவதற்கும் அவனுக்கும் அரசன் மதுகிரி நாய்க்கனுக்கும்தான் உரிமையுண்டு. ராமராயனேப் போலவே, மற்ற ஏழு வாசல்களுக்கும் ஏழு காவல்காரர்கள் உண்டு.

சோம்பல் அதிகமாகவே ராமராயன் தனது மேலங்கி ஜேபியைத் தடவினன். ஆனல் அவன் எதிர்பார்த்த சரக்கு கிடைக்கவில்லே. சுருட்டை எண்ணி ஜேபியைத் துழாவிய அவன் கைக்கு காய்ந்து சுருண்டுபோன புகையிலேத் துண்டும் வெற்றிலேயும் ஓரிரண்டு கொட்டைப் பாக்குகளும்தான் கிடைத்தன.

இதையாவது அசைபோடுவோம் என்று, ராமராயன் அவைகளே எடுத்து, இடுப்பிலிருந்த வெள்ளிக் காண்டையைத் திறந்து அதிலிருந்த சுண்ணும்பையும் எடுத்துக் கலந்து எல்லாவற்றையும் வாய்க்குக் கொண்டு சென்ருன். அதே நேரத்தில் அகழியின் அந்தக் கரையில் ஒருவன் சுருள் சுருளாக புகை விடுவதைக் கண்டுவிட்டான். ராமராயன் மனம் அவனிடம் சுருட்டு இருக்குமா என்ற ஆராய்ச்சியில் இறங்கியது. சந்தேகம் எதற்கு—கேட்டே விடுவோம் என்ற முடிவோடு, "யாரய்யா அது? ஒரு சுருட்டு இருக்குமா?" என்று கத்தினன் உரத்த குரலில்.

அவனும் அங்கிருந்தபடியே, இங்கேவா! என்பதற்கடையாளமாக கையை ஆட்டினன். ராமராயன் எழுந்து நின்று துண்டை உதறித் தோள்மீது போட்டுக்

கொண்டு பாலத்தின் வழியாக அவனிடம் சென்ருன்.

அவன் அங்கே மீன் பிடித்துக் கொண்டிருந்தான். ராமராயன் போய் அவனருகே நின்றவுடன் அந்த மீனவன் ஒரு சுருட்டை எடுத்து கொடுத்ததோடு, நெருப்பையும் நீட்டினுன். ராமராயன் சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டு, தன் ஆத்திரம் தீர இரண்டு மூன்று இழுப்பு இழுத்து விட்டு அடக்கிக் கொண்டிருந்த புகையை ஆனந்தமாக வெளியே விட்டுக்கொண்டிருந்தான். அதற்குள் மீனவன் தண்ணீரில் போட்டிருந்த தூண்டில் முள்ளை தூக்கிஞன். அதிலே சுமார் ஒரு அடி நீளமுள்ள மீன் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

"அம்பிட்டுக்கிட்டியா?" என்று பரபரப்போடு அவன் மீஞேடு பேசிக்கொண்டே அதை தூண்டிலிலிருந்து உருவி பக்கத்திலிருந்த ஓலைக் கூடைக்குள் போட்டுவிட்டு தூண்டிலை மீண்டும் தண்ணீரில் போட்டான்.

ராமராயன் கேட்டான் — "எத்தனை மீன் பிடிச்சே?"

"ரெண்டு மீன்"

"ஒண்ணு தானே இருக்கு?"

"கூடையிலிருக்கிறது ஒண்ணு; நீ ஒண்ணு!"

"என்னது! நான்கூட மீஞ?"

"இல்லே. அதுக்கும் அதிகம்"

"நீ என்ன சொல்றே?"

"உன் சிநேகிதம் மீனைவிட பெரிசில்லையா?"

இதைச் சொல்லிவிட்டு மீனவன் சிரித்தான். அவஞேடு ராமராயனும் சேர்ந்துகொண்டு சிரித்தான்.

"ஆமா, நீ எத்தனை நாளா இங்கே மீன் பிடிச்சிகிட்டிருக்கே?"

"ஓய்வு கிடைக்கறப்போ வர்றது வழக்கம். இனிமே தினமும் வருவேன். ஏன்ஞ, உன் சிநேகிதம் கிடைச்சிருக்கில்லே!" மீனவன் இப்படிச் சொல்லிக்கொண்டே ராமராயனை நிமிர்ந்து பார்த்தான். அவன் பார்வையின் ஆழத்தில் 'நரித்தனம்' பதுங்கியிருந்தது.

ஆம், மீனவன் தண்ணீரில் மட்டும் தூண்டிலைப் போடவில்லை. ராமராயனைப் பேசவைத்து, அதன் மூலம் வெளியாகும் துர்க்கக் கோட்டையின் ரகசியங்களைக் கண்டறியும் எண்ணத்தோடு ராமராயன் மீது சாகசப் பேச்சுத் தூண்டிலையும் போட்டுவைத்தான்.

"ஏண்ணே, உனக்குக் கல்யாணமாயிட்டுதா?"

"நல்லா கேட்டே தம்பி. ஆறு மாசத்துக்கப்புறம் நான் ஒரு குழந்தைக்கு தகப்பஞகப் போறேன். இப்ப வந்து நீ இந்த மாதிரி கேட்கிறியே!"

"அடடே! தெரியாம கேட்டுவிட்டேன். மன்னிச்சுக்க"

"போவுது விட்டுத்தள்ளு. ஆஞ என் பெண்ஜாதி துர்க்கா மட்டும் நீ இப்படி கேட்டதை தெரிஞ்சிகிட்டா உன்னை தொலைச்சிப்புடுவா, ஆமாம்"

"ஐயோ' அவ்வளவு முரட்டுப் பொம்பிளையா?"

சந்தா விபரம்

உள்நாடு

வருடச் சந்தா	12—0
ஆறு மாதச் சந்தா	6—0

வெளிநாடு

வருடச் சந்தா	13—0
ஆறு மாதச் சந்தா	6—8

"அதில்லே தம்பி. அவ பொறப் பாலேதான் பொண்ணு; பலத் துலே ஆம்பிளேயைக் காட்டிலும் ஒரு படி அதிகம்னுதான் சொல்லணும்."

"அண்ணே, இப்படி கேட்கறேன்னு வருத்தப்படாதே. உன் பெண்சாதி என்ன சூர்ப்பனகையா?"

ஆமாம்! ராமாயணச் சூர்ப்பனகையில்லே; அசல் சூர்ப்பனகை அதாவது வீரப்பெண்! நல்லா திடகாத்திரமா யிருப்பாள். அவ மனசுலே தைரியம் வைரம் பாய்ஞ்சிருக்கும். தர்மத்துக்கும் நியாயத்துக்கும்தான் பயப்படுவாளே தவிர, மற்றபடி எதுக்கும் அசந்து கொடுக்கமாட்டாள்.

மீனவன் ராமராயனின் பூரிப்பு வழியும் வார்த்தைகளேக் கேட்டு உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். எனினும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், "நீ அதிர்ஷ்ட சாலிதான் அண்ணே!" என்ருன்.

ராமராயனுக்கு மீனவனுடைய வார்த்தைகள் பெருமையை உண்டாக்கின. அவன் கர்வத்தோடு சற்று நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனுடைய முகமும் முழு மகிழ்ச்சியால் மலர்ந்து விரிந்தது. இதைத்தானே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் மீனவன்!

சந்தோஷமான இந்த சமயம் பார்த்து தன்னுடைய நெடுநாளேய ஆவலே தீர்த்துக்கொள்ள புதியதொரு கேள்வியைப் போட்டான்.

'அண்ணே! அந்த உத்தமியை, புண்ணியவதியான உன் பெண் சாதியை நான் ஒரு தரம் தரிசிக்கலாமா?

"ஓ...அதுக்கென்ன! வா, இப்பவே போகலாம்."

நெடுநாளேய முயற்சிக்கும், ஏழு வருடமாக தொடுத்து வந்த போருக்கும் விட்டுக் கொடுக்காத ராமராயன் முகஸ்துதிக்கு மயங்கிப் போய் பகைப்பாம்பை தன்னேடு அழைத்துக் கொண்டு புறப்பட்டான். ராமராயனே அகழியைக் கடந்து கோட்டை மதிலில் கண்ணுக்குத் தெரியாத விதத்தில் புகுந்தான். மீனவன், ராமராயன் தோள் மீது கைகளேப் போட்டுக் கொண்டு அவனேப் பின் தொடர்ந்தான்.

இருட்டிலே ராமராயன் தன் மனேவியைப்பற்றி ஏதேதோ சொல்லிக் கொண்டே முன்னுல் வழிகாட்டியாகப் போய்க்கொண்டிருக்க, மீனவன் ஒவ்வொரு இடத்தையும், வளேவையும், கதவுகளேயும் கண்ணுங் கருத்துமாக கவனித்துக் கொண்டே ராமராயனின் பேச்சுக்கு 'உம்' போட்டபடி நடந்துகொண்டிருந்தான்.

சில இடங்களில் படிகளின் வழியாக கீழே இறங்க வேண்டி இருந்தது. இன்னும் சில இடங்களில் மேலே ஏறிச் செல்ல வேண்டியிருந்தது. ஓரிரு இடங்களில் தரையோடு தரையாகப் படுத்து ஊர்ந்து செல்லவேண்டியிருந்தது. இந்தத் தடங்களே யெல்லாம் தாண்டி சிறிது நேரத்தில் இருவரும், சமமாகத் தொடர்ந்து போகும் வழியில் யாதொரு சிரமமுமின்றிப் போய்க் கொண்டிருந்தார்கள். அங்கேயெல்லாம் மேலே பொருத்தி வைக்கப் பட்டிருந்த சாளரங்களின் வழியாக சூரிய ஒளி தாராளமாக சுரங்கத்தினுள் வந்துகொண்டிருந்தது.

அந்த சூரிய வெளிச்சத்தில் அங்கே ஒரு சிறு குளமும் இருப்பது தெரிந்தது.

அதுதான் **இளநீர் குளம்** ராமராயன், மீனவனிடம், இந்தத் தண்ணீர் எப்படியிருக்கும் தெரியுமா? ஒரே தித்திப்பு. வேண்டுமானல் குடித்துப் பார்! என்றான் ஜம்பமாக. மீனவனும் ஆச்சரியத்தோடு குனிந்து அந்தக் குளத்திலிருந்து ஒரு கை நீரை அள்ளிக் குடித்துப் பார்த்தான். ஆமாம். ராமராயனின் வார்த்தை அவ்வளவும் நிஜம். இளநீர் குளம் என்ற பெயர் அந்தக் குளத்திற்கு வெகு பொருத்தமாக விருந்தது. ராமராயன் போய்க்கொண்டே யிருக்க மீனவன் இன்னுமிரண்டு கைநீரை அவசர அவசரமாக அள்ளிக் குடித்துவிட்டு ராமராயனைத் தொடர்ந்து ஓடினான்.

கோட்டை மதிலின் உட்பக்கத்தை அடைந்தவுடன் ராமராயன் சுவற்றையொட்டி மூடியிருந்த ஒரு கதவைத் தட்டி, துர்க்கா...... துர்க்கா......என்று கூப்பிட்டான். கதவைத் திறந்துகொண்டு ஒரு பெண் வெளியே வந்தாள். கணவனோடு வேற்றாள் ஒருவர் இருப்பதைக் கண்டவுடன் பின்வாங்கி சேலைத் தலைப்பை இழுத்து முக்காடிட்டுக் கொண்டாள்.

ராமராயன், பரவாயில்லே துர்க்கா. இவன் உனக்கு அண்ணன் மாதிரி; வாப்பா உள்ளே! என்று தனது விருந்தாளியை அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான். மீனவன் முன்னே போகும் துர்க்காவை கவனித்தான். ராமராயன் சொன்னபடி அவள் நல்ல தேகக்கட்டு உள்ளவள்தான். முகத்தில் தைரியக்

விருதை ந. இராமசாமி

இன்ப நிலா	1 0
வழுக்கி விழுந்தவள்	1 0
மலர்புரி ராணி	1 0
தளபதி	1 0
தாமஸ் மசாரிக்	1 0
இலட்சியப் பெண்	1 0
என் மகள்	0 8

கலைமன்றம் — சென்னை-1

களையும் வீரமும்கூட ஜொலிப்பதைக் கண்டான். அவனது புலியுள்ளம் எதையோ எண்ணி சிந்தனை கூண்டுக்குள் சுழன்றுக் கொண்டிருந்தது.

துர்க்கா, "எழுந்திருங்கள் சாப்பிட!" என்றாள்.

"மீனவன், இல்லையம்மா! இன்று நான் உபவாசம். உணவருந்துவதில்லை." என்றான் சிரித்தபடி. துர்க்கா அவனை வற்புறுத்தாமல் உள் வீட்டுக்குள் போய் சில பழங்கள் அடுக்கிய தட்டொன்றை கொண்டு வந்தாள். ராமராயன் அதை வாங்கி மீனவன் முன் வைத்தான்.

"இல்லையண்ணு! இன்று நான் முழு உபவாசம். எதையும் சாப்பிடக்கூடாது. வேண்டுமென்றால் நாளை வந்து உங்களை......"

துர்க்கா குறுக்கிட்டாள், "ஆமாம்! நாளைக்காவது எங்க வீட்டில் நீங்க சாப்பிடத்தான் வேண்டும்."

"ஆகட்டுமம்மா!"

ராமராயன், மீனவனை ஒரு தட்டுத்தட்டி, நாளைக்கு நீ வருவியா? என்று சந்தேகத்தோடு

கேட்டான். மீனவன் இதற்கு உடனே பதில் சொல்லாமல் மேலே பார்த்தபடி தயக்கத்தோடு, "வரவேண்டுமென்று தானிருக்கிறேன். எப்படியும் வந்துவிடுவேன்! போகலாமா;" என்று எழுந்தான். ராமராயன் தன் நண்பனுக்கு ரகசிய வழிகளை காட்ட மீனவனைத் தொடர்ந்தான். போகும்போது மீனவன் துர்க்காவையும் அந்த கோட்டை வீட்டையும் கூர்ந்து கவனிக்க மறக்கவேயில்லை.

* * *

சித்ரதுர்க்கக் கோட்டைக்கு எட்டு மைல் தூரத்தில், மாவீரன் நெப்போலியனுக்கு ஒரே மரத்தால் செய்யப்பட்ட சந்தன மேசையை பரிசாக அளித்த ஹைதர் அலியின் படை முகாமிட்டிருந்தது. இன்று நேற்றல்ல; ஏழு வருடங்களாக அந்தப் படை அங்கேயேதான் தங்கியிருந்தது.

பலமுறை ஹைதரின் படை துர்க்கக் கோட்டையின் மீது தாக்கியும் பலனில்லாமல் தோல்வியே கண்டு வந்தது. துர்க்கக் கோட்டையின் ஒவ்வொரு கல்லுக்கும் ஒவ்வொரு பீரங்கி தேவையா யிருந்தது. ஏழாண்டுகளாக முயன்றும் கூட ஹைதரால் அந்தக் கோட்டையின் ஒரு கல்லைக்கூட அசைக்க முடியவில்லை.

துர்க்கக் கோட்டைக்குள் கன்னடிய மன்னன் மதுகிரி நாய்க்கன் தனது படையோடும் மக்களோடும் பத்திரமாக இருந்துவந்தான். போய்த் தாக்கிய இடங்களிலெல்லாம் வெற்றி ஒன்றையே கண்டு வந்த ஹைதர் இந்தக் கோட்டையை மட்டும் கைப்பற்ற முடியாமல் போனதை எண்ணியெண்ணி தனது கூடாரத்தினுள் குழம்பிக்கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்திலிருந்த ஹூக்கா குழாய் கேட்பாரற்றுக் கிடந்தது. அப்போது பணியாள் ஒருவன் உள்ளே வந்து, "ஹுஜூர்! தங்களைக் காண காதர்அலி வந்திருக்கிறார். வரச்சொல்லட்டுமா?' என்றான்.

"உம்...! வரச்சொல்!! என்று பணியாளை அனுப்பிவிட்டு ஹைதர் புகைக் குழாயை எடுத்து வாய்க்குள் வைத்துக்கொண்டான். காலையில் கோட்டை வாசலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவன் இப்போது உருமாறி காதர் அலியாக ஹைதரின் முன் நின்று மும்முறை சலாமிட்டான்.

ஹுஜூர்! துர்க்கக் கோட்டையை சுலபமாக கைப்பற்றும் வழியைக் கண்டுபிடித்துவிட்டேன். தங்கள் உத்திரவுதான் தாமதம்.

ஹைதர் காதரின் இந்தப் பேச்சைக் கேட்டு திண்டு மீது நிமிர்ந்து உட்கார்ந்தபடியே "என்ன யென்ன?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

"ஆமாம் ஹுஜூர்! கோட்டைக்குள் போய்விட்டு இப்போது தானே நான் திரும்பி வருகிறேன். எல்லா ரகசியங்களையும் கண்டுபிடித்துவிட்டேன். தங்களது உத்தாவும் துணைக்கு நூறு படை வீரர்களும் இருந்தால் போதும். நான் உடனே உள்ளே புகுந்து எல்லாக் கதவுகளையும் திறந்துவிடுவேன். பின் சுலபமாக தாங்களும் படையோடு புகுந்து தாக்கி வெற்றி கொள்ளலாம்."

காதரின் இந்தப் பேச்சைக் கேட்டு ஹைதர் துள்ளிக்குதித்தான். அந்த வேகத்தில் பக்கத்தி

விருந்த ஹூக்கா செம்பு கீழே விழுந்து உருண்டதைக்கூட அவன் கவனிக்கவில்லை. அவ்வளவு ஆச்சரியம்—திகைப்பு — அடக்க முடியாத ஆனந்தம் ஹைதருக்கு.

காதர், ஹைதரின் காதருகே சென்று ஏதோ கூறினான். ஹைதர் காதரைப் பார்த்து, "இதுயெல்லாம் உண்மைதானே?" என்று கேட்டான்.

"ஆமாம் ஹூஜூர்! நான் தங்கள் ஊழியன். உங்கள் உப்பில் வளர்ந்தவன். அதே காரணத்துக்காகத்தான் காவல்காரன் ராமராயன் வீட்டில் நான் ஒரு பழத்தைக்கூட சாப்பிட மறுத்துவிட்டேன். ஏனென்றால் நாளைக்கு நானே அவன்மீது உங்களுக்காக கத்தி எடுக்கவேண்டு மல்லவா?"

ஹைதரின் சந்தேகம் தீர்ந்தது. "சரி, நாளை இரவே புறப்படுகிறாயா?

"இல்லை ஹூஜூர்! இன்றே புறப்பட உத்தேசம். காரணம் இன்று அமாவாசையல்லவா? இருட்டில்தானே நமது காரியத்தைச் சுலபமாக முடித்துக்கொள்ள முடியும். வருகிறேன் ஹூஜூர்"-என்று காதர் புறப்பட்டான்.

துர்க்கா தனது வீட்டில் ராமராயனுக்குச் சோறு போட்டுக் கொண்டிருந்தாள். காவலிருந்து விட்டு கதவுகளையெல்லாம் பத்திரமாக மூடிக்கொண்டு குளிரோடு வீடு திரும்பிய ராமராயனுக்கு துர்க்கா சமைத்திருந்த காரமான சுண்டைக்காய்க் குழம்பும் சூடான சோறும் வாய்க்கு ருசியாக இருக்கவே, ஆனந்தமாக சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். துர்க்கா குடத்திலிருந்த கொஞ்சம் நீரை ஒரு செம்பில் ஊற்றி கணவ

உங்களுக்குத் தெரியுமா?

1. 1954-55-ம் ஆண்டில், இந்தியாவில் உற்பத்தியான வேலை பூர்த்தியான எஃகின் மொத்த அளவு என்ன?

(அ) சுமார் $8\frac{1}{2}$ லட்சம் டன்
(ஆ) ,, 10 லட்சம் டன்
(இ) ,, $12\frac{1}{2}$ லட்சம் டன்

2. 1954-55ம் ஆண்டில், இந்தியாவில் உற்பத்தியான காதியின் மொத்த மதிப்பு என்ன?

(அ) சுமார் 2 கோடி ரூபாய்
(ஆ) ,, 3 கோடி ரூபாய்
(இ) ,, 4 கோடி ரூபாய்

3. 1054-ல் இந்தியாவிலிருந்து மொத்தம் எவ்வளவு தேயிலை ஏற்றுமதியாகியது?

(அ) சுமார் 30 கோடி பவுண்டு
(ஆ) ,, 40 கோடி பவுண்டு
(இ) ,, 45 கோடி பவுண்டு

4. இந்தியாவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள ரூபாய் நோட்டுகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றுக்கான காகிதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு மொத்தம் எவ்வளவு செலவாகுமென்று மதிடப்பட்டிருக்கிறது?

(அ) சுமார் $2\frac{1}{2}$ கோடி ரூபாய்
(ஆ) ,, 3 கோடி ரூபாய்
(இ) ,, $3\frac{1}{2}$ கோடி ரூபாய்

5. 1954-ல் இந்தியாவில் உற்பத்தியான கைத்தறித் துணியின் மொத்த அளவு என்ன?

(அ) சுமார் 130 கோடி கஜம்
(ஆ) சுமார் 134 கோடி கஜம்
(இ) சுமார் 140 கோடி கஜம்

விடைகள்: 1-(இ); 2-(ஆ); 3-(இ); 4-(அ); 5-(ஆ).

ஒப்பற்றகளஞ்சியங்கள்!
உடனே படியுங்கள் !!
கோவி. மணிசேகரன் எழுதிய
புரட்சிப் புலவன்
அம்பிகாபதி
ஜூலியஸ் ஸீஸர்
ஹாம்லெட் (அச்சில்)
கலைமன்றம்—சென்னை-1

னின் இலையருகே வைத்துவிட்டு தண்ணீர் கொண்டுவர குடத்தோடும் ஒரு விளக்கோடும் இளநீர் குளத்துககுப் புறப்பட்டாள்.

குளத்தை அடைந்து குடத்துக்குள் நீரை மொண்டுக்கொணடு புறப்படுவதற்காக அருகே வைத்திருந்த விளக்கை எடுக்கப் போனாள். அப்போது எங்கிருந்தோ உஸ்... உஸ்....... என்ற சத்தம் கேட்டது. இந்த நேரத்தில் இந்த இடத்தில் சத்தமிடுவது யார்? என்ற சந்தேகத்தோடு துர்க்கா கூர்ந்து கவனித்தாள். குளத்தையடுத்து சுவற்றில் மூடப்பட்டிருந்த மரக்கதவின் மறுபக்கமிருந்து மீண்டும் ஆவ்... ஆவ்...... என்ற சத்தம் கேட்டது.

இப்போது வந்திருப்பது யார் என்பது துர்க்காவுக்கு சந்தேகமறத் தெரிந்துவிட்டது. ஹைதரின் ஆட்கள்தான் வந்திருக்கிறார்கள் என்பதை அந்த பாஷை மூலம் அறிந்துகொண்ட துர்க்கா குடத்தையும் விளக்கையும் கதவின் ஓரத்தில் வைத்துவிட்டு, மேலே பாதுகாப்பிற்காக சொருகி வைக்கப்பட்டிருந்த சிறு இரும்பு உலக்கையை கையில் எடுத்துக் கொண்டு தயாராக நின்றுகொண்டாள்.

கதவுக்கடியில் ஒரு ஆள் மட்டும் நுழைந்து வரக்கூடிய அளவுக்கு துவாரமிருந்தது. அதன் வழியாக தாடியோடு ஒரு தலை புகுந்து வெளிவந்தது. துர்க்கா கையிலிருந்த உலக்கையை ஓங்கி அதன் மீது போட்டாள்.

அந்த அடி தாங்க முடியாமல் தாடிக்காரனின் மண்டை சிதற, அப்படியே கீழே சாய்ந்தான். துர்க்கா உலக்கையை கீழே வைத்துவிட்டு அந்த பிணத்தை சரசரவென இழுத்துச் சென்று குளத்தருகே போட்டாள். மீண்டும் கதவருகில் வந்து நின்று கொண்டாள். மற்றொரு தலை வந்தது. அதன் மீதும் ஒரு அடி! இப்படியே மூன்று, நான்கு, ஐந்து பத்து, இருபது, முப்பது, நாற்பது, நாற்பத்தி எழு பிணங்களைச் சாய்த்து, குளத்தருகே குவித்துவிட்டாள்.

துணிவும் தைரியமும் இருந்தாலும் துர்க்காவின் கைகள் ஓங்கி ஓங்கி அடித்ததால சோர்ந்துவிட்டன. பிணங்களை இழுத்து போட்டுப் போட்டு அவளது தோள்கள் வீங்கியதோடு வலிகொண்டு விட்டன. ஆயினும் உறுதியோடு உலக்கையை கையிலேந்தி கதவருகே நின்று கொண்டாள்.

தண்ணீருக்குப் போன துர்க்கா வெகு நேரமாகியும் திரும்பாததைக் கண்ட ராமராயன் மனைவியைத் தேடிக்கொண்டு இளநீர் குளத்துக்கு வந்தான். அங்கே காட்சி தந்த ரத்தக்களறியைக் கண்டு அவன் நடுங்கியேவிட்டான். துர்க்கா...... என்று அலறினான்.

...கேட்டு துர்க்கா ...மபின ...ரல் ...த நேரத்தில் ...வாரத்தின். அ...யாக புகுந்து ...வெளிவந்...ன் வழி துர்க்கா உண் ...ாக்கித காதர், ...படுகளத்தைக் கண்டு ...யிருந்... கொண்டான். பாய்ந்து சீற்றம் ...ர்க்காவின் கையி லிருந்த வந்து ...கயை பிடுங்கி அவள் த உலக்... ஓங்கியடித்தான்.

அந்த லேமீதே ...பெண் — மன்னன் மதுகிரி வீரப்...னின் மானம் காக்க நாயக்...ந்து போராடிய மங்கைய... துணி...கம்—மரணக் காட் டிலே ...ர் தி...லங்காமல் வீரவிளை யாட் ...மனங்க...த்திய வீராங்கனை துர்க்...... ...நூ சாய்ந்தாள்.

ராமராயன் கோட்டையின் உச் சிக்கு ஓடினன். ஊதுகொம்பை எடுத்து வானமே பிளக்கும் வகை யில் ஊதினன். அந்த ஓசை கேட்டு எட்டுத் திசையிலிருந்தும் வீரர்கள் கிழக்கு வாசலில் கீழ் புறத்துக்கு ஓடிவந்தார்கள். அதற் குள்ளாக காதரின் மீதி வீரர்களும் உள்ளே புகுந்து விட்டிருந்தனர்.

கோட்டைக்குள் கை கலப்பு. காதரின் சிறுபடை மதுகிரி மன்ன னின் பெரும் படையை எதிர்க்க முடியாது. சிறிது நேரத்திலேயே தீர்ந்து மடிந்தது. நட்புத் துரோகி காதர் அலியும் கைவேறு, கால் வேருக பிடுங்கி எறியப்பட்டு சின்ன பின்னமானன்.

மன்னன் மதுகிரி நாய்க்கர் சேதியறிந்து ஓடிவந்தார். வீரப் பெண் துர்க்காவின் துணிகரத்தை நேரிடையாகக் கண்டு கண்ணீர் சிந்தினர். அவளின் களங்கமற்ற முகம்—கை—கால்—உடல் எல் லாமே ரத்தவெள்ளம் வழிய சிவப்பேறி காட்சி தந்தது. அந்த இடமும் ரத்தத் தேக்கத்தாலும் இழுத்தெறிந்த பிணங்களாலும் கொடூரமான கொலைக் களமாக மாறிவிட்டிருந்தது. அந்த இளநீர் குளம் வழிந்தோடிய குருதி வெள் ளத்தால் இரத்தக் குளமாகி தண்ணீர் முழுதும் சிவப்பேறி காணவேமுடியாத கோரக் காட்சி யாகத் தோன்றியது.

மன்னர் மதுகிரி நாய்க்கர் மர ணத்தைத் துணிந்து ஏற்றுக் கொண்ட துர்க்காவின் பிணத்தின் முன் மண்டியிட்டு வணங்கி, தமது மரியாதையை செலுத்தினர். அரச மரியாதையோடும், வைபவங் களோடும் துர்க்காவைக் கோட் டைக்குள்ளேயே அடக்கம் செய் தார். அதோடு, பேலூரிலிருந்து ஒரு கைதேர்ந்த சிற்பியை வர வழைத்து துர்க்காவின் சிலை ஒன்றை செதுக்கச் செய்து அதை கோட்டையின் கிழக்கு வாசலில் சகல மரியாதையோடும் பிர திஷ்டை செய்வித்தார்.

பின்னல் மைசூரைக் கைப்பற் றிய ஹைதர் அலி சித்ரதுர்க்கக் கோட்டைக்கு விஜயம் செய்து துர்க்காவின் சிலைக்கு தன் மரி யாதையையும் தெரிவித்தான்.

காலத்தின் விளைவால் சிதறுண்டு கிடக்கும் சித்ரதுர்க்கக் கோட் டைக்குள், இன்றைக்கும்கூட ஒரு ஒதுக்குப் புறத்தில் வீராங்கனை துர்க்காவின் சிலை கம்பீரமாக நிற் பதைக் காணலாம்.

"ஒழுக்கம்தான் பெரிது என்று சொன்னீர்களே, அத்தான்!"

"யார் இல்லை என்றது. இப்பவுந்தான் சொல்கிறேனே, ஒழுக் அதனால் வரும் துன்பம் அதைவிடப் பெரியதாயிருக்கிறதே!"

14

பாலு...

புகழ் வருகிறது வருகிறது என்றால் ஏன் வராது கலாநிதிக்கு; அவருடைய எழுத்துத் திறமை அப்படி; இதய விலாசமும் அப்படி!

தற்போது பதிப்பகத்தில் இரு மாதங்களாக பணத்துக்கு சற்று தட்டுப்பாடுதான். ஆயினும் கூட, அவர் தொழிலாளர்களிடம் எவ்வளவு கனிவுடன பேசுகிறார்! என்னை அழைத்து யோசனை கேட்டார். நான்தான் சொன்னேன்; "பாவம் குறைந்த சம்பளக்காரர்களுக்கு முதலில் கொடுத்து விடுங்கள், எனக்கு—தங்கள் காரியதரிசிக்கு—எல்லாம் பின்னால் அடுத்த மாதம் பார்த்துக் கொள்ளலாம்" என்று! என்னைத் தட்டிக்கொடுத்து பாராட்டினார். என்னைப்பற்றி அவர் தமது மனதிற்குள் எவ்வளவு மதிப்பாக நினைத்திருக்கிறார் என்பதை சந்திரா முழுமையாக அறிந்திருந்தால் அன்று அப்படி என்னிடம் பேசியிருக்க மாட்டாள்.

சந்திரா நல்லவள்தான்; இருந்தாலும் அவள், அப்படி, சூழ்ந்திருக்கும் உலகத்தை சதா சந்தேகக் கண்கொண்டே பார்க்கிறாளே! அதுதான் எனக்கு பிடிக்கவில்லை! எத்தனையோ நாள் நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன்; அன்று என்னால் தாங்க முடியவில்லை; சண்டையே போட்டுவிட்டேன்.

"எனக்கு நீ பத்தினியாகயிருந்தாலும் போதாது சந்திரா; மற்றய உலக உயிர்களிடமும் உனக்கு நியாயமான அன்பு இருந்தாக வேண்டும்; அப்படியானால்தான் நான் உன்னை பரிபூரணமாக ரசிப்பேன்" என்றேன்.

"ஒரே பெண் எப்படி மாதவியாகவும், கண்ணகியாகவும் திகழ முடியும்" என்று செவிட்டில்

அடித்தாற் போல் பதில் கேட்டாள்.

கோபம் வந்தது, எனக்கு.

"சந்திரா! பங்களா வாசம் உன்னை இந்த அளவுக்கு மாற்றும் என்று நான் நினைக்கவே இல்லை!"

"உங்கள் வாக்கியத்தில் உள்ள "உன்னை" என்ற பதத்தை நீக்கி விட்டு அந்த இடத்தில் "நம்மை" என்ற பதம் இருக்க வேண்டுமென ஆசைப்படுகிறேன்"

"கூடாத வளர்ச்சி!"

"இருவருமே அப்படித்தான்!"

"எதிர்த்தா பேசுகிறாய்?"

"அப்படிப் பேசினால்தான் என்ன! உரிமையில்லையா?"

"சீ!" என்று சீறிவிட்டு வீட்டை விட்டே வந்துவிட்டேன்.

மூன்று நான்கு நாட்கள் ஆயின. நான் பதிப்பகத்தைவிட்டு, வீட்டுக்குப் போகவே இல்லை.

ஐந்தாவது நாள்கூட போயிருக்க மாட்டேன்; கலாநிதி, என்னையும் அவளுடன் தமது பிறந்த நாள் விழாவிற்காக வரவேண்டுமென்று அழைத்திருந்தார் அதனால்தான் போக நேர்ந்தது.

போர்ஷனில்கூட இருக்கும் ஏழைக் குழந்தையொன்றை இடுப்பில் எடுத்து வைத்துக்கொஞ்சிக் கொண்டிருந்தாள், சந்திரா!

மேலும் கீழுமாக அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, வீட்டுக்குள் எனது தனியறை சென்றேன். அவளும் என் பின்னே குழந்தையுடன் வந்தாள்.

"வழி தெரிந்ததா?" என்று அவளாகத்தான் முதன் முதலாகத் துவக்கினாள்.

பேசாமல் இருந்தேன். கொஞ்சம் கழித்து, "யார் இந்தப் பயல்" என்றேன்.

"ஏன் நமது குழந்தை என்று தான் வைத்துக்கொள்வோமே"

"சந்திரா! ஜாக்கிரதையாகப் பேசு"

"நீங்கள்தான் ஜாக்கிரதையாகப் பேசணும்; நாளைக்கு இந்த பயலே கூட ஒரு கலாநிதியா வந்தாலும் வந்திடுவான்—இல்லையா, பயலே" என்று விளையாட்டாகப் பேசி, அந்தப் பயலின் கன்னத்தைத் தாய்மைத் தனமாகக் கிள்ளினாள்.

எனக்கு அவளது விளையாட்டு ஒன்றும் பிடிக்கவில்லை.

"புறப்படு" என்றேன்.

கால் மணி நேரத்திற்குள் புறப்பட ஆயத்தமாகிவிட்டாள். அந்த நேரத்தில் பூக்காரி வீதியில் பூவிற்றுக்கொண்டு சென்றாள். அவளை அழைத்தாள். ஒரு பந்து பூச்சரம் வாங்கினாள். அதில் சொல்லிவைத்துக் கட்டியதுபோல, ஐந்தே ஐந்து முழங்கள்தான் இருந்தன. தனக்கொன்று வைத்துக்கொண்டு, பாக்கியுள்ள நாலு ஏழைத் தோழர்களின் தோழிகளிடமும் கொண்டு இவளே கொடுத்து வந்தாள்.

"புறப்படம்மா நேரமாகிவிட்டது" என்று எரிச்சலுடன் அவசரப் படுத்தினேன். அப்போது அவள் என் நிலையை ஓரளவுக்குப் புரிந்ததுபோல் காணப்பட்டாள்.

"ஏன் இப்படி ஒரு மாதிரியாகப் பேசுகிறீர்கள்?"

"ஓகோ! இவரு ஒரு மாதிரியாகப் பேசுறாராம்—இவள் கண்டு பிடித்து விட்டாளாம். சரிதான், புறப்படடீ"

"சரி! புறப்பட்டுவிட்டேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவளது கண்கள் கண்ணீரைக் காட்டின.

"என் இப்படி பொய் அழுகை அழுறே"

"இல்லே. நான் இப்பதான் நிஜமான அழுகை அழுகிறேன்; இது வரை அழுததுதான் பொய்யான அழுகை" என்று சொல்லிக் கொண்டே மேலும் கண்ணீர் சிந்தினுள். என் கால்களில் விழுந்து வணங்கினுள். எனக்கு அவளைப் பார்க்கக்கூட பிடிக்காமல் மேல் கட்டிடத்தையே பார்த்துக்கொண்டு நின்றேன். காலில் விழுந்து சில விநாடிகள் தானிருக்கும்.

"ஆ" என்ற அதிர்ச்சியுடன் எழுந்தாள்.

"என்னடீ"

"வேட்டியில் என்ன வாடை வீசுகிறது"

"நீதான் பாரேன்; தெரியலே; உனக்கு ஏன் சிரமம்; நானே சொல்லிடுறேன். எப்படி அவர் சொல்லே தட்டுவது, குடிக்கச் சொல்லி வற்புறுத்தினுர், குடிக்க ஆரம்பிச்சிட்டேன். இந்த நல்ல முத்துப் பயல்தான் இன்னிக்கு வேஷ்டியில் விளையாட்டா ஊற்றி விட்டான்" என்று சொன்னேன்.

இப்போது எங்கள் வீட்டுக் கதவு திறந்திருந்தது. நாங்கள் நின்று பேசுவதுகூட அடுத்த ஏழைத் தோழர்களின் தோழிகளுக்கு கேட்டாலும் கேட்கலாம் என்று நினைத்து அழுகையோடு அழுகையாக சந்திரா திறந்து கிடந்த கதவைச் சாத்தினுள்.

"அத்தான்!"

"என்ன சந்திரா"

"உட்காருங்கள். பேசாமல்"

உட்கார்ந்தேன்—அருகில் அவளும் அமர்ந்தாள்.

"உலக உத்தமர்களுக்கே திருத்தம் சொன்னீர்களே."

"ஆம்! முன்பு உலக உத்தமர்களுக்குத திருத்தம் சொன்னேன். இப்போது திருத்தத்தைச் செய்து காட்டுகிறேன் சந்திரா"

" போங்கள்......... இப்போதே போய் உங்கள் ஆப்த நண்பன் மோகனின் சிலேயை உங்கள் கையாலேயே உடைத்துவிட்டு வாருங்கள்."

"யாரும் யார் சிலேயையும் உடைக்க வேண்டியதில்லே. சந்திரா! அதெல்லாம் காலதேவனுக்குரிய வேலேகள்"

"ஐயோ" என்று தன் தலேயில் ஐந்தாறு முறைகள் அடித்துக் கொண்டாள். பிடித்தேன். மீண்டும் துவக்கினுள்.

"ஒழுக்கம்தான் பெரிது என்று சொன்னீர்களே, அத்தான்!"

"யார் இல்லே என்றது, இப்பவும்தான் சொல்கிறேனே, ஒழுக்கம் பெரிதுதான்; அதனுல் வரும் துன்பம் அதைவிடப் பெரிதாயிருக்கிறதே"

"அதனுல் வரும் புகழ், அந்த துன்பத்தை விடவும் பெரிதல்லவா!"

"அவ்வளவு பெரியதுகள் எதுமே மனிதர்களுக்கு வேண்டாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன், சந்திரா! காந்தீயத்தை அழகாகப் பேசுபவர்களிடம்

கலேஞர் கருணநிதி எழுதியவை

தூக்கு மேடை	ரூ. 1	8	0
இரத்தச் சுவடு	1	0	0
புராண போதை	1	0	0
நச்சுக்கோப்பை	0	12	0
கொலேக் களம்	0	8	0

கலேமன்றம்—சென்னே-1

போய் கைநீட்டினுல் ஒரு கலசக் கஞ்சிகூட தரமாட்டார்கள்— கசாப்புக் கடைக்காரனிடம் போய் கைநீட்டு; ஏதோ அவனுல் முடிந்த ஒரு கசாப்புத் துண்டாவது தருகிருன். இப்படிப் பட்ட உலகத்தில் நான் இனி மேலும் நல்லவனுக வாழத் தயார் இல்லை; படமுடியாதினி அரசே, பட்டதெல்லாம் போதும்"

"போதும்! நிறுத்துங்கள், பேச்சை!"

"நிறுத்திவிட்டேன், புறப்படுகிருயா, இல்லையா," என்று கேட்டு எழுந்தவாறே சட்டைப் பையில் கிடந்த சிகரட்டை எடுத்து ஸ்டெயிலாக பற்றவைத்தேன்.

புகை சூழ்ந்தது.

அப்படியே மயங்கிக் கீழே விழுந்தாள்.

"சந்திரா! சந்திரா" என்று இரண்டு மூன்று தடவைகள் தட்டி யெழுப்பிப் பார்த்தேன்.

எழவில்லை—எழுந்து, பக்கத்து வீட்டு அம்மாக்களிடம் அவளுக்கு ஏதேனும் மருந்திடச் சொல்லிவிட்டு புறப்பட்டேன்.

டிரைவர் காரைத் திறந்தான் ஏறினேன். கார் புறப்பட்டது.

"எங்கே கசார், யசமான் வீட்டுக்கே போயிடவா" என்று டிரைவர் கேட்டான்.

"ஆமா; அப்படியே போகிற பாதையிலே அந்த டான்ஸ் பார்ட்டியையும் கூட்டிப் போகணும்" என்று சொன்னேன். சொன்னேன் என்பதைவிட கட்டளையிட்டேன் என்பதே சரி! நானும் அன்பாகத்தான் பேச வேண்டும் என்று நினைக்கிறேன், என்னமோ சில நாட்களாக அது முடியாமலே போகிறது. டிரைவரிடம், "ரேடியோவை திருப்பப்பா" என்றேன்.

சண்டாள ரேடியோ, என் நண்பன் குஷ்டம் வந்தபிறகு அடிக்கடி பாடுவானே அந்த "குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி" என்ற பாடலையா அப்போது பாட வேண்டும்!

(தொடரும்)

காதல் உள்ளம்

காட்சி 2

ஒமோதேய்—ரொதோல்போ—(போர்வையால் மூடிக் கொண்டிருக்கிறான்)

ஒமோ: வாருங்கள்.

ரொதோ: நான் எங்கே இருக்கிறேனா?

ஒமோ: நீர் இங்கேயா இருக்கிறீர்? தூக்கு மேடையின் பலகைமேல் இருக்கிறீர் என்று நினைக்கிறேன்.

ரொதோ: என்ன நீங்கள் சொல்வது புரியவில்லையே?

ஒமோ: நீங்கள் கேள்விப் பட்டதில்லையா—பதுவில் ஒரு அறை. பயங்கரமான அறை—மலரும்—மணமும் காதலுங் கூட இருக்கலாம். அந்த அறையில் ஏழை அல்லது கோமான்—கிழவன் அல்லது காளை யாராக இருந்தாலும் நுழைவதோ — கதவைத் திறப்பதோ—கொடிய குற்றம். அப்படிச் செய்தால் உடனே சாவு. இது உங்களுக்குத் தெரியாதா? கேள்விப் பட்டது கூட இல்லையா?

ரொ: ஆம். கேள்விப் பட்டிருக்கிறேன். சர்வாதிகாரியின் மனைவி அறை.

ஒமோ: அதே அறைதான்.

ரொ: இதுவா?

ஒமோ: சர்வாதிகாரியின் மனைவி அறை! ஆம்!

ரொ: என் காதலி……

ஒமோ: கத்தேரினா பிரகாதனி-பது சர்வாதிகாரி ஆஞ்ஜெல்லோ மலிப்பியரின் மனைவி.

ரோ: கத்தேரினு—சர்வாதிகாரியின் மனைவி! உண்மைதானு?

ஒமோ: உனக்குப் பயமாக இருந்தால் இன்னும் நேரமிருக்கிறது. இதோ வந்த வழி—திரும்பிப் போகலாம்.

ரோ: பயம்! எனக்காகவா? இல்லை—அவளுக்காக—போகட்டும். நீ யார்?

ஒமோ: நீ கட்டாயப் படுத்துவதனுல்—கேள் சொல்கிறேன். ஒரு வாரத்திற்கு முன்பு—சாமத்தில நீ தனியாகப் போய்க் கொண்டிருந்தாய்—மாதா கோயிலுக்குப் பின் புறம்—வாட் போர் சத்தமும், கூச்சலும் கேட்டு ஓடி வந்தாய்.

ரோ: ஆம்! மூன்று கயவர்கள் ஒரு முகமூடி யணிந்த மனிதனைக் கொல்லப் போனுர்கள். நான் தடுத்துக் காப்பாற்றினேன்.

ஒமோ: அந்த முகமூடி நான் தான். என் உயிரைக் காத்த உனக்கு ஒரு நன்றி மொழி கூடக் கூருது—நான் யார்? என் பெயரென்ன? என்று கூடக் கூருது போனவன் நான் தான்—அன்றிரவிலிருந்து உனக்கு நன்மை செய்ய வேண்டுமென்று நினைத்தேன். என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனுல் உங்களை எனக்குத் தெரியும். உங்கள் காதலியை நீங்கள் சந்திக்க வேண்டும் என்பதற்காவன செய்தேன் — நன்றியறிதலாக—வேருென்றுமில்லை — இப்பொழுதாவது என்னை நம்புகிறீர்களா?

ரோ: ஆம்! ஆம்! நன்றி — அவளை யாரோ பழிவாங்க இப்படிச் செய்வதாய் நினைத்தேன். எனக்கு ஒரு பெருஞ் சுமையாக இது இருந்தது. நீ அதை நீக்கிஞய். உனக்கு நன்றி. நீ இனி என் தோழன். நான் உனக்குச் செய்ததைவிட எத்தனை மடங்கு மேலானதைச் செய்து விட்டாய். நான் கத்தேரினுவைப் பார்க்கவில்லை யென்ருல் நீண்ட நாள் என்னுல் உயிர் வாழ முடியாது. தற்கொலை கூடச் செய்து கொள்வேன். அவ்வளவு பைத்தியம்—வெறி தலைக்கேறி யிருந்தது—நான் உயிரை மீட்டேன். நீயோ என் உயிர்—இதயம் இரண்டையும் மீட்டாய்.

ஒமோ: நீங்கள் இங்கே இருங்கள்.

ரோ: இங்கேயே இருந்தால்! உன்னிடத்தில் உண்மையைச் சொல்கிறேன். அவளைப் பார்ப்பதற்கு—அவள்! ஒரு மணி ஒரு நிமிடம்—எப்பேர்ப்பட்ட நிலைமை என்பது உனக்குத் தெரியாதா—பார்க்க வேணடும். அவள் எங்கே இருக்கிருள்?

ஒமோ: அங்கே—அந்த வழி பாட்டு அறையில்.

ரோ: எங்கே அவளை நான் பார்ப்பது.

ஒமோ: இங்கே தான்.

ரோ: எப்பொழுது?

ஒமோ: இன்னும் கால் மணி நேரத்தில்.

ரோ: ஆ—கடவுளே!

ஒமோ: (அவனுக்கு ஒவ்வொரு கதவாகக் காட்டி) விழிப்பாய் இரு. அதோ அதுதான் சர்வாதிகாரியின் படுக்கை அறை. இப்பொழுது உறங்கிக் கொண்டு இருப்பார். எந்த சத்தமும் அவர் தூக்கத்தைக் கலைக்காது. நம்மையும் கத்தேரினுவையும் தவிர நீங்கள் கவலையற்று இருக்கலாம். நாம் வந்த வழி—என்னைத் தவிர

யாருக்கும் தெரியாது. நான் அதை யாருக்கும் சொல்ல மாட்டேன். காலையில் நீங்கள் தப்பித்துப் போய் விடலாம்.

(சற்று உள்ளே சென்று) இது தான் கணவன் வருகின்ற வழி- கணவனும் காதலனும் ஒன்று தானே—(சன்னலைக்காட்டி) எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த வழியைப் பயன் படுத்தாதீர்கள். எண்பது அடி உயரம். அதுமட்டுமல்ல கீழே ஆறு— வரட்டுமா?

ரோ: இன்னும் கால் மணி நேரமா?

ஓமோ: ஆம்!

ரோ: தனியாக வருவாளா?

ஓமோ: நிச்சயமாகக் கூற முடியாது. எதற்கும் சற்று ஒதுங்கி மறைந்திருங்கள்.

ரோ: எங்கே?

ஓமோ: கட்டிலுக்குப் பின்புறம். அல்லது நிலா முற்றத்தில் அவசியம் என்று தோன்றினால் இந்தப் படியால் மேலே ஏறிவிடுங்கள். வழி பாட்டு அறையில் நாற்காலி ஓசை கேட்கிறது. ராணி கத்தேரினா வரப் போகிறார். நாம் பிரியவேண்டிய நேரம் வந்து விட்டது. வரட்டுமா.

ரோ: நீயாக இவ்வளவு உதவி எனக்குச் செய்த பிறகு என் உடல் பொருள் ஆவி யாவும் உன்னுடையதே.

(முற்றத்தில் மறைந்து கொள்கிறான்)

ஓமோ: (அரங்கில் முன் வந்து தனக்குள்ளே) அவள் உங்களுக்கு அல்ல கோமானே.

(ரோதோல்போ தன்னைப் பார்க்கிறாளா என்று பார்க்கிறான். மார்பிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து மேஜை மீது வைத்து விட்டு இரகசிய வழியே மறைந்து விடுகிறான் ஓமோதேய்—வழிபாட்டு அறையிலிருந்து கத்தேரினாவும் தப்னும் வருகின்றனர். கத்தேரினா வேனிஸ் கோமகள் போல உடை உடுத்தி யிருக்கிறாள்)

காட்சி 3

கத்தேரினா—தப்ன்—ரொதோல்போ

(முற்றத்தில் மறைந்து கொண்டிருக்கிறான்)

கத்: ஒரு திங்களுக்கு மேலாகிறது! தப்ன் உனக்குத் தெரியுமாடி —ஆம்—ஒரு திங்களுக்கு மேலாகிறது. ஊம்! தீர்ந்தது! தூங்க முடிந்தாலாகிலும் கனவிலாவது காணலாம்! தூக்கம் கூட வரமாட்டேன் என்கிறதே! ரெழினெல்லா எங்கே?

தப்: அவள் அறைக்குச் சென்று கடவுளை வணங்குகிறாள் - உங்களை மகிழ்விக்க நான் சென்று அவளை அழைத்து வரட்டுமா?

கத்: வேண்டாம்— கடவுளை மகிழ்விக்க சற்றுநேரம் அவள் வணங்கட்டும்.

தப்ன்: இந்த சன்னலை மூடட்டுமா அம்மா?

கத்: தப்ன் கேட்டாயா - ஐந்து வாரங்கள் ஆகின்றன. அவரைப் பார்க்காத ஐந்து வாரங்களும் ஐந்து யுகங்களாக வல்லவா தோன்றுகிறது. வேண்டாம். சன்னலை மூடாதே—தொட்டுப் பார் என் தலையை—கொதிப் பேறிய என் தலைக்குச் சிறிது குளிர் காற்றை அதுதான் தருகிறது. இனி அவரைப் பார்கக முடியாது! சிறையில் அடைக்கப்பட்டேன்—இந்த அறையில் யார் நுழைந்தாலும் சாவைத் தழுவ வேண்டும்-சர்வாதிகாரியின் கட்டளை யிது! ஆம்! அவ

ரைப் பார்க்கக் கூடாது! இந்த அறையில் அவரைப் பார்க்க நினைப்பது சாவுக் கவரை அழைப்பதைப் போலல்லவா—வேண்டாம்—அவரைப் பார்க்க நினைக்க வேண்டாம். என் காதல்! ஆம் கொடுத்து வைக்காதவள் நான்! கடவுளே! எதற்காக அவர் பதுவிற்கு வந்தார்? எதற்காக மீண்டும் அவரை இங்குச் சந்தித்தேன், இப்படி விரைவில் என் இன்பக் கோட்டை தரைமட்டமாகும் என்றறிந்திருந்தால் அந்தக் குடிசையில் அவரை வரவேற்றிருக்க மாட்டேனே! மறந்திருந்த அவர் மனத்திற்கு தொல்லைகளல்லவா உண்டாக்கி விட்டேன். இனி நான் வெளியே போக முடியாது—இந்த ஓரே ஒரு சன்னல் தான் சிறு காற்றையும் சூரிய ஒளியையும் எனக்களிக்கிறது—அந்த ஒளியிலே அவர் முகத்தை—அந்த இன்ப முகத்தைப் பார்க்கிறேன் ரொதோல்போ!...அதையும் மூடுகிறேன் என்கிறாயே தப்ன்—சொல்லடி—சொல்—நான் இனி அவரைப் பார்க்க முடியாதென்று நம்புகிறாயா?

தப்ன்: ராணியம்மா...

கத்: நான் மற்ற பெண்களைப் போலல்ல—விழா—விளையாட்டு—இன்பப் பொழுது போக்கு இவை எதுவும் என்னை மகிழ்விக்க மறுக்கின்றன—ஏழு ஆண்டுகளாக எனக்கு ஒரே ஒரு எண்ணந்தான். ரொதோல்போ!" நான் எதைப் பார்த்தாலும் எங்கு பார்த்தாலும் ரொகோல்போ தோன்றுகிறார்—என் கண்கள் அவர் உருவிற்கென்றே படைக்கப்பட்டன போலும்—வேறு எதுவும் கண்க[illegible]த் தோன்ற மாட்டேன் என்[illegible]—ஏழு ஆண்டுகளாக அவரைக் கண்டதிலிருந்து முதல் இன்று

வரையில் என் எண்ணமெல்லாம்-நான் எங்கு இருந்தாலும்—எது செய்தாலும் அவரையே வட்டமிடுகிறதடி! நான் கன்னியாக இருந்தேன்—சிறிது கூட ஈவு இரக்கமின்றி எனக்குத் திருமணம் செய்து விட்டார்கள்—என் வாழ்க்கையைப் பார்த்தாயா? எல்லா வசதி இருந்தும் என் வாழ்க்கை வரண்ட பாலையாக வல்லவா இருக்கிறது.

தப்ன்: துன்பம் தருகின்ற இந்த நினைவுகளை யெல்லாம் உங்கள் மனத்திலிருந்து ஓட்டிவிடுங்கள் அம்மா—

கத்: எப்படியடி மறப்பது—அவரும் நானும் போக்கிய அந்த இன்பமான மாலை நேரங்களை மறக்க முடியுமா? என்ன இனிய பேச்சு — அடக்கமான ஒழுங்கை மீறுத அவர் செயல்—குணம்—போடி—மறக்க முனைய முனைய வளர்ந்து தழைக்கின்றன அந்த நினைவுகள் — நீபோய் உறங்கு—பாவம் நீயும் ஏன் என்னேடு கவலைப்பட வேண்டும்—நான்தான் அதற்காகவே பிறந்து விட்டேன்-நீயுமா அதில் பங்கு கொள்ள வேண்டும்—போய் ரெழினெல்லாவோடு உறங்கு.

தப்ன்: ராணி அம்மாவுக்கு ஏதாவது...?

கத். ஒன்றும் தேவையில்லை—நான் பார்த்துக் கொள்கிறேன்—போ—போடி போய் தூங்கு போ-

தப்: கடவுள் உங்கள் கவலையை மாற்றட்டும்.

(தன் அறைக்குத் தப்ன் போகிருள்)

காட்சி 4

கத்தேரினு—ரொதோல்பே[illegible]—முற்றத்தில்.

கத்: (தனியாக) அடடா! என்ன இனிமையான பாட்டு! என் காலடியில் அமர்ந்து இனிய குரலில் பாடிய அந்தப் பாட்டுகள்! இன்னும் என் காதுகளில் ஒலிக்கின்றனவே! அந்தப் பாட்டுகளைக் கேட்க என் உயிரைக் கூடத் தருவேனே! அந்த எடுப்பு-அடடா!...

[அருகிலிருந்த யாழை எடுக்கிருள்) இதுதானே... ஆம்... (சிறிது நேரம் இசைக்கிருள்) அந்தப் பாடலைக் கேட்க—ஆம்—கேட்பதற்காக மட்டும்—அவரைப் பார்க்க அல்ல. தொலைவி லிருந்தேனும் அந்தப் பாடலைக் கேட்க என் உயிரைக் கூட விற்றுக் கொடுப்பேன்.

(முற்றத்தின் மறைவிடத்திலிருந்து ரொதோல்பேர் பாடுகிருன்)

(பாட்டு)

என்னுயிர் உன்னிதயத் தடைக்கலமே!
எழில் ஓவியமே! அழகே! கலந்தோம் நாமே!
உன்னருகில் வந்து சின்ன குழந்தை போலச்
சிணுங்கிச் சிணுங்கிக் கெஞ்சி வட்டமிடும்
வண்ண இசைநீ மகரயாழ் நானே!
மலர்ப்புதர் நானே தென்றலும் நீயே
எண்ண எண்ண இனிக்கும் முறுவலும் நீதான்
இதழ்நான் அழகுநீ காதலும் நானே!

கத்: (கையிலிருந்த யாழ் கீழே விழுகிறது) தெய்வமே!

ரொ: (மறைந்திருந்து தொடர்ந்து பாடுகிருன்)

நீல வானில் கோலம் செய்யும்
நிலவுநில்லா தோடல் போலே
காலம் விரைந்தே ஓடும்போது
கண்ணீ ரோடென் காதற் பாடல்

ஞாலம் விழுங்கும் இருட்டில்
உன்றன்
நகை முகத்தைத் தழுவிடாதோ!

கத்: ரொ தோல் போ!

ரொ: (தன் மேல் போர்வையைக் கழற்றி வைத்து விட்டு) கத்தேரிஞ!...... (அவள் காலடியில் வந்து குந்துகிருன்)

கத்: நீயா! நீ எப்படி இங்கு வந்தாய்? கடவுளே, உன்னைக் கண்டு மகிழ்கிறேன்—இல்லை-பயத்தால் சாகிறேன்—எனக்காக நான் பயப்படவில்லை. ரொ தோல் போ! நீ எங்கே யிருக்கிருய் என்பது—உனக்குத் தெரியுமா-வேறு ஏதோ ஒரு அறையைப் போன்றது இந்த அறை என்று நினைத்துக் கொண்டாயா? பாவி! சாவுக்கருகிலல்லவா நீ நிற்கிருய்—

ரொ: கவலையில்லை! உன்னைப் பார்க்காமல் இறந்திருப்பேன்-இப்பொழுதோ உன்னைக் கண் குளிரப் பார்த்த பிறகு சாகப் போகிறேன்-அவ்வளவு தானே!......மகிழ்ச்சியோடு சாவேன்.

கத்: நல்லதே செய்தாய்-ஆம்-நீ வந்ததே நல்லதுதான் உன்னைப் பார்க்காமல் நானும் சாவோடுதான் போராடிக் கொண்டிருந்தேன்—இதோ உன்னைக் கண்குளிரப் பார்க்கிறேன்—என் காதலே மறறதைப் பற்றி இனி எனக்குக் கவலையில்லை—ஒரு மணி நேரம் உன்னோடு—பிறகு இந்தத் தளமே இடியட்டும் கவலையில்லை—

ரொ: கடவுள் நம்மைக் காப்பார்—நமக்கென்ன பயம்—கோட்டையில் யாவரும் தூங்குகின்ருர்கள்—ஆனல் வந்த வழியே நான் திரும்பிப போக முடியாது. அவ்வளவுதான்—

கத்: எப்படி வந்தாய்?

ஆசிரியர் ஊடுருவி எழுதிய

வால்டையர்

பிரெஞ்சு நாட்டுப் புரட்சியாளர் வால்டையரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் அருமையான ஏடு. படிக்கப் படிக்க, மனத்தில் புரட்சியை உண்டு பண்ணுமளவிற்கு எழுதி இருக்கிருர். **விலை ரு. 1—0—0**

கலைமன்றம்—சென்னை-1

ரொ: நான் ஒரு மனிதனின் உயிரை மீட்டேன்—அவன் என்னைக் கூட்டி வந்தான் — நான் அதைப் பற்றிப் பிறகு சொல்கிறேன்—அவனைப் பற்றி நீ பயப்படாதே—எனக்கு அவன் மேல் நம்பிக்கை யுண்டு.

கத்: அப்படியானல் சரி! ரொதோல்போ!...என் உயிரே!

ரொ: கத்தேரிஞ!...

கத்: எதைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நான் உனக்கு—நீ எனக்குத்தான—நான் மிக மாறி யிருப்பதாகத் தோன்றவில்லையா—காரணம் சொல்கிறேன் கேள். உன்னைப் பிரிந்து ஐந்து வாரங்களாக நான் அழுதுகொண்டேதான் இருக்கிறேன். நீ எப்படி இருந்தாய்—சிறிதாகிலும் கவலை இருந்ததா உனக்கு—நம் பிரிவு உன்னை ஒன்றும் செய்யவில்லையா-சொல்—சொல்லேன்—உன் பேச்சைக் கேட்டு நீண்ட நாள் ஆகிறதே.

ரொ: ஆ — கத்தேரிஞ! என் கண்ணே — உன்னைப் பிரிந்திருபபது கண்ணில் இருட்டை வைத்துக் கொண்டிருப்பது போன்றது-நீ இல்லா வேளை துடிப்பில்லா இதயம்—விண் மீன் இல்லா இரவு-

ஒவ்வொரு நொடியும் நான் சாவை நோக்கி ஒவ்வொரு அடி எடுத்து வைத்துக் கொண்டே இருந்தேன். பதுவில் இந்த ஐந்து வாரங்களும் விளக்கின்றி சுரங்கத்தில் நடமாடு வது போலல்லவா இருந்தது எனக்கு—நான் என்ன செய்தேன்-என்ன நினைத்தேன்-எப்படி வாழ்ந் தேன் எனக் கொன்றுமே தெரி யாது.

கத்: நானும் அப்படித்தான்—நானும் அபபடித்தான்-நம்முடைய நினைவுகள் ஒன்றை ஒன்று பின்னிக் கிடந்தனவே யொழிய-பிரிந்து வெவ்வேறுகவில்லை—நான் உனக் குப் பல செய்திகள் கூறவேண்டும்-என்னைக் காவலில் வைத்து விட் டார்கள்—நான் வெளிக் கிளம்ப முடியவில்லை—நான் எவ்வளவு துன்பப்பட்டேன் தெரியுமா? கட வுளுக்குத்தான் அது தெரியும்—வெளியே தலை நீட்ட முடியாத வாறு காவலில் வைக்கப்பட்டேன் நான்—சர்வாதிகாரி சந்தேகப் பட்டே இவ்வாறு செய்து விட் டார். கடவுளே—உன் குரலைக் கேட்டு நான எங்கே யிருந்தேன் என்பதே எனக்குத் தெரியாது—அவ்வளவு மெய் மறக்கச் செய்தது உன் பாடல். எழுந்திரு—இப்படி வா—என் அருகிலே உட்காரு—மெல்ல பேசு—காலை வரையில் இங்கேயே என் அருகில் இரு—தப்ன் உன்னை வெளியேற்றுவாள்-கவலைப்படாதே—வான லோகம் அல்லது நீ என்று சொன்னல் நான் உன்னைத்தான் விரும்புவேன், வான லோகம் எனக்கு வேண் டாம்—நீ வேண்டுமானுல் தப்னைக் கேட்டுப் பார் — நான் அழுது கொண்டுதானிருந்தேன்—தப்ன்—மிகவும் நல்லவள்—ரெழினெல்லா அவள் மட்டும் என்ன—அவர்கள் இருவரும் இங்கில்லை யென்றால் நான் செத்தே இருப்பேன்—அவர் கள்தான் எனக்கு ஆறுதல் கூறி வந்தனர்—நல்ல உள்ளங்கள் அந்த இரண்டு உள்ளங்களும்—வேலைக் காரியாக இருந்தாலும் என் வேத னையை உணர்ந்தார்கள். காதலை மதித்தார்கள். போகட்டும்—என் நிலையை—என் பெயரையெல்லாம் தெரிந்து கொண்டாயல்லவா? நான் உனக்கு இவை யெல்லாம் மறைத் துத்தான் வைத்தேன்-அதற்காகக் கோபித்துக் கொள்ள மாட்டாயே-இதைப் போல நீ அடிக்கடி வர முடியுமா?

ரொ: ஆம்—வருவேன். அந்த மனிதன் எனக்கு உதவி செய் வான்—இல்லை யென்றால் வாழ முடியாது. நீ ஒன்றுக்கும் பயப் படாதே—நீ என்னைக் காதலிக்கி றாய்—நான் என் உயிராக உன்னைக் காதலிக்கிறேன். கடவுளுக்கு இது தெரியும்—நம்மை அவர் கைவிட மாட்டார். நீ—நான்—கடவுள்—இந்த மூவரைத் தவிர வேறு யாரும் இப்பொழுது விழித்துக் கொண்டிருக்கவில்லை. கவலைப் படாதே—

கத்: கவலையா—ப்—ஊ - இந்த இன்ப நேரத்தில் கவலை எப்படி வரும்—நான் உனக்கு-நீ எனக்கு-மற்றவர்களைப் பற்றி நமக்கென்ன.

ரொ: என் இன்பக் கடலே!

கத்: இரு—சற்றுப் பொறு—நான் உன்னை என் கண் குளிர பார்க்க விடு—காதலிக்கும் பொரு ளைக் கண் குளிரப் பார்பபது தான் இன்பம்—அந்த வாய்ப்பு எப்பொ ழுதும் கிட்டாது. என் கண்கள் ஆசை தீருமட்டும் உன்னை அள்ளி விழுங்கட்டும்—ஆம் நான் இப்

லிருந்து 1594—ம் ஆண்டு முடிய பலவிதக் கருத்துக்கள் அடங்கிய நாடகங்களை இயற்றினன்.

ஒருவன்—எழுத்தாளன், கவிஞன் என்ற பட்டத்தைப் பெற வேண்டுமானல், அதற்காக அவன் ஒவ்வொரு நிமிடத்திற்கும் மரணக் கயிற்றை முத்தமிட்டுத்தான் முன்னேற வேண்டியிருக்கிறது. அம்மரணக் கயிறறை முத்தமிடும் மன வலிமையற்றவர்கள் தன்னை வேறு வகையில்-தம் கொள்கையை வேறு துறையில் நுழைத்து விடுகின்றனர். ஒரு சாரார், அவ்விதக் கொடுமையைத் தாங்க முடியாமல் தெருவிலும், சாக்கடை ஓரத்திலும், தங்க இடமில்லாமல் மரத்தின் ஓரத்திலும், கட்டுக் கட்டாக எழுதிக் குவித்து, ஆதரிப்பாரற்று அனுதைப் பிணமாகவே இறந்திருக்கின்றனர் என்பதை வரலாறு எடுத்துக் காட்டுகிறது. ஆனல் ஷேக்ஸ்பியர் வறுமைக்குள்ளானலும் மற்ற எழுத்தாளர்களைப் போல் அவ்வளவு கீழாகப் போகவில்லை; சற்று ஆதரிக்கும் கூட்டமும் அவனுக்கு இருந்தது. எனவேதான் அவனல் முன்னேற முடிந்தது; உலகக் கவிகளுள் உன்னத இடம் பெற்றுத் திகழவும் முடிந்தது.

ஷேக்ஸ்பியர் வாழ்ந்த 16—ம் நூற்றுண்டில் அவன் எழுதிய நாடக வகைகளை நான்கு பிரிவுகளாக அக்கால மக்கள் பிரித்துள்ளனர். அதை ஈண்டு நினைவுபடுத்திக் கொள்ளத்தக்கது.

முதற் பிரிவு:

1. லவ்'ஸ் லேபர் லாஸ்ட்.
2. தி காமடி ஆப் எர்ரர்ஸ்.
3. எ மிட் ஸம்மர் நை... ட்ரீம்.
4. டு ஜென்டில்மென் ஆ... வெரோன.
5. ரோமியோ அண்ட் ஜூலியட்.
6. ரிச்சர்டு II.
7. என்றி VI.
8. ரிச்சர்டு III முதலாவன. இந்நூல்கள் யாவும் அவனது எழுத்தின் மதிப்பை எண்ணிப் பார்க்கும் அளவிற்குச் சிறந்தோங்க... இல்லையென்றாலும் கற்பனை நய... கருத்தோவியம் யாவும் அ... வளவாக தாழ்ந்த நிலையில் இல்... ஒருபடி உயர்ந்தே காட்சியள... தது.

இயற்கை

"வாழ்க்கையில் நிறைவும், குறைவும் இயற்கையாக வருவது.",

சான்ருேர்

சான்ருேர் என்பவர்கள் குறைகளை அறியாதவர்கள் அல்ல; குறைக... இருந்தும் அவைகளைத் திருத்தி... குணங்களை உண்டாக்கிக் கொண்ட... வர்களே சான்ருேர் ஆவர்.

அறியாமை

அறியாமை ஆண்டவன் இட்ட... சாபம்; அறிவு உயர்ந்த நிலைக்கு ஏற்றும் கருவி.

நரக வேதனை

சாத்திரப் பண்டிதர்களும், சாவோரும் நரகத்தைபற்றியே உளறட்டும். ஆனல், நமது நரக வேதனைகள் எல்லாம் நம் இதயத்திலேயே உள்ளன.

மூடன்-அறிவாளி

மூடன் தன்னை அறிஞன் என்று மதித்துக் கொள்ளுகின்ருன்-ஆனல் அறிஞனே தன்னை முட்டாள் என்று அறிவான்.

—ஷேக்ஸ்பியர்

ண்டாவது பிரிவு:
1. கிங் ஜான்.
2. தி மர்ச்சண்ட் ஆப் வெனிஸ்.
3. டேமிங் ஆப் தி ஷ்ரூ..
4. என்றி IV.
5. என்றி V.
6. தி மெர்ரி வைவ்ஸ் ஆப் விண்ட்ஸர்.
7. மச் அடோ அபௌட் நத்திங்.
8. அஸ் யூ லைக் இட்.
9. ட்வல்ஃத் நைட்.
10. ஆல் ஈஸ் வெல் தட் எண்ட்ஸ் வல் போன்றவைகளில் கற்ற ந்த பெரியவர்களின் நடையைப் லவே சிறப்புற்றுத் திகழ்ந் ன. இவை,மனிதப்பண்பாடுகளைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் சிறந்தோங்கி வளர்ந்திருந்தன என் றே துணிந்து கூறலாம். இதுவே இன்பியல் நாடகங்கள்.

ன்றாவது பிரிவு:
1. ஜூலியஸ் ஸீசர்.
2. ஹாம்லட்.
3. மெஷர் பார் மெஷர்.
4. ட்ராய்லஸ் அண்ட் கிர ஸிடா.
5. ஒத்தல்லோ.
6. மேக்பத்.
7. கிங் லியர்.
8. அன்டோணி அண்ட் கிளி யோபாட்ரா.
9. கொரியா லானஸ்.
10. டிமன் ஆப் ஏதென்ஸ் என் பன. இந்த மூன்றாவது பிரிவை எழுதும்போதுதான் கண்ணீர் விடும் அளவிற்குக் கொடுமை நிறைந்த காட்சியும், ஆற்றொணாத் துயரத்தையும் சமாளிக்க இயலாத நிலையைப் பெற்றான். தன் மகனும், தன்னைப் பெற்ற தந்தையையும் இழக்கும் பரிதாப நிலை ஏற்பட்டது. முன்பு இருந்த இன்பம் போலவும், நாடகத்தை எழுத உட்காரும்போது துள்ளித் துள்ளி அக மகிழ்ந்தெழுதும் உள்ளம் இழந்தான். என்றைக்குமே மனம் குழப்பத்திலிருந்தால், கவலைக்கு ஆளாகியிருந்தால் எதையுமே எழுதுவதற்கு இயலாது. அவ்விதம் விடம் கொடுக்கிறான். இருவரும் ஷைலக் இல்லம் நோக்கிச் செல்கின்றனர். அவன் நாட்கள் ஆகிவிட்டது. இனி தேவையான ஒரு பவுண்டு சதையே தவிர, பணமில்லை. என்றும், இந்த விவாதம் நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறது என்று அவன் கூறுகிறான். இருவர் அகத்திலும் சோகம்—கண்ணீர்—அதோடு வீடு வந்து சேருகின்றன. பெஸ்ஸானியா நடந்த சம்பவங்கள் யாவையும் தன் மனைவியான போஷ்யாவுக்குக் கூறுகிறான்.

மறுநாள். நீதிமன்றம் கூடுகிறது. நீதிபதியின் முன்பு ஒப்பந்தத் தாளை நீட்டுகிறான் ஷைலக். ஒப்பந்தத் தாளில் கையெழுத்திட்ட அன்ட்டோணியா நிற்கிறான். அன்ட்டோணியாவுக்கு ஆதரித்துப் பேசும்வகையில் வழக்கறிஞராக—மாறு வேடத்தில் போஷ்யா நிற்கிறாள். நீதிபதி பேச முற்படுகிறார்.

"அன்ட்டோணியா! இது நீ எழுதிக் கொடுத்ததுதானா?"

நீதிபதி அவர்களே, எழுதிக் கொடுத்ததென்னவோ உண்மைதான். ஆனாலும் மறுநாள் பணம் கொடுக்கச் சென்றால் வாங்க மறுத்துவிட்டார்" என்று கூறுகிறான். ஷைலக் குறுக்கிடுகிறான்.

"நீதிபதி அவர்களே! நான் குறிப்பிட்ட நாட்களுக்குள் வராமையால் பணம் வேண்டாம்; இப்போது எனக்கு வேண்டியது, ஒரு பவுண்டு சதை!"

வழக்கறிஞர் குறுக்கிடுகிறார்.

ஷைலக் அவர்களே!

"மனிதன் இரக்கக் குணம் படைத்தவன் என்றும், தவறுகள் நேரும்போது மன்னிக்கும் தன்மை கொண்டவன் என்பதையும் கேட்டிருக்கிறேன். அதன்படி அன்ட்டோணியார் செய்த குற்றத்தை மன்னித்து, பணம் வாங்கிக் கொள்வதுதான் நல்லது என்று கருதுகிறேன்."

"ஷைலக்! அதெல்லாம் முடியாது; தேவையானது ஒரு பவுண்டு சதை!" என்கிறான் அவன்.

"சரி! ஒரு பவுண்டு சதைதானே வேண்டும்?"

"ஆமாம்!"

சரி! உன் இஷ்டம்போல் அறுத்தெடுத்துக் கொள்! ஆனால் அந்த ஒரு பவுண்டு எடைக்குக் குறைவாகவோ, அதிகமாகவோ எடுத்துக் கொள்ளக்கூடாது; அதோடு ஒரு சிறு துளி குருதியும் கீழே விழக்கூடாது. எடுத்துக்கொள்!"

இந்த வார்த்தைக் கேட்டவுடன், பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம்போல் நின்று விடுகிறான் ஷைலக். பணம் கொடுத்தால் போதும் என்ற அளவுக்குக் கேட்கிறான். முதலில் வாங்க மறுத்ததற்காகத் திருப்பித் தர முடியாது என்ற வார்த்தைக் கூறப்படுகிறது. நீதிபதியும், ஷைலக் தோற்றுவிட்டதையும், அன்ட்டோணி செய்த குற்றத்தை மன்னித்தாகவும் குறிப்பிடுகிறார். அதுவரையில் போஷ்யாதான் வழக்கறிஞராக இருந்தது என்று தெரியாத அன்ட்டோணி, பிறகு போஷ்யாதான் தனக்கு வாதிட்டவள் என்பதை அறிந்து பெருமகிழ்வோடு அவளைப் பாராட்டுகிறான். அதோடு அனைவரும் வீடு திரும்புகின்றனர்.

அத்தகைய உன்னதமானதும், உள்ளத்தை உருக்க வைக்கும் வன்மையும் பெற்ற நாடகம், ஷேக்ஸ்பியரின் நாடகம். அவனது ஒவ்வொரு நாடகமும் மனித சமுதாயத்தைத் திருத்தும் வகையில் அமைந்துள்ளவை என்பது கற்றோர் அறிவர். உலகம் உள்ளளவும் அவனது நாடகங்கள், ஷேக்ஸ்பியர் உயிரோடு இருக்கிறான் என்பதை நினைவுபடுத்தக் கூடியது. நாமும் அதன்படி அந்த அறிஞனை—ஷேக்ஸ்பியரை நினைத்துக் கொள்வோமாக! அந்த உலக மகா கவி என்றும் வாழ்க!

நாட்டை விட்டு செல்வது

தாய்நாட்டை விட்டு வெளியேறுவது, உடலை விட்டுச்செல்லும் உயிர் போல்வது; ஒள்ளிய விளக்கை விட்டுச் செல்லும் ஒளி போன்றது.

சிறப்புடையது

கருணையால் கண்ணீர் தோய்ந்த முகத்தைக் காட்டிலும் உண்மையைக் காட்டும் முகம் வேறு கிடையாது. கண்ணீர் விட்டழுவதைக் கண்டு மகிழ்வதைவிட கண்ணீர் விட்டு இரங்குவது சாலச் சிறப்புடையது.

அழகு

திருட வேண்டும் என்ற எண்ணத்தை தங்கம் தூண்டுவதைவிட பன்மடங்கு அதிகமாகவும் விரைவாகவும் அழகு கிளறி விடுகிறது.

—ஷேக்ஸ்பியர்

7 AUG 1958

காலம் அழிக்காத கலைஞன்

இராம-அரங்கண்ணல்..

"கலைமன்றம்", துணிச்சலான காரியங்கள் பலதைச் செய்து வருகிறது.

அவைகளில் ஒன்று, உலக நாடக வேந்தர் 'ஷேக்ஸ்பியரின்' எழுத்துக்களை, தமிழில் தந்து வருவதும் ஆகும்.

அறிவு வேந்தனின் படைப்புகளை, இன்னொரு மொழியில் தரும் முயற்சி சாமான்யமானதல்ல; விளையாட்டுக்குரியதுமல்ல.

துணிச்சல், அதிகம், நமது கலைமன்றத்துக்கு!!

அதன் விளைவாகவே, ஷேக்ஸ்பியரைப் பற்றிய நினைவு மலர் ஒன்றும் வெளிவருகிறது.

முயற்சிகள் எப்போதும் பாராட்டப்பட வேண்டியவையே! அதனால் மகிழ்கிறேன்.

* * *

ஷேக்ஸ்பியர் — காலவெள்ளம் அழிக்காத ஒரு எழுத்தாளர்! அவருடைய நூல்கள் இல்லாத, நூலகங்களே, கிடையாது உலகில் ஆனால், அவரைப் பற்றிய வாழ்க்கைச் சரிதையை எழுதுவதென்றால் இரண்டொரு பக்கம் கூடத் தேவையில்லை; அவ்வளவு சுலபம். ஷேக்ஸ்பியரின் புத்தகங்களைவிட, அவைகள் மீது செய்யப்பட்டிருக்கும் விமர்சனங்கள் ஏராளம் என்று சொல்லப்படுவதுண்டு. ஏனெனில், அந்தளவுக்கு அவனுடைய எழுத்துக்கள், படித்தோரின் உள்ளங்களை, சிந்தனை வானில் சிறகடித்துப் பறக்கச் செய்திருக்கின்றன! ஷேக்ஸ்பியரின் நூல்களை, படிக்கும்போது, ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு புதுச் சுவை கிடைக்கும். அது, ஒரு நீர் ஊற்று! கவிதைச்சுரங்கம்! எழிற் பூங்கா!!

இப்படி எழும்பிய விமர்சனங்களின் விளைவு, **"திருடித்தான் புகழ் பெற்றான் ஷேக்ஸ்பியர்!"**, என்று சொல்லுமளவுக்குச் சென்றது.

ஷேக்ஸ்பியர், தானே எழுதாமல் வேறு ஒருவரைக் கொண்டு எல்லாவற்றையும் எழுதச் செய்து, தன் பெயரால் வெளியிட்டுக் கொண்டான் என்பதே, இவ்வண்ணம் கூறுவோரின் குற்றச்சாட்டு. புகழ் பெற்றோரைப் பழி கூறியே, பாராட்டுத் தேடும் ஆசை, பலருக்கு ஏற்படும் போலும் — இன்றல்ல; எப்போதும்! இதுபற்றி **பென்ஜான்ஸன்** என்பார் வழங்கிய கருத்துரை, கவனிக்கக் கூடியதாகும். ஷேக்ஸ்பியர், செத்ததும் மனம் வருந்தித் தீட்டினாராம் அவர்.

"சிங்கார அன்னம்!
தேம்ஸ் நதி ஓரத்தில்!!
பாடிற்று சிந்து!
தீட்டிற்று நூல்கள்!!
உருண்டோடும் காலம்!
ஒழியாது, அவர் நாமம்!!

பென்ஜான்ஸனும், ஷேக்ஸ்பியர் காலத்து எழுத்தாளர்தான்! 'உருண்டோடும் காலம்—ஆனால், என்றும் ஒழியாது அவர் நாமம், என்று அவர் தீட்டிய நூல்களைப் பற்றி, வர்ணித்திருக்கிறார், அவர். திருடன் என்றால், தீப்பொறி பறக்காமலா இருந்திருக்கும் — அதுவும், ஒரு எழுத்தாளரின் பேனாவிலிருந்து! உலகிலேயே, பொறாமையும் போட்டியும்தான், பேனாபிடித்தவர்களின் நிரந்தர வியாதியாயிருந்து வருகிறதே — என்றும். தப்பியிருப்பாரா, ஷேக்ஸ்பியர்?

* * *

அண்மையில் டில்லிமாநகரில் திரைப்படக் கர்த்தாக்களின் 'விவாத அரங்கு' நடைபெற்ற போது வங்க டைரக்டர் **பிமல்ராய்** என்பார், தீட்டியிருந்தார் ஒரு

ஆங்கில ஏடுகள்

ஆசிரியர்: A. S. வேணு அவர்கள் எழுதியவை.

Dravidasthan

[வடக்கு, தெற்கின் வரலாற்று உண்மையை வகையாக எடுத்துக் காட்டும் ஆராய்ச்சி ஏடு.]

Life of Annadurai

[அறிஞர் அண்ணாவின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வரலாற்று ஏடு.]

Verdict on Verdict

[தென்னாட்டு தி.மு.க.வின் ஜூலைப் போராட்டத்தின் விளக்க ஏடு.]

வியாபாரிகளுக்குக் கழிவு உண்டு

கலைமன்றம்

சென்னை-1

கட்டுரை. மனித சமூகத்தில், என்னும் மாறாத நிலையில் சில குணங்களிருப்பதாகவும் அந்தக் குணங்களைக் குறிப்பிட்டுத் தீட்டப்பெறும் எந்த சித்திரமும் அழியாமலிருக்கும் என்பதாக. **காதல்! கண்ணீர்! துரோகம்! விரோதம்! தாயன்பு!**—முதலியவைகள் என்று குறிப்பிட்டிருந்தார். இந்த எண்ணங்களில் அடிப்படையில் எழும்பும், எந்தச் சித்திரமும் காலத்தால் அழியாது என்றார். இதையே இன்னொரு பிரமுகரான **ராஜ்கபூர்** என்னும் வாலிப வளர்பிறையும், வலியுறுத்தியிருந்தார். உண்மையே! மனிதனின் மனதை ஆண்டாண்டு காலமாக ஆட்டிப் படைக்கும் குணங்கள், இவை. இன்று, ஒரு சாதாரண கதையையோ, நாடகத்தையோ, எடுத்துக்கொண்டால் கூட இந்த மனிதகுணங்களை வைத்தே அவை பின்னப்பட்டு வருகின்றன! ஆனால், அப்படிப் பின்னப்படுகின்ற யாவும், காலத்தால் அழியாததாகவா இருக்கின்றன? அல்ல! படங்களில் சிலகூட, ஒரு வாரத்தில், ஓட்டம் பிடித்து விடுகின்றன!! காரணம், என்ன? மனித குணங்களை வைத்துப் பின்னப்பட்ட கதைகளானாலும், எதற்கும் ஒரு அளவு இருக்கவேண்டும்! புளி, உப்பு, பருப்பு, காரம், ஆகியவைகளைப் போட்டு தயாரிக்கப் படுகிறது, சாம்பார். அதது, அந்தந்த அளவுக்கு, இருந்தால்தான்—வாய்க்கு ருசி. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகுமல்லவா! உப்பு அதிகமாகிவிட்டால், உண்ண முடிவதில்லையே!! அளவறிந்து, தீட்டப்படும், அரிய திறன், ஷேக்ஸ்பியரின் காவியங்களில் கிடக்கிறது. குணசித்திரங்கள் பேசும்போது, 'ஷேக்ஸ்பியர்' அந்தப் பாத்திரமாகவே, மாறிவிடுகிறார். பிறகுதான், அவருடைய சிந்தனை வடிக்கும் முத்துக்களை, நாம் காணமுடியும்! வைரக் குவியலை, ஒரேயடியாகக் கொட்டியிருந்தால், பார்ப்பதற்கு அழகாக இராது. அதே வைரங்களை, தங்கத்தில் வைத்துப் பதித்து, பேசரியும், நெகலசும் செய்தால், அழகு மிளிர்கிறது. அதே போலத்தான், அரிய விஷயங்களை, ஷேக்ஸ்பியர் சொல்லுகின்ற முறையும்; **"ரோமியோ ஜூலியத்"**, நாடகத்தில் இருகுடும்பங்களுக் கிடையே, சிறு விஷயங்களில்கூட மூளக்கும் சச்சரவை, அருமையாக எடுத்துக் காட்டுகிறார்! 'சிறுவயல்' சண்டைக்காக 'சுப்ரீம்' கோர்ட் வரையிலும்

கவிஞர் சுப்பு ஆறுமுகம்
எழுதியவை

பெண்ணின் பெருமை, கற்பின் உயர்வு அத்தனையும் சித்தரிக்கும் ஓர் அற்புத நாவல்.

நல்ல பெண்மணி

விலை ரு. 2-4-0

வீரத்தின் பிறப்பிடம், தாய்நாட்டின் பெருமையைப் பாருக்குரைத்த பண்பாளன் வரலாறு.

வீரபாண்டியன் கட்டபொம்மன்

விலை ரு 1-0-0

விபரங்களுக்கு:

கலைமன்றம்—சென்னை 1.

செல்லும் சுபாவக்காரர்களும் — அடிதடி, குத்து வெட்டு நடத்தும் தஞ்சை பிரபுக்களும்—இன்னும் இருக்கத்தான் இருக்கிறார்கள்! இது போல, 'ஜூலியஸ் சீசர்' நாடகத்தில் ஷேக்ஸ்பியர் தீட்டும் 'புரூடஸ்'கள் அரசியல் வானில், இன்னும் இல்லாமலில்லை!! கதைகளில் அவர் வைத்த சம்பவங்கள் மட்டுமல்ல, வீசிவிட்டுச் சென்ற வார்த்தைகள் உள்ளனவே, அவை —ஆகா! எண்ண எண்ண, இனிப்பவை; தின்ன, தின்ன, ருசிப்பவை. அன்னை, சித்தப்பாவிடம் சோரவிளையாட்டில் ஈடுபட்டதைக் கண்ட 'ஹேம்லட்' சொல்லுகிறான்—**"You are the queen; your husband's brother's wife!"** என்பதாக. **Husband's brother's wife**!—எவ்வளவு வலிமையான வார்த்தைகள். அம்பு போல் தைக்குமல்லவா, அவளுக்கு? இதுபோன்ற, ஈட்டி வீச்சுகள், நிரம்ப உண்டு அவருடைய எழுத்தில்! ஒரு இடத்தில் அதே நாடகத்தில், ஹாம்லட் பேசுகிறான் தனியாக, **"To be—or not to be...,"** என்பதாக, தன்னை எதிர்நோக்கியிருக்கும் பிரச்னைகளை எண்ணி. சுருக்கமான சொற்கள்! இதோ, அதே வார்த்தைகளை அள்ளி வீசுகிறார், நமது தோழர்— **"இருப்பதா? இறப்பதா? இதுவே, நம்முன்னுள்ள பிரச்னை!"**, என்பதாக. எவ்வளவு இனிமையும் பொருளும் இருக்கிறது, அந்த இரண்டு சொற்களில்! இப்படிச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அழகினை, மிக நன்றாக ரசிக்கலாம், அவருடைய எழுத்துக்களில். மேடைப் பேச்சிலும், நாடக எழுத்திலும் தனித்திறமை பெற விரும்புவோருக்கு அவருடைய 'பாணி', பெரும் பயன் தரும்! ஆனால், அந்த வாய்ப்பு இங்கேயிருக்கிறது, நமது தோழர்களுக்கு தமிழே, தகராறேச்சே! ஆங்கிலம் அறிய வாய்ப்பு எது!—அதை எண்ணும்போது, "யான் பெற்ற இன்பம் பெறுக இன்பம் வையம்!" என்று கூறமுடியாத நிலைமையை எண்ணி, ஒவ்வொருவரும் வருந்தத்தான் நேரும்.

அந்த வருத்தத்தைப் போக்கும் வகையில், தமிழறிந்தோருக்கு, ஷேக்ஸ்பியரைக் காட்ட, முன் வருகிறது, 'கலைமன்றம்'.

முயற்சிகள், பழுத்த பழங்களாக இருக்கவேண்டும், என்று எதிர்பார்ப்பவர்களில் நானும் ஒருவன்.

அந்த ஆசையை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன், **"ஒரு முறை அச்சிலேறிவிட்ட எழுத்துக்கள் எப்போதும் இருக்கும்"** —என்றார், ஒரு பேரறிஞர், எழுத்தாளர்களின் கடமையை உணர்த்தும் போது.

அப்பேருரை, 'வளர்பிறை'களுக்கு ஒரு வழிகாட்டியாகும்! பல, வளர்பிறைகளைத் தயாரிக்கும், **கலைமன்றத்தை வாழ்த்துகிறேன். அதன் முயற்சிகளை, நாடு வரவேற்கும் நிலை பிறக்கவேண்டுமென எதிர்பார்க்கிறேன்.**

சந்தா விபரம்

உள்நாடு

வருடச் சந்தா	12—0
ஆறு மாதச் சந்தா	6—0

வெளிநாடு

வருடச் சந்தா	13—0
ஆறு மாதச் சந்தா	6—8

மணிமகுடம்

கி.மா.பக்தவத்சலன்...

படிக்கும் முன் :

[இன்வெர்னஸ் நகரம் இருளில் மூழ்கி இருந்தது. இருள்—இயற்கையின் அந்தப் பயங்கர நிழல் எங்கும் பரவி இருந்தது.

விருந்தும் வேடிக்கையுமாகக் கிடந்த அந்த வெண்மாளிகை இப்போது வெறிச்சென்றிருந்தது. மாளிகையினுள் ஏறக்குறைய எல்லோருமே தூக்க மயக்கத்திலிருந்தார்கள். உறக்க மயக்கத்தின் பெரும் பிடிக்கு உள்ளாகாமல் இருவர் மாத்திரம் மாளிகையின் மறுபுறத்தில் உலாவிக்கொண்டிருந்தார்கள். தீயவர்கள் மாக்பெத்தும் அவன் மனைவியும்—கள்ளங் கபடின்றி, அழைத்ததும் ஆட்சேபிக்காமல், விருந்துண்டு களியாட்டங்களில் கலந்து, கண்டு களித்து உறங்கிக் கொண்டிருந்த ஸ்காட்லாந்து மன்னன் டங்கன் என்பானைத் தொலைத்துவிடத் திட்டமிட்டிருந்தார்கள்!...

உலகப் பெருங்கவி வில்லியம் ஷேக்ஸ்பியரின் உயிரோவியங்களில் ஒன்றாகிய **மாக்பெத்**தில் இதுவொரு துளி......]

இடம்: மாக்பெத் மாளிகை.

இருப்போர்: மாக்பெத், மாக்பெத்தின் மனைவி.

காலம்: நள்ளிரவு.

[மரம்போல் நின்றிருக்கிறான் மாக்பெத்]

மாக்பெத்சீமாட்டி: பிராணபதி! ஏன் பேசாமலிருக்கிறீர்?

மாக்பெத்: அன்பே! என்ன உன் எண்ணம்?

மாக்பெத் சீமாட்டி: சுந்தரா! சுற்றிவளைத்துச் சொல்வானேன்? கொலை... ஆமாம்; கொலை செய்துவிடவேண்டும்......

மாக்பெத்: (திடுக்கிட்டு) கொலை...! கொடியவளே, எப்படித் துணிந்தது உன் மனம் இப்படிக் கூற? ஒருத்தாரைப் பொறுத்துக் கொள்ளும் உன் உத்தமக் குணம் ஒழிந்துபோனது எப்போது? ஈவு, இரக்கமற்றக் கொடூர உருப் பெற்றது எப்போது? அமுதான உன் மனம் விஷமானது எப்போது? கொஞ்சும்மொழி சொல்லும் உன் குரலினிமை 'கொலை, கொலை' எனக் கூவிடக் கற்றது எப்போது?

மாக்பெத்சீமாட்டி: குறிபார்த்தவள் என்ன கூறினள்? தந்தையைப் போல நீரும் தளபதியாவீரென்ருள்! தள்ளமுடியுமா உங்களால் இந்த வாக்கு தப்பென்று?...

[மௌனம் சாதிக்கிருன் மாக்பெத்]

இரண்டாவதாக, இந்த நாட்டின் அரசராகும் அதிர்ஷ்டம் உங்களுக்கு இருக்கிறதென்ருள், இல்லையா?

மாக்பெத்: ஆமாம்...

மாக்பெத்சீமாட்டி: அப்படியாளுல், இன்னுமென்ன ஆலோசனை? காலத்தோடு கருத்தும் கலந்தால், முடிந்தமாதிரி யல்லவா நம் காரியம்?

மாக்பெத்: அன்பே! நீ என்ன சொல்கிருய்?...

மாக்பெத்சீமாட்டி: சொன்னுல் புரியாது; சுருக்குவழிதான்...... இந்த இரவு—டங்கனின் கடைசி இரவாக இருக்கவேண்டும். விடிவதற்குள் டங்கனின் ஆட்சிக் காலம் முடிந்துபோக வேண்டும். பொழுது விடிந்தால் (மாக்பெத் பரந்த மார்பினை தழுவியவண்ணம் மலர்ந்த முகத்தோடு) நீங்கள் ராஜா...நான் ராணி!

மாக்பெத்: அன்...பே!...

மாக்பெத் சீமாட்டி: நாவேன் நடுங்குகிறது? விடிந்ததும் நீங்கள் மன்னராக விளங்குவீர்கள். நிர்வாகம் உங்கள் கையில்! நீதி வழங்குவதும் நீங்கள்! தூற்றுவோரை இந்தக் கூர்வாள் துண்டு துண்டுகளாக வெட்டி வீழ்த்திக் கழுகுகளுக்கு இரையாகத் தூக்கியெறியும். பழியை உங்கள் விழியால் ஒழிக்கலாம். சிலரைப் பணத்தால் சிறைபடுத்தலாம். பதவி

எண்ணக் குவியல்

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்.

—திருவள்ளுவர்.

அண்டையன் பசியால் வாட அணங்
கோடு மாடிவாழ்தல்
மண்டையன் குற்றமன்று; மனிதன் செய்
சூழ்ச்சியம்மா!

—திரு. வி.க.

தனி ஒருவனுக்கு உணவிலை எனில்
சகத்தினை அழித்திடுவோம்!

—பாரதியார்.

ஏழை என்ஞெருவன் உலகில்
இருக்க லாகா தையா!

—தேசிகவிநாயகம் பிள்ளை.

இலையே உணவிலையே
கதியிலையே எனும் எளிமை
இனிமேல் இலை எனவே
முரசறைவோம்! முரசறைவோம்!

—பாரதிதாசன்.

எங்கே ஏழ்மையும் இல்லாமையும் இல்லாமல் இருக்கிறதோ அங்கே தான் மனிதத்தன்மை காணமுடியும்.

—லெனின்.

பாட்டாளிக்கு வேண்டியது பரமன் புகழல்ல; வயிறு நிறையஉணவே.

—தாகூர்.

கொடுத்து சு[illegible]ம் பாதந் தாங்கிகளாக்கலா[illegible]

மாக்பெத்: பாபமல்லவா?

மாக்பெத் சீமாட்டி: பாபமா! (இலேசாகச் சிரித்து) பாபத்தைப் பார்த்தவர்கள் யாரும் பார்த்திபராய் வந்ததில்லைப் பிரபு.

மாக்பெத்: அன்பே! இது அநியாயம், டங்கன்; சாந்தகுணத்தினன். அவரைக் கொல்லச் சதி செய்வதா? அதர்மம்!

மாக்பெத் சீமாட்டி: அதர்மம்! எது அதர்மம்? ஒருவன் பேரரசன் என்ற பெயரோடும் புகழோடும் விளங்க ஒன்றுமறியாக் கோடிக்கணக்கான உயிர்களை உல்லாசபுரியினர் தங்கள் கோலாகல உயர்வுக்காக யுத்தக்களத்தில் கொன்று குவிப்பது அதர்மம். குத்தவரும் மாட்டைக் கொல்வது —தடையாய் இருப்பனவற்றைத் தகர்த்தெறிவது அதர்மம். அப்படித்தானே?

மாக்பெத்: அன்பே! இரக்கமில்லா அரக்கரும் உறக்கத்திலிருப்போரைக் கொலை செய்ய அஞ்சுவரே! ஆகுமோ நமக்கிது? அகிம்சையால்...

மாக்பெத் சீமாட்டி: அகிம்சையாவது?... அகிம்சை!......அதெல்லாம் வார்த்தை அலங்காரம். பகலிலே பரலோகத்தைப் பற்றியும் இரவிலே இல்வாழ்க்கையின் இரகசியத்தைப் பற்றியும் ஆராய்ச்சி செய்யும் போலிப் பக்தர்களின் பித்தலாட்டப் பேச்சு அது. வலியவனை எளியவன் எதிர்த்தடிக்க வழி தெரியாததால் தப்பித்துக் கொள்ளச் சொல்லும் வஞ்சகச் சமாதானம் அது. மனிதருள் ஒருவன் மற்றொருவனை அடக்கி ஆள ஆசைகொண்டு சூழ்ச்சியால் உற்பத்தி செய்த ஸ்லோகம் அது!......

மாக்பெத்: கோமளவல்லி! கொஞ்சம் அடக்கு உன் கோபத்தை. கோபம் எவ்வளவோபேர் முன்னேற்றத்தை மின்னல் வேகத்தில் தோன்றிக் கொன்றிருக்கிறது. சினம், நீண்ட நாட்களாக நாம் அதிக பிரயாசையின் மூலம் சேகரித்த நற்பெயரையும் நலனையும் ஒரே விநாடியில் சீரழித்து விடக்கூடும். அழிவை மாத்திரமே அளிக்கவல்ல ஆத்திரத்திற்கு நாம் அடிமையாவதா? அன்பே! ஆலோசனை செய்துபார்! விருந்திற்கென வந்தவரை வஞ்சகமாகக் கொலை செய்வது விவேகமாகுமா? போர்க்களத்திலே—பகற்பொழுதிலே — நேருக்குநேர் நின்று போர்புரியும் போதினிலே டங்கனின் பிணத்தை நீ காணப் பிரியப்பட்டால் கண்ணிமைப்பதற்குள் உன் முன் கொண்டு வந்து காட்டுவேன். உறங்கிக்கொண்டிருக்கிற வேளையில் - உத்தமனை... அவன் உப்பைத் தின்று வளர்ந்த நான் கொல்வதா, வீரம்?

மாக்பெத் சீமாட்டி: நீங்கள் ஒரு கோழை!

மாக்பெத்: என்ன! நான் கோழையா?

மாக்பெத் சீமாட்டி: ஆமாம். நீங்கள் கோழைதான். கோடிக் கணக்கான உயிர்களை யுத்தகளத்தில் அரசனின் நன்மைக்காகக் கொன்று குவித்த நீங்கள் இன்று உங்கள் நன்மைக்காக...உங்களது உயர்வுக்காக அந்த அரசனைக் கொல்ல — வாய்ப்பும் வலிய வந்திருக்கிறபோது பின் வாங்குவது நீங்கள் கொண்டிருக்கிற கோழைத்தனத்தைத்தான் காட்டுகிறது.

மாக்பெத்: (குறுக்கிட்டு) அன்...பே!...

மாக்பெத்சீமாட்டி: வீண் வாதங்கள் விஷயத்தைப் பழுதாக்குகின்றன. இந்த இரவை நாம் வீணாகக் கழித்துவிட்டால்......இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சரிவர பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டால் இதற்காக நாம் நீண்டகாலம் வருந்தும்படியாக இருக்கும். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்வதுதான் கண்ணியம். (ஆவேசக் குரலில்) கொடுங்கள் அந்தக் கூர்வாளை (மாக்பெத் இடையில் தொங்கிக் கிடந்த வாளை உருவிக்கொள்கிறாள்) உருவத்தில் பெண்ணாயினும் உள்ளத்தில் ஆண் தன்மையுள்ளவள் உங்கள் மனைவி என்பதை நீங்கள் உணரும்படி செய்கிறேன். அரசனைக் கொன்று அந்த மணிமகுடத்தை உங்கள் தலையில் சூட்டும்வரை நான் அயரமாட்டேன்; எதற்கும் அஞ்சமாட்டேன்......

[போகப் புறப்படுகிறாள்]

மாக்பெத்: (தன் மனைவியைத் தடுத்து) அன்...பே!... நில்......நீ போகவேண்டாம்...... கூர்வாளை என்னிடம் கொடு. ஆத்திரத்தோடு ஒன்றும் செய்யாதே; காலம் அதனைக் காட்டிக்கொடுத்துவிடும்......என்றாவது ஒரு நாள் அரசரைக் கொலை செய்தது நாம் தான் என்பது ஒருவருக்கும் தெரியாமலா போய்விடும்? காவலாளிகள் கண்டுவிட்டால்...

மாக்பெத்சீமாட்டி: கையும் மெய்யுமாகப் பிடித்துவிடுவார்களே என்று கலங்குகிறீர்களா! அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்... அதற்கு அவசியமுமில்லை. கதிரவன் கிழக்கில் காட்சியளிப்பதற்கு முன்னால் காவலாளிகள் கண்விழிப்பது நடவாத காரியம்... அந்த மருந்து அப்படிப்பட்டது...

பிரிட்டனின் புதிய பிரதமர் சர். அந்தோணி ஈடன்.

மாக்பெத்: மருந்தா!

மாக்பெத்சீமாட்டி: ஆமாம். வழக்கப்படி அரசரோடு இரண்டு மெய்க்காவலர்கள் வந்திருக்கிறார்கள் அல்லவா, அவர்கள்—உறக்க மருந்து கலக்கப்பட்ட உணவை அருந்தியிருக்கிறார்கள்...

மாக்பெத்: இதெல்லாம்...

மாக்பெத்சீமாட்டி: முன்னேற்பாடு, மூளையிருப்பதால்! அடிமையாகப் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்வதைவிட ஒரு கணமேனும் அரசனாக வாழ்வதுமேல் அல்லவா! (கொஞ்சியபடி) உயிரே! காலத்தின் அருமையை நீங்கள்

இன்னும் உணரவில்லையே!......
போங்கள்...ம்...போங்கள்...

[மாக்பெத் இரண்டடி நகர்ந்து]

மாக்பெத்: அன்பே! இன்னு மொருமுறை நாம் இதைப்பற்றி ஆலோசித்து ஒரு முடிவிற்கு வரலாம்; அதற்கு நேரமும் இருக்கிறது...

ஷேக்ஸ்பியரைப் பற்றி......

1. காலத்தைக் கடந்தவர், ஷேக்ஸ்பியர்.

—காலரிட்ஜ்.

2. ஷேக்ஸ்பியரின் மூளையை உருவாக்கும் வேலை. உலகத்தை உருவாக்குவதை ஒத்தது.

—வில்லியம் ஜான்சன்.

3. ஷேக்ஸ்பியர் நமது கவியல்ல: உலகக் கவி.

—லேண்டர்.

4. என் வாழ்வில் நான் திருப்தியடைய ஒரு நல்ல காரணம் உண்டு. நான் ஷேக்ஸ்பியரைப் படிக்கமுடியும்; அவரின் ஆழ்ந்த கருத்துக்களைப் புரிந்து கொள்ள முடியும்.

—ஜான் கீட்ஸ்.

5. மனிதனின் அறிவொளியின் சக்தியை அறிய வேண்டுமானுல், நாம் ஷேக்ஸ்பியரை படிக்க வேண்டும்.

—வில்லியம் ஹாஸலிட்.

6. நாம் என்றும் உச்சரிக்க வேண்டிய வார்த்தைகளை எழுதியே ஷேக்ஸ்பியர் வாழ்ந்தார்.

—பன்னர்.

7. இயற்கையின் இனிய குழந்தை ஷேக்ஸ்பியர்.

—தாமஸ்கிரே.

8. ஷேக்ஸ்பியர் பலதரப்பட்ட மக்களின் மனதில் நுழையும் ஆற்றல் பெற்றிருந்தார். இந்த முறையில் அவரை இயற்கைக்கு ஒப்பிடலாம்,

—கீபுல்.

தொகுத்தவர்,-கலைக்கோவன்

மாக்பெத் சீமாட்டி: பாழாய்ப் போச்சு! இதைப்பற்றி இன்னெரு முறை பேசுவதற்கு அவசியமுமில்லை; அதற்கு அவகாசமும் இல்லை. களவுக்குப் பின்னுல் கதவையடைப்பதா! எக்கேடாவது கெட்டுப் போங்கள், எனக்கென்ன வந்தது?

[அழுதபடி படுக்கையில் அமருகிருள்]

மாக்பெத்: கண்ணீர்த் துளிகளைக் காட்டி, கல்லான என் மனதையும் கரைத்துவிட்டாய். உறுதி கொண்டு விட்டேன்; இன்னுமொரு விநாடியில் டங்கனின் பிணத்தை நீ காண்பாய்...

(போகத் திரும்புகிருன். மாக்பெத்சீமாட்டி எழுந்து அவன் வருகிருள்...)

நெஞ்சிக்கினியவளே! நேரிழையாளே! நீ இங்கேயே நில்! வாள்—டங்கனின் உதிரத்தைக் குடித்து உயிரை உறிஞ்சியதும் ஓடோடியும் வந்து உனக்குச் சேதி வழங்கும். எதைப்பற்றிய பயமும் எனக்கில்லை. தார்வேந்தனுக நான் ஆக வேண்டும் என்பதல்லவா உன் தணியாத தாகம்! மணிமகுடந் தரித்து மகிழ எத்தகைய மாபாதகங்களையும் ஏற்கத் துணிந்துவிட்டது என் மனமும். அதுவே உன் ஆசையுமானுல் நான் அதிர்ஷ்டசாலி!

மாக்பெத்சீமாட்டி: (மாக்பெத் கரங்களை பிடித்து முத்தமளித்து) இன்றே நாம் பாக்கியசாலி...ம்... வாருங்கள்...

(மாக்பெத் உருவிய வாளோடு தன் மனைவியின் பின்னுல் செல்கிருன்)

திரை விழுகிறது.

ஷேக்ஸ்பியரில் ஒரு வில்லன்

MPS

இரா. முத்து

நீதி மன்றத்தில் ஒரே கூட்டம். ஆனால் அங்கே ஒரு விதமான பயங்கர அமைதி குடிகொண்டிருந்தது. நீதிமன்றத்தில் கூடியிருந்த அனைவருடைய கண்களும் அம் மன்றத்தின் நடுவில் நின்று கொண்டிருந்த ஒரு கிழ உருவத்தின் மீதே படிந்திருந்தன. யாரையும் கவனிக்காததைப் போன்ற ஒரு அலட்சியப் பார்வையுடன் அந்த உருவம் தான் செய்து கொண்டிருந்த தொழிலில் கண்ணையும் கருத்தையும் செலுத்தியது.

தன் காலணியின் பின் புறத் தோலில் தன்னுடைய கூரிய கத்தியை மேலும் மேலும் தீட்டிக் கொண்டிருந்தது அந்த உருவம். அந்தக் கத்தி பளபளவென மின்னிக்கொண் டிருந்தது. கத்தியின் ஒன்றிய பக்கத்தில் நீதிமன்றமும் அந்தக் கத்திக்கு இறையாகப் போகும் அந்தோணியோவும் மாறி மாறித் தோன்றின. சட்டென அந்த உருவம் முகத்தைத் தூக்கிப் பார்த்தது. ஒரு புதிய வழக்கறிஞர் அப்போதுதான் வேகமாக மன்றத்தினுள் நுழைந்தார்.

வழக்கு துவங்கிற்று. வழக்கறிஞர் உடையமைப்பால் ஆண், உருவ அமைப்பால் பெண். அற மன்றத்தில் நிறைந்திருந்த மக்கள் விசாரணையைக் கவனிக்கவேயில்லை. அவர்களுடைய நோக்கும் நோக்கமும் வழக்கறிஞருடைய தீர்ப்பின் மேலேயே படிந்திருந்தன. வழக்கறிஞர் அந்த உருவத்தை நோக்கி" ஷைலக், அந்த வணிகனுடைய ஒரு பவுண்டு சதை உன்னுடையது, அறமன்றம் தீர்ப்பு கூறுகின்றது. சட்டம் அளிக்கிறது."

ஷைலக்கிற்கு மகிழ்ச்சி தாங்க முடியாத அளவிற்கு பொங்கி விட்டது. 'சிறந்த நீதிபதி, நல்ல வழக்கறிஞர்' என்று வழக்கறிஞரைப் போற்றினான். அந்தோணியோவை நோக்கி 'உம், தயாராக இரு' என்று உறுமினான்.

அப்பொழுது வழக்கறிஞர் "ஷைலக், பொறு, இந்த வாக்குறுதிச் சீட்டில் உனக்கு ஒரு

இராத்தல் சதைதான் உரியது என்று குறிக்கப்பட்டுள்ளது"

"ஆம், ஆம்' என்று ஷைலக் மகிழ்ச்சியுடன் தலையாட்டினான்.

"ஆனால்" என்றார் வழக்கறிஞர்.

"என்றால் பொறுத்திருக்க முடியாது, விரைவில் தீர்ப்பைக் கூறி முடியுங்கள். அந்தத் துரோகியின் சதை எனக்கு வேண்டும்" என்று அவசரப்பட்டான் ஷைலக்.

"வாக்குறுதிச் சீட்டுப்படி உனக்கு அந்தோனியோவின் ஒரு இராத்தல் சதைதான் உரியது. அவருடைய உடலிலிருந்து ஒரு துளி குருதிகூட சிந்தக்கூடாது. அப்படிச் சிந்தினால் உன்னுடைய சொத்து முழுவதும் அரசாங்கத்தைச் சாரும்" என்று தீர்ப்பைக் கூறிமுடித்தார் வழக்கறிஞர்.

ஷைலக்கிற்குத் தன் தலையில் யாரோ பெரிய கல்லைத் தூக்கிப் போடுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. நெடுநாட்களாக அவன் போட்டு வந்த திட்டம் ஒரு நொடியில் சீர் குலைந்து விட்டது.

"என்னுடைய பணத்தையாவது திருப்பிக் கொடுங்கள், நான் போகிறேன்" என்று கவலையுடன் கூறினான் ஷைலக்.

விருதை ந. இராமசாமி

இன்ப நிலா	1	0
வழுக்கி விழுந்தவள்	1	0
மலர்புரி ராணி	1	0
தளபதி	1	0
தாமஸ் மசாரிக்	1	0
இலட்சியப் பெண்	1	0
என் மகள்	0	8

கலைமன்றம் — சென்னை-1

"முடியாது, நீதி மன்றத்தின் தீர்ப்பை நீ பெற்றுக்கொள்' என்று ஒரே மனதாகக் கூறினார் அந்த வழக்கறிஞர். 'இல்லை, என்னை விட்டால் போதும் நான் போகிறேன்' என்றான் ஷைலக். 'அந்தோனியோவை நீ கொலை செய்ய முயன்றதால் உன்னுடைய சொத்தில் பாதி அரசாங்கத்துக்கும் பாதி அந்தோனிக்கும் உரியது, இது இந்த அறமன்றத்தின் தீர்ப்பு" என்று கூறிமுடித்தார் வழக்கறிஞர்.

ஷைலக், நாடகத் தந்தை ஷேக்ஸ்பியருடைய அழியாத நாடக உறுப்பினர்களில் ஒருவன்; 'வெனிஸ் நகர வணிகனில் தோன்றும் ஒரு வில்லன். அவன் ஒரு யூதன், கல்நெஞ்சக்காரன். தன்னுடைய மகள் ஒரு கிருஸ்துவனுடன் ஓடிப்போய் விட்டாள் என்பதை யறிந்தவுடன் அவன் தன் மகளுக்காகக் கவலைப்படவில்லை. அவன் கவர்ந்துகொண்டு சென்ற பணத்திற்காகக் கவலைப்பட்டான்." என்னுடைய மகள் என் காலடியில் பிணமாகக் கிடக்க வேண்டும். அவளுடைய காதுகளில் இருக்கும் காதுகளில் இருக்கும் நகைகள் எனக்கு வேண்டும். அவள் என் முன்னால் சவப்பெட்டியில் இருக்கவேண்டும். ஆனால் என்னுடைய பொன் நாணயங்களும் அந்த சவப்பெட்டியில் இருக்கவேண்டும்" என்று ஷைலக் இரக்கமென்பதில்லாத அரக்க மனத்துடன் தன்னுடைய நண்பன் டியுபாலிடம் கூறினான்.

அவனுடைய ஒரே குறிக்கோள் பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்பதுதான். ஷைலக் மனிதனுடைய சதையை விரும்பும் கொடிய

மிருகமல்ல. கிருத்துவர்கள் அவன் மீது சுமத்திய அவமரியாதையான செயல்கள் அவனுடைய உள்ளத்தை இரும்பாக்கிவிட்டன. சிறப்பாக அந்தோனியோ ஷைலக்கை எங்குக் கண்டாலும் 'கழுத்தறுக்கும் நாயே, நம்பிக்கையற்றவனே' என்று பல வணிகர்கள் முன் பழித்துள்ளான். சரியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த ஷைலக்கிற்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. தன் நண்பனுக்காக மூவாயிரம் பொன் நாணயங்கள் ஷைலக்கிடம் கடனாகக் கேட்டான் அந்தோணியோ. ஷைலக்கும் மகிழ்ச்சியுடன் கடன் கொடுத்தான். ஆனால் மூவாயிரம் பொன் நாணயங்களை மூன்று மாதத்துள் திருப்பிக் கொடுக்காவிட்டால் அதற்குப் பதிலாக ஒரு இராத்தல் சதை அந்தோனியோ அளிக்க வேண்டும் என்று ஷைலக் வாக்குறுதிச்சீட்டு பெற்றுக் கொண்டான்.

மூன்று மாதம் முறையாக ஓடியது. ஷைலக் பழிவாங்கும் மனத்தோடு அறமன்றத்தில் வழக்குத் தொடுத்தான்.

ஆனால் ஷைலக் நினைத்தவாறு மற்றவையெல்லாம் நடக்கவில்லை. எழுதில் ஏமாற்றப்பட்டான் ஷைலக். வழக்கறிஞரின் எளிமையான பேச்சினால் ஷைலக்கின் எண்ணக் கோட்டை சிதறியது.

ஷைலக் தன்னையும் தன்னுடைய மதத்தையும் நிந்தித்த அந்தோனியோவை பழி வாங்க முயற்சித்தான். ஆனால் முடியவில்லை தன்னுடைய சொத்து யாவற்றையும் இழந்து தன்னுடைய ஆற்றலையும் உடன் இழந்து வருந்துகிறான் ஷைலக். ஷேக்ஸ்பியரின் ஓர் ஒப்பற்ற நாடக உறுப்பினன் ஷைலக்.

❀

காதல்

காதல் கண்களால் நோக்க வில்லை; நெஞ்சத்தால்தான் ஊடுருவு கிறது.

உண்மையான அன்பு

மாற்றத்தைக் கண்டதும் மாறும் தன்மையுடைய அன்பு உண்மையான அன்பு அல்ல.

பட்சம்

பட்சத்துடனும், அன்புடனும் இருப்பது எந்தக் காலத்திலும் நன்று. பழிவாங்குதலைக் காட்டிலும் நிச்சயமாக பெருந்தகைமை உடையது.

மௌனம்

ஒருவன் வாய்ப்பேச்சைக் காட்டிலும் அவனது மௌனம் அதிகமான எண்ணங்களைப் பிரதிபலிக்கும்.

காதல் ஒரு சங்கிலி.

காதல் என்பது கண்ணுக்குத் தெரியாத ஒரு சங்கிலி! அதில் ஆண் பெண் என்னும் இரு உருவங்[illegible] எவருக்கும் தெரியாமல் பி[illegible] [illegible]கிறது. அந்தப் பிணைப்[illegible] விடு[illegible]ப்பு ஒன்[illegible] பிரிக்க [illegible]ல ஒழிய வேறு எதனாலும் பி[illegible]லாது.

தவறு

''காதலிப்பது தவறு என்[illegible] கூறவில்லை. ஆனால், ஒரு பெண்ணின் மீது மோகமேறி கொண்டு அவள் பின்னால் திரிவது தவறு என்கிறேன்''

—ஷேக்ஸ்பியர்

பகுத்தறிவு நூல்கள்

அறிஞர் அண்ணாதுரை

		ரூ.	அ.
வெற்றி முரசு	...	1	0
மகாகவி பாரதியார்	...	0	8
தீ பரவட்டும்	...	1	0
தேன் துளிகள்	...	1	0
புராண மதங்கள்	...	1	0
மறு மலர்ச்சி	...	1	0
இதன் விலை 3000	...	0	12
தேவ லீலைகள்	...	0	8
நமது முழக்கம்	...	0	8
அண்ணாவின் உவமைகள்	...	0	8

ஊடுருவி

நான்ஏன் நாத்திகன்? (இங்கர்சால்)		1	0
வால்டையர்	” ...	1	0
சீர்திருத்தம்	” ...	1	0
மதங்கள்	” ...	1	0
மூட நம்பிக்கை	” ...	1	0
அறியாமை	” ...	1	0
கடவுள்	” ...	1	0
மக்கள் உரிமை	” ...	1	0
தொழிலாளர் (மாஜினி)	...	1	0
நெப்போலியன்	...	1	0
ஒளி விளக்குகள்	...	1	0
மாஜி கடவுள்கள்	...	1	0
...த்துச் சிங்கம்	...	1	0
...ன்	...	0	8
... (எமிலிஜோலா)	...	1	...
...போ!	...	...	0
...க் த...	...	0	8
... திராவி... ...ல்வர்கள்		0	8
...ஆறு	...	0	8

...விருதை ந. இராமசாமி

...லா	...	1	0
... விழுந்தவள்	...	1	0
தளபதி	...	1	0
தாமஸ் மசாரிக்	...	1	0
கருமுகில்	...	1	0

		ரூ.	அ.
இலட்சியப் பெண்	...	1	0
என் மகள்	...	0	8

கவிஞர் சுப்பு ஆறுமுகம்

நல்ல பெண்மணி		2	4
வீரபாண்டியன் கட்டபொம்மன்		1	0

கோவி. மணிசேகரன்

புரட்சிப் புலவன் அம்பிகாபதி		1	0
ஜூலியஸ் ஸீஸர்	...	1	0

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

கசந்த கரும்பு	...	1	8
தனி அரசு ஏன்?	...	1	0
வாழ்க்கை வாழ்வதற்கே	...	0	12
இருண்ட வாழ்வு	...	0	12
கொலைகாரி	...	0	12
அவள் வாழ்வு	...	0	8
காதலும் கண்ணீரும் (அச்சில்)		1	0
மனைவி (அச்சில்)	...	0	12
முள் (அச்சில்)	...	1	0

மு. கருணாநிதி

தூக்கு மேடை	...	1	
களத்தில் கருணாநி...		1	
பெருமை...	...	1	
...	...	1	0
...	...	1	0
சிந்தனை ஆழி	...	1	0
இரத்தச் சுவடு	...	1	0
புராண போதை	...	1	0
பலிபீடம் நோக்கி	...	1	0
இன முழக்கம்	...	1	0
நச்சுக் கோப்பை	...	0	12
வாழ முடியாதவர்கள்	...	0	12
கொலைக்களம்	...	0	8
பெரிய இடத்துப் பெ... ...ன்	...	0	8
உணர்ச்சி மாலை	...	0	8
கருணாநிதியின் கருத்து... ...ரைகள்		0	8
தப்பிவிட்டார்கள்	...	0	6

ஸ்ரீ மகள் கம்பெனி

சென்னை — கோவை — மதுரை

காதல் உள்ளம்

மூலம்: விக்தர் யூகோ
தமிழ்: கவிஞர் வாணிதாசன்

காட்சி 5

கத்தேரினு—தீஸ்ப்.

தீஸ்ப் விளக்கோடு உள் நுழைகிருள்—திரும்பித் திரும்பிப்பார்த்துக் கொண்டே உள் நுழைகிருள். மேஜையின் மேல் இப்பொழுது தான் நிறுத்திய விளக்கைப் பார்க்கிருள்.

தீஸ்ப்:- ஊம். விளக்கு இன்னும் புகைகிறது.

(திரும்பிக் கட்டிலைப் பார்க்கிருள். கட்டிலருகில் சென்று சிலையை விலக்குகிருள்) அவள் தனியாகத்தான் இருக்கிருள். தூங்குவதாகப் பாசாங்கு செய்கிருள்! (அறையில் அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்து) இது அவள் கணவன் அறை. (மூடியிருக்கிற மற்ருெரு அறையைப் பார்த்து) இங்குக்கூட ஒரு கதவு இருக்கிறதோ?

கத்:- (எழுந்து உட்கார்ந்து என்ன செய்கிருள் என்பதைக் கவனிக்கிருள்) இது என்ன இது?

தீஸ்ப்:- இதுவா-இது சர்வாதிகாரியின் வெள்ளாட்டி—சர்வாதிகாரியின் மனேவியின் திருட்டை விளக்குகிருள். அவ்வளவுதான்.

கத்:- கடவுளே!

தீஸ்ப்:- என்ன என்ரு கேட்கிறீர்கள். ஒரு நாடோடி. நாடகக் கணிகை. பணத்திற்காகத் தன் கலையை—உடலை விற்கும் பேய் என்றெல்லாம் நீங்கள் என்னே

நினைக்கலாம். கூறலாம். அந்த உதவாக்கரையினிடத்தில்தான் பெரிய சீமாட்டி. மணமானவள். மற்றவர்கள் மதிப்பதற்குரியவள். பேரும் புகழும் உடையவள் சிக்கிக் கொண்டாள்-அந்த ஒழுக்கமற்றவளிடத்தில்-அவள் கையில். அவள் கூரிய நாகத்திற்கிடையில் பெரிய மனுஷி, செல்வத்திலே புரண்டு செல்வத்திலே வளர்ந்தவள். சீரும் சிறப்புமுடைய ராணி. அகப்பட்டுக் கொண்டாள். அந்தப் பேதை அவளைத் துண்டு துண்டாகப் பிய்க்கவோ சாகடிக்கவோ முடியும். பெரிய இடத்துப் பெண்களாம். ஆம் பெரிய இடத்துப் பெண்களெல்லாம் இப்படித்தான் வெளிக்குப் பெரிய இடம். உள்ளே-நாற்றம் வீசும் சேற்றுக் குட்டைகள். மற்றவர் கண்களுக்கு எதுவும் தெரியாது என்பது நினைப்பு. பணமும், புகழும், செல்வாக்கும் தங்கள் அடாத செயலை-ஒழுங்கீனத்தை மறைத்து விடுமென்று மனப்பால் குடிக்கிறார்கள். நானா விடுபவள். என் காலின் கீழ் ஒருத்தி அகப்பட்டுக் கொண்டாள். ஒன்றும் தெரியாதவள்போல் நடிக்கிறாள். ஊம். ராணியம்மா—உங்களுக்கு எங்கிருந்துதான் இவ்வளவு மனவுறுதி வந்ததோ தெரியவில்லையே. கள்ளக் காதலனை இங்கே மறைத்து வைத்துக்கொண்டு ஒன்றும் தெரியாதவர்களைப்போல பேசுகின்றீரே! உங்கள் ஆணையைக் கொண்டு என்னை விரட்டி விடலாமென்று நினைக்கிறீர்களோ? ஊம். முடியாது. என்னை ஏய்க்க முடியாதம்மா முடியாது.

கத்:- என்னம்மா இது.

தீஸ்ப்:- மறைத்து விட்டீர்களா?

கத்:- நீங்கள் ஏமாற்றப்பட்டீர்கள்.

தீஸ்ப்:- நானா. ஏன் பொய் சொல்கிறீர்கள். இங்கு இருந்தானே. அதோ நீங்கள் இருவரும் இருந்ததை அந்த நாற்காலிகள் இன்னும் கூறுகின்றனவே! ஏன் மறைக்கிறீர்கள். பெரிய இடத்திலெல்லாம் உண்மையைக் காண முடியாதுபோல் இருக்கிறது. என்னென்ன பேசிக் கொண்டீர்கள் இன்பமாக-இனிமையாக. ஆசை மீற பேசியிருப்பீர்கள். நான் உன்னைக் காதலிக்கிறேன்! என் உள்ளக் கடவுள் நீ! நான் உனக்கு. நீ எனக்கு. வாழ்வு நீ! வளம் நீ! வற்றுப் பொய்கை நீ! வான் மதி நீ! கடலலை நான்! தென்றல் நீ! தேன் சுவை நீ! செவ்விதழ் நான். இப்படிப் பலப் பல பேசியிருப்பீர்கள். இல்லையா. என்னைத் தொடாதீர்கள்.

கத்:- எனக்கொன்றும் விளங்கவில்லையே!

தீஸ்ப்:- அம்மா. ராணியம்மா. உடலை விற்கும் எங்கள் இனத்தைவிட கீழ்த்தரமாகவல்லவோ நீங்கள் இருக்கிறீர்கள். காசுக்காக நாங்கள் எங்கும்-எவர் முன்பும் பகலில் ஒரு மனிதனிடம் உரத்து சொல்கின்ற சொற்களை நீங்கள் இரவிலே வெட்கமின்றி ஆசை நாயகனோடு முணு முணுக்கின்றீர்கள். நாங்கள பகலில்—நீங்கள் இரவில் காலம் தான் வேற்றுமை. செய்கையல்ல. உங்கள் மணவாளர்களை வெளிப்படையாக நாங்கள் காசுக்காகக்-கவர்கிறோம். நீங்கள் காதலுக்காக.- களியாட்டத்திற்காக எங்கள் காதலரை மறைவாகத் திருடுகிறீர்கள். சுயநலம். ஏமாற்றம். ஒழுங்கின்மை-ஒழுக்கக் கேடு.

சீ... நீங்கள் ஒரு பெண் பிறப்பா. நாங்கள் யாரையும் ஏமாற்றமாட்டோமே. நீங்கள்! தாயை-தந்தையை-கட்டிய கணவனை-உலகத்தை-கூடுமானால் கடவுளைக் கூட ஏமாற்றுகிறீர்களே! பெரிய இடமாம். அரசக் குடும்பமாம். வெளியிலே பார். அரசக் குடும்பத்துப் பெரிய இடத்துப் பெண்கள். தங்களை மறைத்துக் கொண்டு கோவிலுக்குப் போகிறார்கள். ஒதுங்குங்கள். வழி விடுங்கள். எவ்வளவு மரியாதை. அவர்கள் தங்களை மூடிக்கொண்டிருக்கும் போர்வைத் துணியை விலக்கிப் பார்த்தாலல்லவா தெரியும். போர்வைக்கிடையிலே ஒரு ஆள்; சீ வெட்கக்கேடு. நான் சர்வாதிகாரியின் ஆசை நாயகி-வெள்ளாட்டி. நீங்கள் அவர் மனைவி. உங்களை அம்பலப்படுத்தி விடுகிறேன்.

கத்:- ஐயோ! கடவுளே... இது என்ன இது......

தீஸ்ப்:- எங்கே அவன்?

கத்:- யார்?

தீஸ்ப்:- அவன்-உன் ஆசை நாயகன்.

கத்:- நான் தனியாகவே இருக்கிறேன். இங்கு வேறு யாருமில்லை. உண்மையாகச் சொல்கிறேன். நான் தனியாகவே இருக்கிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பதே விளங்கவில்லை. நீங்கள் யார்?-ஐயோ ஏதேதோ பேசுகிறீர்களே! நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன். இவ்வளவு கோபமாக-ஆத்திரப்பட்டுப் பேசுகிறீர்களே. அதனால் வரப்போகும் நன்மைதான் என்ன?

தீஸ்ப்:- நன்மையா? நன்மை உண்டு. உங்களுக்கு அதில் ஐயமா? பெரிய இடத்தார். பக்திமான்கள். இவர்கள் பேச்சை நம்ப முடியாது. பொய்யும் புளுகும் தான் அவர்கள் வாயில் வரும். நன்மை இல்லாமலா இவ்வளவு ஆத்திரப்படுகிறேன். நீங்கள் ராணி. நான் நாடோடி. எனக்கென்ன அதைப்பற்றி. நீங்கள் சர்வாதிகாரியின் மனைவி. நான் ஒரு நடிகை. எனக்கு அதைப் பற்றிப் பயமில்லை. எங்கே அந்த மனிதன். காட்டு. இது மிகக் கேவலமானது. ஏதோ ஒன்றுமறியாதவர்கள்போல இன்னும் நடிக்கின்றீர்களே.

கத்:- ஐயோ. கடவுளே. இது என்ன இது. கடவுள் மேல் ஆணையாகச் சொல்கிறேன். என்னை நீங்கள்......

தீஸ்ப்:- எனக்குத் தெரியும் இங்கே ஒரு கதவு இருக்கிறதென்று. நிச்சயமாக அவன் அங்கே தான்.

கத்:- அது என் வழி பாட்டு அறை. வேறொன்றுமில்லை. அங்கு யாருமில்லை. என் விரோதிகள் யாரோ உங்களை ஏமாற்றிவிட்டார்கள். நான் தனியாக மற்றவர்கட்குத் தென்படாமல் மறைந்து வாழ்கிறேன். இது உங்களுக்குத் தெரியாதா?

தீஸ்ப்:- அதோ......

கத்:- சத்தியமாகச் சொல்கி றேன். அது என் [illegible]
அறை. கடவுள் [illegible]
தகங்களு [illegible]
தான் அ [illegible]
தீ [illegible]
அவ [illegible]
ம [illegible]

கத்:- ஐயோ!

தீஸ்ப்:- எதற்காக இன்னும் பைத்தியக்காரத்தனமாக பொய் சொல்லுகிறீர்கள். அதோ உங்கள் உள்ளத்தை-குற்றம் நிறைந்த உள்ளத்தை-பயந்த உள்ளத்தை உங்கள் தோற்றம் விளக்கிக் காட்டுகிறது. நீங்கள் இன்னும் மறைக்கப் பார்க்கிறீர்கள். இல்லை என்பது உண்மையானல் கூச்சலிடுங்கள். கோபப்படுங்கள். குற்றமற்றவர்களாயிற்றே ஏதோ நடக்கட்டும் பார்க்கலாம்.

(கீழே விழுந்து கிடந்த போர்வையைப் பார்க்கிறுள். ஓடி எடுக்கிருள்) உம் பார்த்தீர்களா? இதோ அவன் போர்வை இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்.

கத்:- கடவுளே!

தீஸ்ப்:- இது போர்வை அல்லவே. வந்த மனிதனின் போர்வையல்ல. ஏன் அப்படித்தானே சொல்வீர்கள். வேண்டுமானல் இது என் வேலைக்காரியினுடைய சேலை என்று சொல்லிக்கூடத் தப்பித்துக் கொள்வீர்கள். அதுதானே. நீங்

...ரட். டிரினிடாட் கவர்னர் சர். ஹெபெர்ட்
...ில் இளவரசி வந்திறங்கியதும் வரவேற்பு

கள் சொல்லப் போவதற்குமுன் நான் சொல்லுகிறேன். ஏன் அப்படித்தானே?

கத்:- நீங்கள் என்ன சொல்கிறீர்கள் எனக்கு விளங்கவில்லையே.

தீஸ்ப்:- உங்கள் வழிபாட்டு நாதானே அது. சரி. நல்லது கதவைத் திறவுங்கள்.

கத்:- ஏன்?

தீஸ்ப்:- நான் கடவுளை வணங்கப் போகிறேன். திறந்து விடுங்கள்.

கத்:- சாவி என்னிடம் இல்லை. இழந்து விட்டேன்.

தீஸ்ப்:- திறந்து விடுங்கள்.

கத்:- சாவியில்லையே......

தீஸ்ப்:- உங்களிடம் இல்லை. உங்கள் கணவரிடம் இருக்கிறது. சர்வாதிகாரியவர்களே! சர்வாதிகாரியவர்களே!

(சர்வாதிகாரியின் படுக்கை அறையை நோக்கி ஓடுகிருள் கத்தேரின அவள் முன் சென்று வழி மறைக்கிருள்)

கத்:- வேண்டாம்! வேண்டாம்! அந்தக் கதவினருகில் போக வேண்டாம். நான் உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லையே. என் தலைக்குத் தீங்கு தேடுகிறீர்களே! என்மீது உங்களுக்கு ஏதோ கொடூரம் இருப்பதாகவல்லவோ தோன்றுகிறது. இருங்கள். சற்று என்மீது இரக்கம் காட்டுங்கள். ஐயோ! போகிறீர்களே! சற்றுப் பொறுங்கள். ஒரே ஒரு விநடி. நான் உங்களுக்கு விளக்கிக் கூறுகிறேன். நீங்கள் இங்கு வந்தது முதல் நான் மருண்டுவிட்டேன். ஏதேதோ சற்றுக் கண்டிப்பான சொற்கள் கூறி விட்டேன். இருங்கள். சற்றுப் பொருங்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நீங்கள் ஒரு நடனப் பெண்ணு! எனக்கு உங்களைத் தெரியாதே! சத்தியமாகச் சொல்கிறேன் இங்கு யாருமில்லை. என்னை நம்புங்கள். ஆம் அந்தத் துப்பறிபவன்தான் இதற்கெல்லாம் காரணம். அந்தக் கொடியவன் உங்களை ஏமாற்றி விட்டான். அவன் பேச்சை நீங்கள் கேட்கலாமா? சற்றுப் பொறுங்கள். நான் ஒரு பெண்ணல்லவா? பெண்ணுக்குப் பெண் இரக்கம் கூடக் காட்டக் கூடாதா? ஒரு ஆணுக இருந்தால் எனக்கு இரக்கங் காட்டத் தவறமாட்டார்களே. பெண்மைக்காகவாகிலும் சற்றுப் பொறுங்கள். இவ்வளவு அழகு உங்களுக்கிருந்தும் இரக்கமில்லையே. நான் சொல்வதைக் கேளுங்கள். அந்தத் துப்பறிபவன். அந்த ஈவு இரக்கமற்ற கொடியவன்-வஞ்சகன். நான் சொல்வதைக் கேட்ட பிறகு கொந்து கொள்வீர்கள். என் மணளரை எழுப்பாதீர்கள். என்னைக் கொன்றுவிடுவார். என் நிலையை உணர்ந்தால், நீங்களே வருந்துவீர்கள். நான் குற்றவாளியல்ல. குற்றவாளியல்ல. உண்மையாகக் கூறுகிறேன். ஏதாவது துடுக்குத்தனம் செய்திருக்கலாமே யொழிய-நான் குற்றவாளியல்ல. நான் தாயற்றவள். தாயற்ற என் மீது சற்று இரக்கங் காட்டுங்கள். அந்தக் கதவினருகில் போக வேண்டாம்.

தீஸ்ப்:- முடியாது. ஊகும் முடியாது. உன் வேண்டுகோளை என் செவி ஏற்காது. கோமானே! கோமானே!!

கத்:- கூச்சலிடாதீர்கள். கடவுளே! வேண்டாம். அவர் என்னைக் கொன்றுவிடுவார். ஒரே ஒரு விநடி. கடவுளை வேண்டிக் கொள்

வதற்காகிலும் சிறு விநாடி பொறுங்கள். நான் ஓடி விடமாட்டேன். அதோ அந்தச் சிலுவையின் முன் மண்டியிட ஒரேயொரு விநாடி. அருள் கூறுங்கள்.

(சுவரில் மாட்டப்பட்டிருந்த பித்தளைச் சிலுவையைச் சுட்டிக் காட்டுகிறாள்) இதோ இந்தச் சிலுவையின் முன் தயவு செய்யுங்கள்!

(தீஸ்ப்பின் கண்கள் அந்தச் சிலுவையில் பதிகின்றன) என்ன சொல்கிறீர்கள். ஒரே ஒரு விநாடி எனக்குக் கொடுங்கள். என்மேல் நம்பிக்கையில்லையென்றால் என் அருகிலேயே இருங்கள். என்ன சொல்கிறீர்கள். நான் சாகத்தான் வேண்டுமென்பது உங்கள் முடிவாக இருந்தால் நான் சாகிறேன். ஒரே ஒரு விநாடி. வணங்குவதற்காக இந்த ஒரு விநாடி. (தீஸ்ப் விரைந்து அந்தச் சிலுவையைச் சுவரிலிருந்து எடுக்கிறாள்) இது என்ன சிலுவை. இந்தச் சிலுவை உங்களுக்கு எப்படிக் கிடைத்தது? இதைக் கொடுத்தது யார்? எப்போதிருந்து இதை நீங்கள் வைத்திருக்கிறீர்கள்?

கத்:- என்ன? இந்தச் சிலுவையா? இதைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்வதால் ஏற்படப் போவதென்ன?

தீஸ்ப்:- இது எப்படி உங்களுக்குக் கிடைத்தது? சொல்லுங்கள் உடனே சொல்லுங்கள்.

(தீஸ்ப் எடுத்து வந்த விளக்கு எரிந்து கொண்டேயிருந்தது; அந்த விளக்கின் அருகில் சிலுவையை எடுத்துக் கொண்டுபோய் திருப்பிப் பார்க்கிறாள். கத்தேரினா அதைக் கவனிக்கிறாள்)

கத்:- இதுவா. இது ஒரு கிழவி கொடுத்தாள். அதிலே இருக்கிற அந்தப் பெயர் "தீஸ்ப்" அந்தப் பெயர் என்ன [illegible] தெரியாது. அந்த ஏழைக் [illegible] யைப் பிரசியாவில் தூக்கிட க[illegible] யிழுத்துப் போனார்கள். [illegible] போது நான் சிறுமியாக இ[illegible] தேன். என் தந்தையே அக் சி[illegible] விகருத் தூக்குத் தண்டனை இ[illegible] வர். அழுது கெஞ்சி அவளை [illegible] னிக்கும்படி வேண்டினேன். [illegible] தையாக இருந்ததால் என் [illegible] கையைக் கண்டு அவளை மன்னி[illegible] விட்டார். அவள் உயிர் மீண்[illegible] அம்மா-உங்களைக் கெஞ்சுகிறே[illegible] என்னைக் காட்டிக் கொடுக்கவே[illegible] டாம். அவர் என்னைக் கொன்று விடுவார். தயவு செய்யுங்ள். அந்தக் கிழவி- தூக்குத் தண்டனையிலிருந்து என்னால் தப்பித்து விடப்பட்ட அந்தக் கிழவி இந்தச் சிலுவையை எனக்குக் கொடுத்து இது உனக்கு நன்மை செய்யும் என்றாள். இது தான் உண்மை. சத்தியமாகச் சொல்கிறேன் இந்தச் சிலுவையைப் பற்றிய செய்தி இவ்வளவு தான். இதை நீங்கள் தெரிந்து கொள்வதால் என்ன பயன். தீர்ந்தது என் வாழ்வு......

தீஸ்ப்:- (தனக்குள்) கடவுளே என் தாய்!

(கதவு திறக்கப்படுகிறது. ஆன் ஜெல்லோ படுக்கை உடையோடு வருகிறார்)

கத்:- (அரங்கின் முன் வந்து) என் கணவன்...! நான் செத்தேன்!

—தொடரும்.



உங்களுடன் சத்யாக்கிரக நேரத்தில் உழைத்த எல்லாக் காங்கிரஸ் பிரமுகர்களும் வந்து உங்களை வாழ்த்த வேண்டும்; அந்தத் தடபுடல் காட்சியை அந்தப் பேதை சந்திரா பார்க்க வேண்டும்; பரவசப்பட வேண்டும்; ஏங்க வேண்டும்; நீங்கள் அவள் அழகைக் குறித்து ஏங்குவதைப் போல!

15

கலாநிதி...

என்ன செய்தாலும் அசட்டுத்தனமாகவே செய்துவிடுகிறேன்—பார்த்தால் வில்லன்போல் இருக்கிறான்—பழகினால் கதாநாயகன் போல் இருக்கிறான்—மிகவும் நெருங்கிப் பழகினால்தான் ஒரு உப-கதாபாத்திரமாகக்கூட அவன் லாயக்கில்லாதவன் என்று தெரியும். பெயர்மட்டும் நல்லமுத்து என்று பெற்றோர்கள் அழகாக விட்டுவிட்டார்கள். பெயரை வைத்துக்கொண்டு ஒரு ஆளின் தன்மைகளைக் கணக்குப் பார்த்துப் பேசுவதும் சரியில்லைதான்; இருந்தாலும் பெயர் இவ்வளவு எதிர்மறையாகவா இருப்பது? எனக்கு என் பெற்றோர்கள் கலாநிதி என்று பெயர் இட்டிருப்பதுகூட அவ்வளவு பொருத்தம் இல்லை என்றாலும், ஏதோ ஒரு சராசரி மனிதனுக்குத் தேவைப்பட்ட கருணையாவது என்னிடம் இருக்கத்தான் செய்கிறது. இதைப் பற்றி நல்லமுத்துவே என்னிடம் எத்தனையோ முறைகள் புகழ்ந்திருக்கிறான்.

"நல்லமுத்து! எதற்கும் நம் மேற்பார்வையில் ஒரு வாடகை வீடு இருக்கட்டும். பார்த்து அமர்த்தி சாவி வாங்கிவா. சந்திராவிடம் இன்னும் மேலும் சகோதரனாகவே நடித்து, சமயம் வாய்க்கும்போதுதான் அவளிடம் சல்லாபம் புரியவேண்டியிருக்கிறது, இதோ ரூபாய் 500. போய்வா" என்று அனுப்பினேன். வீடு பார்த்து அமர்த்தி வந்துவிட்டேன் என்றான். நல்ல வீடாகத்தான் இருக்கும் என்று நம்பினேன். சொல்லி வைத்தாற்போல், பாலுவும் தனக்கு வீடு இல்லையே, குடிசை தீப்பிடித்துவிட்டதே என்று கெஞ்சினான்—சந்திராவோ தெருவில் நிற்கிறாள்—பார்த்தேன்—கிளி திறந்திருக்

கும் கூண்டைத் தேடி தானகவே வருகிறது என்ற வேட்டைக் குணத்தினல், விசால புத்தியுள்ளவன்போல நடித்து, அவனிடம் சாவிகொடுத் தனுப்பினேன். அவனும் வந்தனம் சொல்லிவிட்டுப் போனன்.

இரண்டு மூன்று நாட்களாயின. "வீடு வசதி எப்படி" என்றேன்.

"ரொம்ப வசதி! எங்களோடு நாலு ஐந்து ஏழைக் குடும்பங்களேயும் இணைத்து வைத்திருக்கிறோம்," என்றான்.

"மகிழ்ச்சி, எனக்கு நல்லமுத்துவுக்கெல்லாம் எப்போ விருந்து" என்று சாகசம் பேசினேன்.

"அடுத்த வாரமே" என்ருன்.

அப்படியே விருந்தும் "அரேன்ஞ்" பண்ணினன், சாப்பிடப் போனேம். சந்திரா எழிலுறப் பரிமாறினள். ஆகா! ஆகா! அவள் ஒரு அழகுச்சிலே! நான் அந்தச் சிலேயை மேலும் அழகுபடுத்தவேண்டிய சிற்பி! பாலுவோ, எங்களிடையே அவசரத்தால், சூழ்நிலேயால், குறுக்கிட்டுவிட்ட ஒரு அர்ச்சகன்' — இப்படியெல்லாம் பேசிக்கொண் டிருந்தது. என் மனம் என்னிடம். வெளியே வந்தேன். எதிர் வீடு சப்-இன்ஸ்பெக்டர் சந்தானம் ஐயர் வீடு என்பதைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது. நல்லமுத்து வீடு தேடியமர்த்திய லட்சணம் இனி என்ன பண்ண? அன்று முதல் பாலு—சந்திரா குடும்பத்தின் மேல் எனக்குப் பொருமையே வந்து விட்டது. எவ்வளவு பொருத்தமாகக் காணப்படுகிருர்கள், இருவரும். ஏககேரத்தில் அவர்கள் இருவரும் ஒருவரை நோக்கி ஒருவர் புன்னகை புரியும் காட்சி இருக்கிற... அதைப் பார்... தாலே போதும்... தோன்றுகிறது; ... அந்தப் பாலுவி... எமக்கும் கிட்ட... தோன்றுகிறது! எ... மனித வளர்ச்சி நி... படித்தானே! ஒவ்வொ... னும் முதலில் ரசிகன... தவன் தானே!

எப்படியாவது அ... அடைந்தே விடுவது என்று... கணம் கட்டிக்கொண்டேன்... முத்துவிடம் அன்று இரவெல்லாம் பேசினேன். எனக்கு நான் முன்பு "வெற்றிவேந்தன்" என்ருரு புனைப்பெயர் வைத்திருந்தேன். அதுபற்றி சில ஆசாமிகளுக்குத்தான் தெரியும். அந்த ஆசாமிகள் கூட நான் வெற்றி வேந்தன் என்ற புனைப் பெயரில் எழுதிய கட்டுரைகள் எல்லாம் இலக்கியப் புதுமை வாய்ந்ததாக இருப்பதற்காக, அவர்களது ஊர் சங்கத்தில் எனக்கு ஒரு பெரிய பாராட்டுக் கூட்டம் நடத்தப் போவதாகவும், அதற்கு என்னே வருமாறும் கூப்பிட்டிருந்தார்கள். அவர்கள் எழுதிய கடிதமே கவிதையாக இருந்தது, "வருக வெற்றி வேந்தரே வருக" என்று ஆரம்பம்! "நான வெற்றி வேந்தன்? இல்லே இல்லே. நான் வெற்றி வேந்தன் இல்லே—நான் தோல்விச் சிப்பாய்" என்று சொல்லிக்கொண்டே எனக்கு வந்திருந்த பாராட்டுக் கடிதத்தைக் கிழித்து தூர எறிந்தேன். நல்லமுத்து தடுத்தார். "பின்னே என்னுங்க நல்லமுத்து! பார்த்தால் ஒரு பெண்—அந்த பண்டாரப் பயல் பாலுவோடு

குதியாட்டம் போடுகிருள்—ஒரு நாள், ஒரே ஒரு நாள்......கெஞ்சினேன். தோற்கிறேன். அப்படிப் பட்ட நாளு வெற்றிவேந்தன்" என்று துடிப்புடன் கேட்டேன்.

"கலாநிதி! உங்களது துடிப்பை நான் உணருகிறேன். இன்னும் கொஞ்சம் பொறுங்கள். கிளியை எப்படியோ கொய்யா தோட்டத்திற்குள் கொண்டு வந்துவிட்டோம்—இன்னும் அதை கொய்யா மரத்திற்குக் கொண்டுவர வேண்டிய சின்ன வேலைதான் மீதி" என்று ஒரு பெருமூச்சுடன் முடித்தார்.

"நீர் ஒருத்தர். நான் எழுதுகிற டைலாக்கிலே எதையாவது படிச்சு வச்சுகிட்டு, என்னிடமே சமாதானப் படுத்துகிறீர்" என்று சலித்தேன்.

"சொல்வதைக் கேளுங்கள். நான் சொல்வதில் மனோதத்வம் இருக்கிறது"

"என்ன நல்லமுத்து?"

"சமீபத்தில் தங்களுக்குப் பிறந்ததின விழா நடைபெற விருக்கிறது. அதைமிகவும் விமரிசையாகக் கொண்டாட வேண்டும். டாட்டா பிர்லாக்களிடமிருந்து உங்களை வாழ்த்திவரும் தந்திகளைக் கூட நீங்கள் படிக்க நேரமில்லாதவர் போல காணப் படவேண்டும். **உங்களுடன் சத்யாக்ரஹ நேரத்தில் உழைத்த எல்லாக்**

மலேயாவிலுள்ள ஈப்போ பிரதேசத்தில் நிறுவப்பட்டிருக்கும் மிருக வைத்திய நிலையத்தில் முக்கிய டாக்டர்களான டாக்டர் எ. ஜி. புருக்கும், கே. வி. டியோர்வும் மிருகவியாதி கிருமிகள் சம்பந்தமான ஆராய்ச்சி செய்கின்றனர்.

காங்கிரஸ் பிரமுகர்களும் வந்து உங்களை வாழ்த்தவேண்டும் — அந்த நடபுடல் காட்சியை அந்தப் பேதை சந்திரா பார்க்கவேண்டும்—பரவசப்பட வேண்டும்—ஏங்க வேண்டும், நீங்கள் அவள் அழுகைக் குறித்து ஏங்குவதைப் போல'' என்று சொல்லி முடித்தார்.

யோசித்தேன்.

அவர் சொல்வதும் நல்ல யோசனை என்று எனக்குப் பட்டது.

எனது பிறந்த நாள் விழா பிரமாதமாகக் கொண்டாடுவதற்குள்ள ஏற்பாடுகள் செய்தேன். மேனாட்டாருக்கெல்லாம் அழைப்புகள் அனுப்பினேன். இந்த வேலைகள் எல்லாம், இரண்டு மாதங்களுக்கு முன்பே துவங்கின.

பாலுவிடம் சந்திராவையும் கூட அழைத்து வருமாறு பன்முறை மன்றாடி அழகாகச் சொன்னேன். நிச்சயமாகக் கூட்டி வருகிறேன் என்றான். என்னவோ இரண்டு மூன்று நாட்களாக அவளிடம் ஏதோ மனஸ்தாபம் போலிருக்கிறது. பத்திரிகை ஆபீசிலேயே தங்கினான். அந்த நேரம் பார்த்து அவனுக்கு குடிப்பழக்கத்தை உண்டுபண்ணி விட்டேன். இவ்வளவு இலகுவாக அவன் வலையில் விழுவான் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இப்போது சதா குடிதான். நான் ஆபீசில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மேனேஜரிடம் அந்த ரகசியப் பெட்டியின் சாவியைக் கேட்டு வாங்கி தானே எடுத்துக் குடித்துக் கொள்கிறான். ஆகவே, என் மகிழ்ச்சி மேலோங்கியது அவனிடம் குடிப்பழக்கம் வளர வளர, சந்திரா என் அருகில் நெருங்கி வருவது போலக் காணப்பட்டாள்— மகிழ்வுடன் இருந்தேன்.

அன்று பிறந்தநாள் விழா.

எல்லாத் தினசரிப் பத்திரிகைகளும் என் உருவத்தை தங்களது முகப்பில் அச்சிட்டு மகிழ்ந்து கொண்டன. ஜனாதிபதி, பிரதமர் களிடமிருந்தெல்லாம் வாழ்த்துச் செய்திகள் வந்தன. மேனாட்டிலிருந்து அந்தப் பெரிய வக்கீல் ஜேம்ஸ் என்பவரும் வந்திருந்தார் —வாழ்த்தினார்.

எனக்கு என்னமோ எதிலுமே மகிழ்வைக் காணோம்! யார் வந்து என்ன பண்ண? என் சந்திரா இன்னும் வரவில்லையே!

மாடியில் ஏறி உலவிக் கொண்டே, பாலு அவளை அழைதது வரப்போனானே அந்த கார் வருகிறதா என்று பார்த்தேன்.

ஆகா!

வந்துவிட்டது, அந்தக் கார்.

தடபுடலாக இறங்கி வந்தேன். எத்தனையோ பெரியவர்கள் கை கொடுக்க கையை நீட்டினார்கள்— அதையெல்லாம் தடுத்துவிட்டு, சந்திராவைக் காணவேண்டும் என்ற ஆசையால் வெளியே கேட் பக்கமே ஓடிவந்தேன்.

காருக்குள்ளிருந்து அந்த தரித்திரப்பயல் பாலு மட்டும்தான் இறங்கி வந்தான்.

"எங்கே" என்றேன்.

"உடலுக்கு சரியில்லை" என்று பல்லையிளித்தான்.

"நன்றி கெட்டவர்கள்" என்ற ஒரே வார்த்தையில் திட்டிவிட்டு பங்களாக்குள் சோர்ந்த முகத்துடன் போனேன். பாலுவும்

அக்கினிக் கோபம்

பதினைந்தாம் அத்தியாயம்

சோழ நாட்டில் கலை

சோழ மன்னன் இராஜராஜன் நடத்தும் கலை விழாவை முன்னிட்டு, சோழ நாடு ஒரே அமர்க்களமாக இருந்தது. ஆனால், இக் கலை விழா, உண்மையிலேயே கலை வளர்க்கும் கருத்திலோ, சோழ நாட்டுப் பெருமையை நிலை நிறுத்

தும் பணி
றதா என்
கடினம்
நலம்
தான
ஆட்
தான் –

கோவிம

கோலை மதித்து வாழ்வதுதானே பங்கமிலாக் குடிமக்களின் பண்பு?

சேன நாட்டிலிருந்து வந்திருந்தவர்கள், நாளை நடக்கப்போகும் கலை விழாவில், வெற்றி நமக்குத்தான் என்று வீர முழக்கம் கொட்டிக் கொண்டிருந்தார்கள். வெற்றி கிடைத்த பிறகு தமிழகத்துக் கப்பம் பெறும் தனிப் பெரும் பெருமை தமக்கேற்படும் என்ற களிப்பில், கலிங்கத்தையும், சேனநாட்டுச் சுற்றுப்புற நாடுகளையும் ஒரு முறை தம் கண்ணோட்டத்தில் ...கிப் பார்த்தார்கள்.

... அரண்மனையில் தனக்
... வசதி செய்து தரப்
... றையில், இசைப் புல
... த்திரர் ஆழ்ந்த
... மூழ்கிக் கிடந்
... றி சிஷ்ய கோடி
... புரிந்துகொண்

... ஆதிச்சதேவ
... யுறச் செய்
... யின் கார
... கொரு
... ாண
... கள்
... அவர்
... இரா
... ன்றி
... ாகத்
... ா

குறைத்துப் பாடத்தானா முடியாமல் போய்விடும்? ஆமாம்...**அக்கினிக் கோபம்**தான் ஆராய்ச்சிக்குரிய ஒரு இராகம்! என் பெயரும் அக்கினிமித்திரர்! பாடும் இராகமும் **அக்கினிக் கோபம்**! ஔடவ ஹாடவம்! நடபைரவி தரும் நல்ல இராகம்! ஆஹா......அதைத்தான் பாடவேண்டும்!' இப்படி அக்கினிமித்திரரின் மனம் தனக்குத்தானே கூறிக்கொண்ட பிறகு, அவர் வாய் ஒருமுறை, **'சகம பநிச-ச்நிபமகரிச'** என்று அக்கினிக் கோபத்தின் ஆரோசை, அமரோசையை அசைத்துப் பார்த்துக் கொண்டது.

அரண்மனையின் விருந்தினர் மாளிகையுள், சேன நாட்டு யுவராஜன் கேசவசேனனும், சோணாட்டு மன்னன் இராஜராஜனும் நடக்கப்போகும் காரியத்திற்கு அஸ்திவாரமமைத்துக் கொண்டிருந்தனர். கோழையாகிக் கிடந்த இராஜராஜனை தன் போதை வார்த்தைகளால் மயக்கிக் கொண்டிருந்தான் கேசவசேனன். ஆனாலும் தன் அண்ணார், சேன மன்னன் விஸ்வரூபசேனன், புறப்படும்போது, "பாண்டியனோடு பகை வைத்துக்கொள்வது பாம்போடு வாசம் செய்வதுபோல், பொதுவாக, தமிழகத்துத் தொடர்பு தேவையானதுதான்; ஆனாலும் பகைமை பயங்கரமானது; இது இத்தனை ஆண்டுகட் ...ப் பிறகு நான் தெரிந்துகொண்ட ...ண்மை" என்று கூறியது அவன் ...வில் வரத்தான் செய்தது. ...னும், 'தான் பிடித்த காலுக்கு ...று முயல்கள்' என்று கருதும் ...வசேனனுக்கு, அண்ணாரின்

புத்திமதிகள் ஆற்றில் மிதக்கவிட்ட மாவிளக்காகத் தோன்றியது!

தகாத எண்ணங்களுக்கு அடிமையாகிக் கிடந்த கேசவசேனன், சோழனோடு மட்டும் சொந்தம் பாராட்டுகிறுன் என்றல், அது தான் கிடையாது. அவன் எண்ணம் எப்படியாவது தமிழகத்தைச் சூறையாடுவது என்பதே. அந்தக் காரியம், சோழன்மூலம் நிறைவேறினல் என்ன? சேரன்மூலம் உருவாஞல் என்ன? இல்லே-பாண்டியன் மூலம்தான் பயன் தந்தால் என்ன? எப்படியோ, காரியம் நிறைவேற ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அச்சந்தர்ப்பம் முடிவில் தனக்கே சங்கடத்தை உற்பத்தி செய்துகொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லே என்பது கேசவசேனனின் முடிவான எண்ணம்!

பயந்து கிடந்த பாண்டியனேத் திரட்டிக கொண்டு வந்த படைகளேக் காட்டி "எதற்கும் அஞ்சாதே சோழ மன்ன! எடுத்த காரியம் வெற்றிப் பெற்றல், மகிழ்ச்சி! தோல்வியுற்றல், இருக்கவே, இருக்கிறது படைபலம்! எளிதில் பாண்டியனே முறியடித்து விடலாம்!" என்று தைரியமூட்டினன்.

* * *

மறுநாட் சூரியன், மேகக் கூட்டத்தோடு புறப்பட்டான். அந்தக் கருமேகக் கூட்டத்தோடு உறவாடி வரும் கதிரவனேக் காணும் போது, ஏதோ கலக்கமிருப்பதாகத் தென்பட்டது.

அரண்மனே முகப்பில் பெரிய, பெரிய பந்தல்களும், வாழை மரங்களும், மாவிலேத் தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. இசைக் கருவிகளின் முழக்கம் வானே முட்டியது. நாற்சந்திகளிலும், முச்சந்திகளிலும், பாணர் கூட்டம் யாழ் மீட்டிக் கலே விழாவைச சிறப்பித்துக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கு சோழப் பெண்மணிகள், கும்பல், கும்பலாகக் கூடி, நாட்டுப் பாடல்களேப் பாடி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். ஆனல், அரண்மனேயுள்......

ஆதிச்சதேவருக்குச் சாரீரம் சதி செய்துவிட்டது. ஆனல், அந்தச் சாரீரம் சதி செய்ததற்கு மூலகாரணம் ஒருவருக்குமே புரியவில்லே—புரியவும் முடியாது.

முந்திய நாள் இரவு, ஆதிச்சதேவருக்காக வைக்கப்பட்ட பாலில், அக்கினிமித்திரரின் சூழ்ச்சிக்குத் துணேயாக நின்ற சேவகன் ஒருவன், கலக்கிய மருந்து என்பதை, எவர்தான் அறியமுடியும்?

இசை ஞானி ஆதிச்சதேவரின் நிலேமை, எதிரிகளுக்கு எக்காளமாக இருந்தாலும், பாண்டிய நாட்டைச் சார்ந்த அனேவருக்குமே வருத்தம் சூழத் தொடங்கியது.

மாலே நடக்கப்போகும் இசைப் போட்டியில், பாண்டிய நாடு தோல்வியுறப் போவது திண்ணம் என்று பலர் எண்ணினலும், மன்னர் சுந்தர பாண்டியன் மட்டும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு தானிருந்தான். அதற்குக் காரணம் வேறென்றுமில்லே. எதிரே, ஏளனச் சிரிப்புடன்; தன் குருநாதர் ஆதிச்சதேவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த சாரங்கனேக் காணும்போது, 'வெற்றி ஒருபோதும் தன்னே விட்டு விலகாது' என்ற ஒரே நம்பிக்கை ரு தான்!

இசை ஞானி ஆதிச்சதேவர், வள் கரத்தக் குரலில் தன் அன்பி, பட்த் முங்கி

ர.

பாத்திரமான மாணவனை நோக்கி, "சாரங்கா! இன்று மாலை, பாண்டிய நாட்டுப் பெருமை உன் சாரீரத்திலும், புலமையிலும்தானிருக்கிறது. போட்டியின் வெற்றி, உன் மூலமாகத்தான் பாண்டிய நாட்டுக்குக் கிடைக்க வேண்டும்" என்றார். சாரங்கனும், உள்ளப்பூரிப்புடன், "ஆகட்டும் அடிகேள்!" என்றான். அவன் மனம் எங்கோ வான வீதியில சஞ்சரித்து, விதமான நட்சத்திரங்களைத் தொட்டுப் பார்ப்பது போலிருந்தது. இப்படி ஒரு சந்தர்ப்பம் அவன் கிடைக்க வேண்டுமென்று பல நாட்களாகவே கனவு கண்டு வந்தான். கனவு கண்முன் நடக்கக் காத்துக் கிடக்கும்போது, சாரங்கன் களிப்புக் கடலில் மூழ்கியதில் வியப்பாமோ? அதுவும் அவன், எதிர்பாராத அக... திரரிடம்......!

மன்னர் சுந்தர பாண... மகன் குலசேகரனைக் காண... ணினார். அதற்கு முக்கியக் கா... மும் இருக்கத்தான் செய்தது. ... தக் காரணம் வேறென்னவா... இருக்க முடியும்? சோழ நாட்டுச் சுற்றுப்புறத்தில் பதுங்கவைத்திருக்கும் தன் படைகளைப் பத்திரமாகப் பாதுகாக்க ஏற்பாடு செய்யத்தான்.

பாண்டிய மன்னர், சேவகன் ஒருவனை அழைத்து, இளவரசனை அழைத்துவர உத்திரவிட்டார். அவரும், அதற்குள் மாறுவேடமணிந்துகொண்டு எங்கோ புறப்பட்டார்.

பதினாறும் அத்தியாயம்

"யாரய்யா, நீர்?"

அரண்மனைத் தோட்டத்து ஆல மரத்தின் உச்சியில் அமர்ந்திருந்த சூர்யகாந்தன் எதைத்தான் அப்படி உற்றுக் கவனிக்கிறான்? அவன் சோழ நாட்டுக்கு வந்தது கலை விழாவை ரசிக்கத்தானே? பின், ஏன் இப்படி ஏதோ ஒருமாதிரியாக—சிந்தனைக் கீறல்கள் நிரம்பிய முகத்துடன் காட்சியளிக்கிறான்? அவனே புதியவன்; அரண்மனை விவகாரங்களில், யாருக்குமில்லாத ...க்கரை அவனுக்கேன் ஏற்பட்... இதற்குக் காரணம், ஒன்று ...த்தான் செய்கிறது! இல்லாமலிருந்தால், உணவையும் பொருட்படுத்தாமல் இப்படி ஒற்று வேலைக்கு உடன்பட்டிருப்பானா?

மரத்தின் உச்சியிலமர்ந்திருந்த சூர்யகாந்தன், சேன நாட்டு வீரர்களின் ரகசியங்களைச் சேகரிக்கும் பணியிலீடுபட்டுக் கொண்டிருந்தான். ஏன், ஒரு சமயம் ருத்ரசேனன், சோழ நாட்டு விஷயத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டு வரும்போது, பேச்சுப் போக்கில், உருத்திரப்பட்டரைப் பற்றியும், வாமதேயரைப் பற்றியும் சொல்

லவே, அந்த இருவர் யாராயிருக்க முடியும் என்ற உண்மை அறியக் கூட முனைந்திருந்தான்.

அரண்மனை உப்பரிகையில் நின்று, சோழ நாட்டுக் கலை விழாவின் வேடிக்கைகளை ரசித்துக் கொண்டிருந்த இளவரசி சாருமதி, ஆலமரத்தின் உச்சியில் அமர்ந்து எதையோ கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த சூர்யகாந்தனைக் கண்டுவிட்டாள். எதற்காக இந்த மனிதன் தனிமையில், அதுவும் ஆலமரத்தின் உச்சியில் அமர்ந்து வேவு பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழவே, உப்பரிகையை விட்டு கீழே இறங்கினாள்.

மரத்தின் உச்சியிலமர்ந்து மனத்தை எங்கோ செலுத்திக் கொண்டிருந்த சூர்யகாந்தன், "யாரய்யா, நீர்?" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டான். மறு கணம் அவன் கண்கள் கீழே நோக்கின. நோக்கிய கண்கள் சிறிது நேரம் இமைக்க மறந்தன.

மரத்தை விட்டுக் கீழே இறங்கி வந்த சூர்யகாந்தன், சுற்று முற்றும் பார்த்தான். அப்போதுதான் அவனால் அறிய முடிந்தது, அந்தப்புரத்துள் நுழைந்து விட்டோமென்று. என்றாலும் பரவாயில்லை, இவள் ஒரு தோழிதானே தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணி, மீண்டும் அவளை ஒருமுறை நோக்கினாள்.

என்ன சௌந்தரியமான முகம். பார்க்கப் பார்க்கத் திகட்டாத பால் வழியும் முகத்தைப் படைத்த இந்தப் பாவை, உண்மையிலேயே தோழியாகத்தானிருக்க முடியுமா? ஒருவேளை, கலை விழாவிற்கு வந்த ஒரு கலாபூஷணியாக இருப்பாளா? இப்படி எண்ணத்திற்குச் சிறகு தந்து, கற்பனைவானில் பறந்து கொண்டிருந்த சூர்யகாந்தனை, சாருமதி "யாரய்யா, நீர்? இப்படி வெறிக்க வெறிக்கப் பார்க்கிறீர்?" என்றாள் மீண்டும். அவனும், தன்னைச் சமாளித்துக்கொண்டு, "முதலில் நீயாரென்று சொல்; பிறகு நான் சொல்லுகிறேன்" என்று தைரியமாகவே கூறினான்.

சாருமதிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. இப்படி அவன் கேட்பான் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. அந்தக் கோபத்தின் உச்ச நிலையின் காரணமாக, தன்னை மறந்து, உணர்ச்சிக் கடிவாளங்களை இழக்கப்பட்டக் காரணத்தால், "என்னையா யாரென்று கேட்கிறாய்? இப்படி அந்தப்புரத்தில் நுழைந்து, அவமதித்துப் பேசியதற்கு, உன் நாவை துண்டிக்கும் அதிகாரம் பெற்றவள்!" என்று படபடப்பாகக் கூறி முடித்தாள்.

"ஓஹோ! மஹாராணியோ?"— சூர்யகாந்தன்.

"இன்னும் அந்த 'மஹா' பட்டத்திற்கு வரவில்லை; இளவரசி பட்டத்திலேதான் இருந்து வருகிறேன்."

சூர்யகாந்தன் திகைத்து விட்டான். அந்தத் திகைப்பை அவள் எங்கே புரிந்துகொள்ளப் போகிறாளோ என்று எண்ணி, போலிச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, கொஞ்சம் சத்தம் போட்டே சிரித்தான்.

சூர்யகாந்தன் சிரிக்கும்போது, கன்னத்தில் விழுந்த குழி, சாருமதியைப் பெரிதும் மயக்கி அவள் கண்கள் இலேசாகப் படபடத்தன. அவனும் அவளை விழுங்கி விடுபவன்போல் பார்த்தான்.

"நீங்கள் யார்?"—சிரிப்பில் மயங்கிய, சிங்காரி சாருமதி இப்போது வார்த்தைகளுக்கு மரியாதை கற்பித்தே வெளியாக்கினாள். அவள் மனத்துள் இவன் ஒரு நாட்டு இளவரசனாக இருக்கலாமோ, என்ற ஐயம் ஏற்பட்டது.

"நானா, இளவரசியாரே! நான்.... நான் பாண்டிய நாட்டுப் படைத் தலைவன்!"

சாருமதிக்கு ஆச்சரியமட்டுமல்ல, ஒரு விதத்தில் ஏதோ, ஒரு ஆனந்தமும் அரும்பத்தான் செய்தது.

"படைத் தலைவர்? அதுவும் பாண்டிய நாட்டிற்கு! வீரரே! நீரா இப்படி, கன்னிமாடத்துள் நுழைந்து வேவு காண முனைந்தீர்? வெட்கக் கேடுதான்!"

"ஏன்...?"

"கன்னிமாடத்துள் வேவு கிடைக்குமா? கன்னியர்களின் காற்சதங்கையின் ஓசையல்லவோ கேட்க முடியும்?"

சூர்யகாந்தன் சிரித்தான்.

"நன்றாகச் சொன்னீர் இளவரசியாரே! காற்சதங்கை மட்டுமல்ல, வாய்ச்சதங்கையும் கேட்கும்!"

"வாய்ச்சதங்கையா?"

"இம்...! இரகசியமே, நிற்காத இடம் பெண்களின் இதயங்கள் தாமே? அப்படி இருக்க என்னைப் போன்றார் உண்மையறிய வேண்டுமானால்?"

"கலை விழாவிற்கு வந்த உமக்கு, ஒற்று பார்க்கவேண்டியதின் அவசியம்?"

"இருக்கிறது, இளவரசியாரே என் நாட்டிலிருந்து துரோகி ஒருவன் இங்கு வந்ததுமல்லாமல், இரு பெரும் நாடுகளுக்கும் குழப்பம் உண்டாக்கி வருகிறான். பெயர் கூட உருத்திரப்பட்டரோ...வாமதேயரோ என்னவோ, எனக்கே மறதியேற்பட்டிருக்கிறது."

சூர்யகாந்தன் சாமர்த்தியமாகப் பேசினான். அவன் பேச்சில் மயக்கும் சக்தி மண்டிக் கிடந்தது.

"ஓ...அதுவா? பாண்டிய நாட்டிலிருந்து வந்து, வேஷம் போடும் அந்த வாமதேயனைத்தானே சொல்லுகிறீர்?"

சூர்யகாந்தனும் இதுதான் நல்ல சமயமென்றெண்ணி, 'ஆமாம்—ஆமாம்' என்றான்.

"அவன் ஒரு வேஷதாரி. எனக்குக் கொஞ்சம் பிடிக்காது. அவனுக்குச் சொந்தபெயர்கூட விழுப்பரையர் என்று சமீபத்தில்தான் கேள்விப்பட்டேன். நாகத்தைப் பொன் கொடுத்து வாங்கியது போல், சேனநாட்டு உறவை இந்தச் சண்டாளன் அப்பாவுக்குப் பெற்று தந்திருக்கிறான்."

"எல்லாவற்றிருக்குமே ஒரு நல்ல முடிவு ஏற்பட்டுவிடும் இளவரசியாரே! எதற்கும் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும்! சந்தர்ப்பம் நினைத்தபோது பார்க்கமுடியாத வானவில். அது வந்தாலும் அதிக நேரம் நீடிப்பதும் கிடையாது. அந்தக் குறுகிய காலத்துக்குள்ளே, காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டும்?"

இதற்குள் ருத்ரசேனன் அவ்விடத்திற்கு வந்துவிடவே சாருமதிக்கு என்னமோ போலிருந்தது.

"என்ன சூர்யகாந்தா! என்னைக் காக்கவைத்து விட்டு உன்பாட்டில் இங்கு உரையாடிக்கொண்டிருக்கிறாய். காத்திருந்து, காத்திருந்து கடைசியில் நானே வரநேர்ந்தது.

...ாமிறங்கியது வேறு, நீ
... வேறு!" என்று இழுத்
...போல் கூறினன் ருத்ர
...

...ருக்கட்டும்......! முதலில்
...டி இங்கு வந்தீர்? அதைச்
...லும்!"—சாருமதி கோபமா
... கூறினள்.

"அடேயப்பா..."—ருத்ர சனன் வாயெடுத்ததுதான் ...மதம், "ருத்ரசேன! இளவரசி!" என்று கூறினன் சூர்யகாந்தன். ருத்ரசேனனும், பயந்து மரியாதை செய்தான். அதற்குள், சூர்ய காந்தனும், "இளவரசியாரே! இவன் என் நண்பன். நான் வழி காட்டினேன் இங்குவரச சொல்லி. உண்மையில் எங்களுக்கு இது அந்தப் புறம் என்று தெரியாது" என்றான். சாருமதியும் சிரித்தவண்ணமாக அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு, உடனே தரையை நோக்கினள், நாணத்தால் முகம் 'குப்' பென்று சிவந்ததால்!

கலை விழாவின் துவக்கத்தை, கோட்டை மணி அறிவித்தது. சாருமதி பிரியப்போகும் அந்தச் சமயத்தில், 'சூர்யகாந்தன்' என்று ஒருமுறை தன் மனத்துள் உச்சரித்துக் கொண்டாள். சூர்யகாந்தனும் அவளிடம் பிரிய விடை பெற்றுப் பிரிந்தான்.

—

பதினேழாம் அத்தியாயம்

நெருப்பின் ஜுவாலை!

கலை விழாவின் காரணமாக சோழனின் கொலு மண்டபம் 'காணக் கண் கோடி வேண்டும்' என்று வியக்குமளவிற்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பக்க நாடுகளிலிருந்து வந்திருந்த குறுநில மன்னர்களும், அந்நாட்டைச் சார்ந்த கலைஞர்களும் வந்திருந்தனர். சேரன் மட்டும் ஏனே விழாவில் சேர்ந்து கௌரவிக்க மறுத்துவிட்டான். வீரத்தின் விளை நிலத்தில் விவேகத்தோடு ஆட்சி செய்யும் சேர மன்னன், சோழனின் சூழ்ச்சியும், அந்தச் சூழ்ச்சிக்குப் பாண்டியன் ஒரு வேளைப் பலியாய் விட்டாலும் விடலாம் என்று தொல்லையின் காரணமாக, தான் கலந்து கொள்ளாமலிருப்பதுதான் தகுந்தது என்று முடிவிற்கு வரவே, தனது பயணத்தை நிறுத்திக் கொண்டான்.

பல நாட்டு மங்கையர்களில் நடமாட்டம், கொலு மண்டபத்தை இன்னும் அழகுப்படுத்தியது.

எல்லோரும் அமர்ந்து மன்னன் இராஜராஜனுக்காக எதிர்பார்த்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம், சோழ மன்னன் இராஜராஜனும், பாண்டி மன்னன் சுந்தர

திரை செலுத்தியே தீரவேண்டும். தவறினல் போர். இதை நீங்கள் அழைப்பில் கண்ட பிறகே இங்கு வந்தமர்ந்திருக்கிறீர்கள். இப்போது, சேன நாட்டு இசைக் களஞ்சியம் அக்கினிமித்திரர் முதல் தன் இசைப் புலமையைக் காட்டுவார். பிறகு அவருடன் போட்டியிடத் தயாராக இருக்கும் நம் தென்னகத்து இசை ஞானிகள் தயாராகலாம்."

சோழ மன்னன் இராஜராஜன் சொல்லி முடித்ததும் சிங்காசனத்திலமர்ந்தான். அவன் கூறிய அந்த வார்த்தைகள், பாண்டிதேவனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. உடனே எதையோ சொல்ல எழுந்தார். ஆனல், கண்களில் கவனத்தைப் பொறுத்தி நின்று கொண்டிருந்த சூர்யகாந்தன், "மன்னவா!" என்று அழைக்கவே, பாண்டிய மன்னர் பதுமை போல மர்ந்துவிட்டார்.

அக்கினிமித்திரர் பாட ஆரம்பித்தார். அவர் பாட்டில் ஏதோ ஒரு வழ வழப்பான இனிமை இருக்கத்தான் செய்தது. தென்னகத்து இசையைச் செவிமடுத்தவர்களுக்கு, புதுப் பாணியில் பாடிய அவர் பாட்டில் ஏதோ புதுமை இருப்பதாகக் கண்டார்கள். தன் முழுத் திறமையைப் பிரயோகித்த அக்கினிமித்திரர், பாடலை முழுக்கப் பாடி, சுரக் கோர்வையைச் செலுத்தி, முடிவில் முத்தாப்புடன் நிறுத்தினர். அவையில் பெருத்த கரகோஷம்.

சோழ மன்னன் இராஜராஜன் கம்பீரமாக எழுந்து நின்றுன் அவன் கண்கள் ஒருமுறை கொலு மண்டபத்தைச் சுற்றி வந்தன.

"இந்த அவையில், அக்கினிமித்திருடன் போட்டியில் எவரேனும் இருக்கிறார்களா?"—சோழ மன்னன் கர்வமாகவே கேட்டான். சோழனுக்கு அந்தச் சமயம் தன் தாயைத் தானே பங்கப்படுத்த முனைந்தது தெரியவில்லை. பேராசை ஒரு பெரும் போதையென்றுல், போதையில் மூழ்கிய சோழனுக்கு, தாய்க்கும், கணிகைக்கும் வித்தியாசம் தெரியாததில் ஆச்சரியமில்லை. சுயநலத்திற்காக மனிதன் எதையும் செய்யத் துணிந்து விடுகிறுன். சோழன் மட்டும்

ஞால மன்னன்!

காவேரிக் கவிராயர்.

ஷேக்ஸ்பியர் அமுதச் செல்வன்!
சிந்தனைக் கலையின் மின்னல்!
தேக்கிய ஓர் மனிதப் பண்பின்
சீரெலாம் காட்டும் சிற்பி!
தூக்கிய மலைவி ளக்காய்
துறைதோறும் ஆடும் பாணன்!
பாற்கடல் அலைகளைப் போல்
பாராளும் ஞால மன்னன்!

மனித இனத்திற்கு மாறுபட்ட வனு?

அக்கினிமித்திரரோடு போட்டியிட்டால், தோல்வி கண்ட பிறகு, வடநாட்டுக்குத் திறை செலுத்த நேருமே என்ற அவமானத்திற் கஞ்சி, பல குறுநில மன்னர்களின் இசைப் புலவர்கள் மௌனம் சாதித்துவிட்டனர்.

கொலு மண்டபமே கொஞ்ச நேரம் அமைதியிலாழ்ந்திருந்தது.

"அக்கினிமித்திரரை எதிர்க்க இந்த அவையில் யாருமே இல்லையா?"—சோழன் வேகமாகவே கேட்டான், வெற்றி கிடைக்கும் என்ற நிச்சயத்தில்!

கொலு மண்டபத்தில் ஒரே முணு முணுப்பு எழுந்து, மீண்டும் அமைதி யேற்பட்டது. சோழன் அதே கேள்வியை மீண்டும் கேட்டான். இம்முறை சாரங்கன் கம்பீரமாகவும், அலட்சிய சிரிப்போடு, எழுந்து நின்று:

"நானிருக்கிறேன் சோழ மன்னு, இதோ நானிருக்கிறேன்! கலையில் தாழ்ந்தது கன்னித்தமிழ மன்று; இந்தப் புவனத்திற்கே கலை வழங்கியது இப் புண்ய பூமியென்ருல், இரவலில் வளர்ந்த வடக்கு இசைக்கு என்றுமே தலை வணங்காது நம்—இல்லை, எங்கள் தமிழகம்! 'நம்' என்று சொல்லுவதற்கே நாவு கூசுகிறது மன்னு! காரணம், சோழ மன்னர் தன் சொந்தத் தாயைத் துயிலுறிக்கப் பார்க்கிருர். எனவேதான்!" என்று தைரியத்தின் கரங்களிலே தவழ்ந்து கூறினுன்.

சாரங்கனைக் கண்ட எல்லோருக்குமே திகைப்பு ஏற்பட்டது. பாண்டிய பூமி போட்டியிடத் தகுந்ததே என்று பலர் முணு முணுத்தார்கள். சூர்யகாந்தன் பூரித்துப் புன்னகைத்து சாருமதியை நோக்கினுன். ருத்ரசேனன் இன்னும் அதிகமாக மகிழ்ந்தான். அதே நேரத்தில், 'வேலியே பயிரை மேயப்போகிறது' என்றும் முணு முணுத்துக் கொண்டான்.

தரங்கிணி சந்தோஷம் தாளம் தன் கரங்களைப் பிசைந்துகொண்டாள். சாரங்கனின் அந்தச் சூடான சொற்கள் சோழனைக் கோபத்தில் குதிக்கச் செய்தது.

"கலைஞனே! இசைப் போட்டிக்கு வந்தாயேயொழிய வார்த்தைப் போட்டிக்கல்ல! கலை பொதுவானது. இதில் இனபேதம் பார்ப்பது சரியில்லை. எனவே, போட்டியில் கலந்து தாயின் பெருமையை நிலை நிறுத்துப் பார்ப்போம்!" என்று கூறிய சோழன், கொலு மண்டபத்தை நோக்கி, "பாண்டிய நாடு போட்டியில் கலந்துகொண்டு, போட்டியிட முன் வந்ததை எண்ணி மகிழ்கிறேன். இந்த நல்ல நேரத்தில், போட்டியின் நிபந்தனையைக் கூற ஆசைப்படுகிறேன். சேன நாட்டு இசைக் களஞ்சியம் அக்கினிமித்திரருடன், பாண்டி தந்த கலை புதையல் ஆதிச்சதேவரின் மாணவன் சாரங்கன் போட்டியிட முன் வந்தாய் விட்டது."

இந்த நேரத்தில் "சாரங்கன்" என்ற சொல் கேட்டு, அக்கினிமித்திரரும், கேசவசேனனும் சிறிது நேரம் திகைத்து விட்டார்கள். பிறகு 'வெறும் பிரமை' என்ற முடிவிற்கு வந்து, விழாவில் கண்ணோட்டம் செலுத்தினுர்கள். இவைகளை ருத்ரசேனன் கவனிக்கவில்லை.

சோழன் நிபந்தனையைத் தொடர்ந்தான்.

"முதலில் சாரங்கன் தன் இசை வன்மையைக் காட்டவேண்டும். அதன் பிறகே, அக்கினிமித்திரர் தன் புலமையைக் காட்ட முனே வார். இவ்விரு தரத்துப் போட்டிக்கும் ஏற்படுத்திய நிபந்தனே என்ன வென்ருல், அதோ, இருக்கும் அந்தப் பெட்டியில் முற்றிய கரு நாகம் ஒன்றுள்ளது. முதலில் பாடுபவர், பாட்டைத் துவக்கியதும், பெட்டியைத் திறக்கப்படும். பெட்டியிலுள்ள நாகம் பாட்டில் மயங்கி பெட்டியுள் பதுங்கி மயங்க வேண்டும். அப்படி மயங்கத் தவறினல், போட்டியில் தோற்றதாக முடிவு."

"இதன் பிறகு சேன நாட்டு இசைப் புலவர் மயக்குவாரா?"—இது அவையிலிருந்த ருத்ரசேனனின் கேள்வி.

"மயக்கலாம்!" ஒரே வார்த்தையில் சோழன் பதில் சொன்னுஸ்.

சூர்யகாந்தனுக்கு ஆத்திரம் பொங்கியெழுந்தது. அவன் கண்கள் கனற்பொறிகளேக் கக்கின. சோழ மன்னன் முன் பாய்ந்து வந்து நின்ருன்.

சூர்யகாந்தன் கோபாவேசத்தைக் கண்ட சாரங்கன், அவனேத் தடுத்து, சோழனே நோக்கி, "மன்னவா! 'ஆம்' போட்டு பேசுவதில் அவ்வளவு சரியில்லே. முதலில் அக்கினிமித்திரரையே பாடச் சொல்லுங்கள் பிறகு நான் பாடுகிறேன்" என்ருன்.

சோழ மன்னனும் "அது முடியாது" என்று பதட்டமாகக் கூறி விட்டான். சூர்யகாந்தனின் பொறுமை எல்லேயை மீறிவிட்டது.

"சோழ மன்ன! அறிவு காலத்திற்கு அஸ்திவாரம் போடத்தான் இந்தச் சூழ்ச்சியைக் கையாண்டிருக்கிருய். இல்லே என்ருல், இப்படி, பொருந்தாத கலே விழா, அதற்கொரு போட்டி! பாண்டிய பூமி தூங்குவதாக எண்ணிவிடாதீர் சோழ மன்ன! கரு நாகத்தைப் பாட்டின் மூலம் அடக்கலாம் என்று எங்காகிலும் நூலில் படித்திருப்பீர். செயல் முறையில் ஆகாயத்தாரை! செயல் முறையில் நடத்த முடியும் என்ருல், முதலில், என் நண்பன் சாரங்கனின் வேண்டுதலேப் போல் அக்கினிமித்திரரையே சொல்லுங்கள்!" என்று கர்ஜித்தான் சூர்யகாந்தன்.

சோழனுக்கு ஆத்திரம் அளவு கடந்து போய் விட்டது. "நிறுத்து உன் பேச்சை! நண்பனுக்காக பரிந்து பேச இது நடு வீதியல்ல. கொலு மண்டபம். கொக்கரிக்கும் நீயோ, ஒரு சாதாரண சேவகன். நாவை இன்னும் நீட்டினல், நான் பாண்டிய நாட்டுக்குத் தந்து வரும் மரியாதைப் பறிபோகும்!" என்று சினந்து கூறினன் சோழன்.

சூர்யகாந்தன் கண்கள் பாண்டி தேவனே நோக்கின. சுந்தர பாண்டியன் முகத்தில் ஈயாட மறுத்தது. பாண்டிய மன்னருக்கு அவமானத்தைத் தன் படபடத்த வார்த்தைகளால் உண்டு பண்ணி விட்டான். சோழன் என்றுணர்ந்த சூர்யகாந்தன், வாளே உருவிக் கொண்டு நாகமுள்ள பெட்டியைத் திறந்து சீறி வந்த நாகத்தைக் கண்டதுண்டங்களாக்கினன். அவையில் ஒரே கலவரம் நிகழ்ந்து விட்டது. ருத்ரசேனனும் வாளே உருவிக் கொண்டு, சூர்யகாந்தன் பக்கலில் வந்து நின்ருன்.

இதுதான் சமயம் என்றெண்ணி எதிர்பார்த்திருந்த கேசவசேனன்,

சோழ நாட்டைச் சூறையாட; தன் படைகளை ஏவினான்.

பாண்டியப் படைகள் சோழ நாட்டுள் புகுந்தன. முப்பெரும் நாடுகளும் முடியாசைக்காக, மூச்சைப் பணயம் வைத்துப் போரிடத் துணிந்தன. பாண்டிய ரத்தத்தில் நெருப்பின் ஜுவாலை வீசத் தொடங்கியது.

நாற்படைகளுடன், முன்னெச்சரிக்கையாகவே வந்திருந்த பாண்டிய நாடு, முன்னேறிக் கொண்டிருந்தது. எங்கும் வாட்களின் ஒலி வானைப் பிளந்தது. சோழப் பூமி ரணகளமாகக் காட்சியளித்தது. சோழ நாடும், சேன நாடும் சோர்ந்து விட்டன. எங்கும் பாண்டிய வீரர்களின் வெற்றி முழக்கம் ஒலிக்கத் தொடங்கியது.

பாண்டிய மன்னர் சுந்தர பாண்டியன், கோபத்தின் காரணமாக சோழ நாட்டுப் பெரும் பெரும் மாளிகைகளை இடித்தெறிய உத்திரவிட்டான். ஏன் அரண்மனையின் பல பாகங்களையும் இடித்து நொறுக்கினான்.

சிற்சில இடங்கள் தீக்கிரையாகின. சோபையோடு விளங்கிய சோழ நாடு சோர்விழந்தது, சோற்றுத் துருத்திகள் இருவரின் தூண்டுதலில்!

முடிவாக நின்றது, சோழ நாட்டில் ஒரே மண்டபம். ஆம். அது, கடியலூர் உருத்திரங்கண்ணார் எழுதிய பட்டினப்பாலைக்காக, சோழப் பெருந்தகையால் பரிசாக வழங்கப்பட்டது. எனவே, மன்னர் சுந்தர பாண்டியன் சங்கத் தமிழ் வளர்த்த உருத்திரங்கண்ணனுக்கு மரியாதைக் காட்ட, இடிக்காமல் விட்டு விட்டான்.

சேன நாடு, வீரர்களை இழந்த காரணத்தால், இனியும் தங்கினால் ஆபத்து என்றெண்ணி புறமுதுகு காட்டி ஓடத் தொடங்கியது. எங்கும் வீசிக்கொண்டிருந்த நெருப்பின் ஜுவாலையும் அடங்கியது.

வெற்றி முழக்கத்தோடு, பாண்டி தேவர் கோட்டை அரணுள் புகுந்தார். அவரைப் பின் தொடர்ந்து, சூர்யகாந்தனும், ருத்ரசேனனும் சென்றார்கள்.

அரணுள் சோழ மன்னன் இராஜராஜன் கைது செய்யப்பட்டிருந்தான். அவன் பக்கத்தில் அழுத கண்ணீரோடு சாருமதி நின்றுகொண்டிருந்தாள்.

வெற்றியின் காரணமாக, குறுநகையோடு, பாண்டி மன்னர் சுந்தர பாண்டியன் ஆசனத்திலமர்ந்தார். வெற்றி அபிடேகத்திற்குரிய பொருட்கள் கொண்டு வரப்பட்டன. சோழன் இராஜராஜன் நாணத்தால் தலைகுனிந்திருந்தான்.

சோழ மன்னனை நோக்கிய, சூர்யகாந்தன், “மாஜி மன்னரே! மமதை எப்போது வரவேண்டும்; எதற்காக வரவேண்டும்; எவன் பொருட்டு வரவேண்டும் என்பதை ஏனோ மறந்து, சூழ்ச்சிக்குச் சுவரெழுப்ப முனைந்தீர், சேனனின் துணைகொண்டு. பார்த்தீரா நிலைமை எந்த முடிவுக்குக்கொண்டு வந்து விட்டதென்று! என்னைக் கேட்டீரே...யார் நீ என்று. நான் சாதாரண சேவகன்; அப்படித்தானே உம் தீர்மானம்? பரிதாபத்திற்குரிய மன்னா! பார் அங்கே!” என்று சொல்லி முடித்ததும், எல்லோர் கண்களும் வாசற்படியை நோக்கின. இரண்டு பாண்டிய நாட்டு வீரர்கள் வாமதேயரையும்,

உ ரு ... க்து
செய் ...
பா ... டிய
னுக்கு ... ரிய
வில்லே.

வாமதே ... ர்ய
காந்தன், ம ... க்கி,
“இதோ இரு ... ள்ள
நரியைக் கே ... அது
சொல்லும் நா ... று”
என்று கூறியபடி ... மாறு
வேடத்தைக் கலேத்தா ...

வாமதேயர் உருவிலிருந்த விழுப்பரையர், தன்னேயுமறந்து “இளவரசன் குலசேகரன்” என்று முணுமுணுத்தார்.

இளவரசன் குலசேகரன் என்றதும், தொலேவிலிருந்த சாருமதி ஆச்சரியக் கண்களோடு நோக்கினுள். குலசேகரனும் சிரித்த முகத்தோடு, சாருமதியை நோக்கினுன். அவன் வாய் தைரியமாகவே, தந்தையிருப்பதையும் மறந்து, “சாருமதி! உன்னுல்தான் சோழ நாடு மீள்கிறது. இதோ இருக்கும் இந்தக் குள்ள நரிகளுக்கு நீயே தீர்ப்புக் கூறு” என்று கூறிவிட்டு, விழுப்பரையரை நாடி, “என்ன விழுப்பரையரே! சௌக்கியம் தானு?” என்றுன் குறும்பாக.

‘விழுப்பரையர்’ என்றதும் பாண்டிய மன்னனும், ஆதிச்சதேவரும் வியப்புக் கண்களோடு நோக்கினர்.

சோழன் இராஜராஜன், கண்ணீர் உகுத்தவனுய், குலசேகரனே நோக்கி, “குலசேகரா! நீ என் மருமகனுய் வாய்ப்பாய் என்று தெரிந்தால், நான் சோழ பூமியை அநியாயமாகச் சோகத்தில் ஆழ்த்திருக்கமாட்டேன்” என்று கூறி முடித்ததும், ஒரு சேவகன் ஓடோடி வந்தான். மன்னர் சுந்தர பாண்டியனே வணங்கிய சேவகன், “மன்னர்க்கு மன்னவா! சேன நாட்டு மன்னன், தனதாட்களே ஏவி, நம் சாரங்கனேயும், தரங்கிணியையும் கடத்திச் சென்று விட்டார்கள்” என்றுன் துடி துடித்தனுய்.

சேவகன் கூறிய சொற்கள் எல்லோரையுமே நடுங்கவைத்துவிட்டது ருத்ரசேனன் மூர்ச்சையாகி விழுந்தான். மறுகணம் இளவரசன் குலசேகரன் “சாரங்கா! என், நண்பா!” என்று கதறினுன். தந்தையை ஆவேசத்தோடு நோக்கினுன். “தந்தையே! இன்றே படைகளுடன் சேன நாடு செல்லவேண்டும்” என்றுன் உதடுகள் நடுங்கியவனுய். சோழனும் உளம் துடித்து மிகுதியுள்ள தன் படைகளே அனுப்ப ஒப்புக்கொண்டான்.

வாமதேயரையும், உருத்திரப் பட்டரையும் சிறையிலமைக்க உத்திரவிட்டு, சேன நாட்டை நோக்கிப் படைதிரட்டிச் செல்ல ஆயத்தமானுன் இளவரசன் குலசேகரன்.

[அடுத்த இதழில் முடியும்]

லாபகரமான சேவை

மார்ச்மாதம் முடிய ஓராண்டு காலத்தில் பிரிட்டிஷ் ஐரோப்பிய விமானக் கம்பெனி சிறப்பாகவும் லாபகரமாகவும் வேலே செய்திருக்கிறது என்று அதன் தலேவர் திரு. பீட்டர் மேஸ்ஃபீல்ட் கூறுகிறுர். முந்திய ஆண்டைவிட நடப்பு ஆண்டில் 14 சதம் வருமான உயர்வும் 18 சதம் வியாபார உயர்வும் ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த விமானங்களில் 1,850,000 பேர்கள் பிரயாணம் செய்தனர்.

மறைந்த மா

திரு. ஞானை

★

வடக்கன்குளத்தின் வள்ளல திகழ்ந்த
வைத்தியரின் முடி சாய்ந்தது

நேர்மையின் சின்னமாகவும், தன்னலமற்றவராகவும், யாவருடனும் ஏற்றத் தாழ்வின்றி இங்கிதமாகப் பழகும் அன்புள்ளம் படைத்தவராகவும், பரோபகாரச் சிந்தையுடன் பெரு வாழ்வு வாழ்ந்த வடக்கன்குளம் வைத்தியர் **திரு. ஞானையா** அவர்கள் சென்ற **11—4—55**-ல் இயற்கை எய்தினார். இவர் **வடக்கன்குளம் நாடார் மகாஜன சங்கத்தில்** முன்னாள் தலைவராகயிருந்து மக்களுக்குப் பல நன்மைகள் புரிந்தவர். மகாஜன சங்கத்தை மத சார்பற்ற ஸ்தாபனமாகநிறுவி பதிவுசெய்தபெருமை இவருக்கே சாரும். வடக்கன்குளத்தில் மங்காது ஒளி வீசி பிரகாசித்துக்கொண்டிருக்கும் **நேரு தேசீய உயர்தரப் பாடசாலையின்** வளர்ச்சியைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வளர்த்து, சங்கத்தோடு இணைத்து, மதசார்பற்ற கல்வி நிலையமாக்கியவர் இவரே. தங்கள் நலவுரிமைகளுக்காக மக்கள் போராடியபோது, கல்மனம் படைத்த பாதிரிகளால் உபயோகிக்கப்பட்ட **'கண்ணீர்ப் புகை'** குண்டுகளுக்குத் தமது இரு மருமக்களையும் பலிகொடுத்து ஜெயிலுக்கு மகிழ்ச்சியோடு அனுப்பிய மாபெரும் தியாகி. நேரு பாடசாலையின் வளர்ச்சியே தமது லட்சியம் என மனதிற் கொண்ட மாணிக்கம் இன்று நம்மை விட்டு மறைந்து விட்டது. பொதுநலப் பணியே தமது சேவையாகக் கொண்ட வைத்தியர் ஞானையாவின் பிரிவாற்றாமையைத் தாங்காது துயரக் கடலில் ஆழ்ந்திருக்கும் பொது மக்களுக்கும் அன்னாரின் குடும்பத்திற்குப் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உரிமையாளர்கள் கலைமன்றம்.

KALAIMANRAM Regd. No. M. 6408

தென்னாட்டில் பவனி வரும் தித்திக்கும் திரைக் காவியம்!

கலை அரங்கம்

'மே' மாத இதழில்...

திரைப்பட ரசிகர்களுக்குத் திகட்டாத கலை விருந்து !!

- 'என் வாழ்வில் புதுப் பாடம்!'—தன்வாழ்க்கையில் அடைந்த அனுபவத்தை, ஒரு புதுப்பாடமாகக் கருதி எழுதுகிறார். பிரபல சங்கீத டைரக்டர் ஒருவர்!
- 'டப்பா' சங்கீதம்!' 'மாதவி' தரும கட்டுரைக் கரும்பு.
- 'கார் சொல்லும் கதை!'—இப்பகுதி, ஒரு நட்சத்திரத்தின் கார் அனுபவத்தைக் கதையாகக் காட்டுகிறது!
- 'ஒரு சிட்டிகை'—துண்டுச் சேகரங்கள்.
- 'மார்லன் பிராண்டோ'—இவ்வாண்டு 'ஆஸ்கார்' பரிசு பெற்ற இந்த நடிகரைப் பற்றிய வாழ்க்கைச் சரிதம்.
- 'திரைப் படவசனம்'
- 'டேய், நில்! மடியில் என்ன இருக்கு?"—ஒரு நடிகர் வாழ்க்கையில் நடந்த மிகப்பயங்கரச் சம்பவம்.
- 'வால்ட் டிஸ்னியின் விசித்திரங்கள்!'
- 'பேசும் தெய்வம்'
- 'விமர்சனம்'—'பெண்ணரசி' 'போர்ட்டர் கந்தன' 'கிருஹலட்சுமி' 'இஜிப்ஷியன்' 'சப்ரீனா.'
- இன்னும், 'இதோ ஒரு ஸ்டுடியோ' நேரில் கண்டவை' 'நீங்களும் கேட்கலாம்!' 'உதிர்ந்த வார்த்தைகள்' 'உருவாகும் படங்கள்' 'பம்பாய் அழைக்கிறது!' 'ஹாலிவுட் டைரி போன்ற பகுதிகளுடன், புதுப்புது கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இது மட்டுமா, பக்கத்திற்குப் பக்கம் கண்களைப் பறிக்கும் படங்களுடன் பவனிவருகிறது.

அதிகப் பிரதிகள் தேவையான ஏஜெண்டுகள் உடன் எழுதுக.

விபரங்கட்கு;

கலை அரங்கம்

தா. பெ. எண் 275. சென்னை - 1.

Printed and Published by S. Francis, at Srimagal Press, 122. Varadamuthiappan St., Madras-1 Editor Palvannan.